بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ
وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 8

இதழ் 5-6

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1444-ரஜப் 10-17, ★ ஹிஜ்ரி ஷம்ஸி-1402, தப்லீக் 02-09 ★ பிப்ரவரி 02-09 2023

## அல்லாஹ்வின் கட்டளை

هُوَ الَّذِیۡۤ اَرۡسَلَ رَسُوۡلَہٗ بِالۡہُدٰی وَدِیۡنِ الۡحَقِّ لِیُظۡہِرَہٗ عَلَی الدِّیۡنِ کُلِّہٖ وَلَوۡ کَرِہَ الۡمُشۡرِکُوۡنَ ۠

**பொருள் :**

அவனே தனது தூதரை நேர்வழியுடனும், உண்மையான மார்க்கத்துடனும் இதனை அவன் எல்லா மார்க்கத்தின் மீதும் வெற்றி பெறச் செய்வதற்காக அனுப்பினான். (இறைவனுக்கு) இணை வைப்பவர்கள் (இதனை) எந்த அளவு வெறுத்தாலும் சரியே. (அஸ்ஸஃப் : 10)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

# வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி குறித்த முன்னறிவிப்பின் வாசகங்கள்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

بِاِلۡہَامِ اللّٰہِ تَعَالٰی وَاِعۡلَامِہٖ عَزَّوَجَلَّ மீண்டும், மீண்டும் கருணை காட்டுபவனும், மேன்மை மிக்கவனும், மகத்துவமிக்கவனும், உயர்ந்தவனுமான இறைவன், தான் விரும்பிய அனைத்தையும் செய்யும் வல்லமையுள்ளவன். جَلَّ شَانُہٗ وَعَزَّ اِسۡمُہٗ (அவனுக்குப் புகழும், அவனுடைய பெயருக்கு மேன்மையும் உண்டாவதாக) ஓர் இறை வெளிப்பாட்டில் என்னிடம் உரைத்து " நான் உமக்கு ஓர் அடையாளத்தை வழங்குகிறேன் " என்று கூறிய முதல் தீர்க்கதரிசனம் என்னவென்றால்,

"நீர் என்னிடம் கேட்டதற்கிணங்க ஒரு கருணையின் அடையாளத்தை நான் உமக்கு தருகின்றேன். நான் உம்முடைய மன்றாடல்களைக் கேட்டேன். மேலும் உமது துஆக்களுக்கு எனது கருணையினால் அவை ஒப்புக் கொள்ளப்படுவதற்கான தகுதியை வழங்கினேன். ஹோஷியார்பூர் மற்றும் லூதியானாவிற்கு நீர் மேற்கொண்ட உமது பயணத்தை உமக்கு அருளுக்குரியதாக ஆக்கிவிட்டேன். எனவே, உமக்கு இறைவனின் வல்லமை, கருணை, நெருக்கம் ஆகியவற்றின் அடையாளம் கொடுக்கப்படுகின்றது. அருள் மற்றும் பேருபகாரத்தின் அடையாளம் உமக்கு வழங்கப்படுகிறது. மேலும் வெற்றியின் திறவுகோல் உமக்கு கிடைக்கின்றது. வெற்றியாளரே! உம் மீது சாந்தியும், சமாதானமும் உண்டாகட்டுமாக!

இறைவன் இதை கூறினான்: இதன் மூலம் வாழ்வை விரும்புபவர்கள் மரணத்தின் பிடியிலிருந்து இரட்சிப்புப் பெற வேண்டும். கல்லறையில் புதைந்து கிடப்பவர்கள் வெளியில் வர வேண்டும். இதன் மூலம் இஸ்லாமிய மார்க்கத்தின் சிறப்பும், இறைவனின் வார்த்தையின் உயர் தகுதியும் மக்கள் மீது வெளிப்பட வேண்டும். இதன் மூலம் உண்மை இதன் அனைத்து பரக்கத்துகளுடன் வர வேண்டும். மேலும், பொய் தனது அனைத்து தீய சகுனங்களுடன் ஓடி விட வேண்டும். மேலும் இதன் மூலம் நான் வல்லமையுள்ளவன்; எதனை விரும்புகின்றேனோ அதனை செய்பவன் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். எவர்களுக்கு இறைவனின் இருப்பின் மீது நம்பிக்கை இல்லையோ, மேலும் இறைவனையும், இறைவனின் மார்க்கத்தையும், இறைத் தூதர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களையும் எவர்கள் நிராகரிப்பு மற்றும் பொய்ப்படுத்துதல் என்ற பார்வையுடன் பார்க்கின்றார்களோ அவர்களுக்கு ஒரு தெளிவான அடையாளம் கிடைக்க வேண்டும். குற்றவாளிகளின் திட்டமும் வெளிப்பட வேண்டும்.

ஆக, உமக்கு நற்செய்தி வழங்கப்படுகிறது. ஓர் அழகான தூய மகன் உமக்கு வழங்கப்படுவார். ஒரு தூய புதல்வர் உமக்கு கிடைப்பார். அந்தப் புதல்வன் உமது வித்திலிந்து தோன்றியவராகவும், உமது சந்ததி மற்றும் வம்சத்தைச் சார்ந்தவராகவும் இருப்பார். அழகிய தூய மகன் உமது விருந்தாளியாக வருகின்றார். அவரது பெயர் இம்மானுவேல் மற்றும் பஷீராகவும் இருக்கின்றது. அவருக்கு பரிசுத்த ஆவி வழங்கப்பட்டுள்ளது. அவர் உட்புற அசுத்தத்திலிருந்தும் தூய்மை அடைந்தவராவார். அவர் அல்லாஹ்வின் ஒளி ஆவார். விண்ணிலிருந்து வருகின்ற அவர் அருளுக்குரியவர் ஆவார். அவருடன் அருள் உள்ளது. அந்த அருள் அவருடன் சேர்ந்து வரும். அவர் ஆற்றல் உடையவராகவும், மகத்துவ மிக்கவராகவும், செல்வம் படைத்தவராகவும் இருப்பார்.

அவர் உலகத்திற்கு வருவார். தமது குணப்படுத்தும் தன்மையாலும், உண்மையான ஆன்மாவின் பரக்கத்தாலும் பலரையும் நோய்களிலிருந்து குணப்படுத்துவார். அவர் அல்லாஹ்வின் வார்த்தையாவார். ஏனெனில், இறைவனின் கருணையும், அவனது தன்மான உணர்வும் அவரை மகத்துவமிக்க வார்த்தைகளுடன் அனுப்பி இருக்கின்றது. அவர் மிகுந்த புத்திக் கூர்மை உள்ளவராகவும், சிந்தித்துச் செயல்படும் ஆற்றல் மிக்கவராகவும் இருப்பார். மென்மையான உள்ளம் கொண்டவராகவும் இருப்பார். பௌதீக மற்றும் ஆன்மீக ஞானங்களால் அவர் நிரப்பப்படுவார். அவர் மூன்றை நான்காக்குபவர் ஆவார். (இதன் பொருள் புரியவில்லை) திங்கட்கிழமை, அருளுக்குரிய திங்கட்கிழமை. உமது நேசத்திற்குரிய அப்புதல்வர் மதிப்பிற்கும், மேன்மைக்கும் உரியவர் ஆவார். அவர் நற்பேறு கொண்டவர். مَظۡہَرُ الۡاَوَّلِ وَالۡاٰخِرِ (அவரிடமிருந்து முதலும், இறுதியும் வெளிப்படும்). مَظۡہَرُ الۡحَقِّ وَالۡعَلَاءِ (அவரிடமிருந்து உண்மையும், உயர்வும் வெளிப்படும்) کَاَنَّ اللّٰہَ نَزَلَ مِنَ السَّمَاءِ (இறைவனே விணணிலிருந்து இறங்கி வந்ததைப் போன்று இருக்கும்).

அவரது வருகை அருளுக்குரியதாக இருக்கும். அது இறைவனின் கம்பீரம் வெளிப்படுவதற்குக் காரணியாக இருக்கும். ஒளி வருகின்றது. அதனை இறைவன் தனது திருப்தியின் நறுமணம் கமழும்படி செய்வான். நாம் எமது ஆவியை அவர் மீது இடுவோம். இறைவனது நிழல் அவரது தலைமேல் இருக்கும். அவர் விரைவாக வளர்வார். கைதிகளின் விடுதலைக்குக் காரணமாக இருப்பார். பூமியின் எல்லை வரை அவரது புகழ் பரவும். சமுதாயங்கள் அவரிடமிருந்து அருட்களைப் பெறும். அப்போது தனது இறுதி நோக்கத்தை நிறைவு செய்தவாறு அவர் வானத்தின் பக்கம் உயர்த்தப்படுவார். وَکَانَ اَمۡرًا مَّقۡضِیًّا (இது விதிக்கப்பட்ட ஒன்றாகும்.)

(மஜ்மூஆஃ இஷ்திஹாராத், தொகுதி 1, பக்கம் 100, இஷ்திஹார், 20 பிப்ரவரி 1886)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

## தலையங்கம்

### வஸிய்யத்தின் முக்கியத்துவமும், அருட்களும் ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மேற்கோள்களின் ஒளியில்

ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் சிறப்புக் கட்டளைக்கேற்ப 1905 ஆம் ஆண்டில் வஸிய்யத் அமைப்பிற்கான அடித்தளத்தை அமைத்தார்கள். அன்னார் (அலை) அல் வஸிய்யத் எனும் நூலை எழுதியபோது இந்த அடித்தளம் அமைக்கப்பட்டது. அன்னார் (அலை) இறைக் கட்டளையால், ஜமாத்தைச் சேர்ந்த நன் மக்கள், தூயவர்கள் மற்றும் இறையச்சம் கொண்ட அடியார்களின் இறுதி ஓய்விடமாக ஒரு கபருஸ்தானை உருவாக்கினார்கள். மேலும் அதில் நல்லடக்கம் செய்யப்படுவதற்கு இந்த நிபந்தனைகளை விதித்தார்கள். அதாவது, அந்த நபர் தமது வருமானத்தில் பத்தில் ஒரு பங்கை இஸ்லாத்தின் பிரச்சாரத்திற்காகவும், வெளியீட்டிற்காகவும் ஜமாஅத்திற்கு (சந்தாவாக) கொடுக்க வேண்டும். மேலும், மரணித்த பிறகு தனது மொத்த சொத்துகளில் அவை சிறிதாக இருந்தாலும் அல்லது அதிகமாக இருந்தாலும் சரி; பத்தில் ஒரு பங்கை வஸிய்யத் செய்ய வேண்டும். அந்த கபருஸ்தானிற்கு அல்லாஹ் “பெஹஷ்தி மக்பரா” எனப் பெயர் சூட்டியுள்ளான்.

பெஹஷ்தி மக்பராவில் நல்லடக்கம் செய்யப்படுவதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மேற்கண்ட விதிமுறைகளை வகுத்தார்கள். இது எப்படிப்பட்ட பெரும் தியாகம் என்றால், இஸ்லாத்திற்காக இவ்வளவு பெரும் தியாகம் செய்யக்கூடியவர் நிச்சயமாக சொர்க்கவாசியாக இருப்பார் என நாம் நம்புகின்றோம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த கபருஸ்தான் மற்றும் அதில் நல்லடக்கம் செய்யப்படக் கூடியவர்களுக்காவும் அதிகமாக துஆக்கள் செய்துள்ளார்கள். அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

நான் துஆ செய்கின்றேன்: இறைவன் இதில் அருள் புரிவானாக! மேலும், இதனையே பெஹஷ்தி மக்பரா (சுவர்க்கத்திற்குரியவர்களின் கல்லறை) ஆக ஆக்குவானாக! உண்மையிலேயே உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கி உலகின் நேசத்தை விட்டுவிட்டு தங்களை இறைவனுக்காக ஆக்கிக் கொண்டு தங்களிடத்தில் தூய்மையான மாறுதலை உருவாக்கி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஸஹாபிகளைப் போன்று நன்றியுணர்வு, உண்மை ஆகியவற்றின் முன்மாதிரியை காட்டிய இந்த ஜமாஅத்தைச் சேர்ந்த தூய உள்ளம் கொண்ட மக்கள் இறுதியாக ஓய்வெடுக்கும் இடமாக அது இருக்கட்டுமாக! என்று நான் இறைவனிடம் துஆ செய்கின்றேன். ஆமீன்! யா ரப்பல் ஆலமீன்!

மீண்டும் நான் துஆ செய்கின்றேன். வல்லமை மிக்க என் இறைவா! தங்கள் பணிகளில் உலக நோக்கங்களை கலக்காதவர்களாகவும், உண்மையிலேயே உனக்காக ஆகிவிட்ட என் ஜமாஅத்தைச் சேர்ந்த அந்த தூய உள்ளங்களின் கல்லறையாக இதனை ஆக்குவாயாக! ஆமீன்! யா ரப்பல் ஆலமீன்!

மீண்டும் நான் மூன்றாம் முறை துஆ செய்கின்றேன். வல்லமை மிக்க, கருணை மிக்க என் இறைவா! அதிகமாக மன்னிக்கின்ற, மீண்டும் மீண்டும் கருணை காட்டும் இறைவா! உன்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த தூதுர் மீது உண்மையான நம்பிக்கை வைத்து எவ்வித வஞ்சகமும், சுயநலமும், தப்பெண்ணமும் தங்களிடத்தில் இல்லாமல் நம்பிக்கை மற்றும் கட்டுப்படுதலின் உரிமையை முழுமையாக நிறைவேற்றுபவர்களாகவும் உனக்காக உனது வழியில் தமது உயிரை அர்ப்பணித்தவர்களாக இருப்பவர்களுக்கும், எவர்களிடத்தில் நீ திருப்தியடைந்து அவர்கள் முற்றிலும் உனது அன்பில் தங்களையே இழந்து, உனது தூதரிடத்தில் உளப்பூர்வமான நம்பிக்கையுடனும் முழுமையான மரியாதையுடனும் அன்புடனும் அத்தூதருக்காக அனைத்தையும் அர்ப்பணிக்கும் அளவில் தங்களது தொடர்பை நிலைநாட்டியுள்ளனர் என எவர்களைப் பற்றி உனக்கு தெரியுமோ அப்படிப்பட்ட மக்களுக்கு இந்த கபருஸ்தானில் இடம் அளிப்பாயாக! ஆமீன்! யா ரப்பல் ஆலமீன்! (அல் வஸிய்யத், பக்கம்- 29- 31)

கிலாஃபத் ஜூப்லி நூற்றாண்டான 2008 ஆம் ஆண்டிற்குள் ஜமாஅத்தில் சம்பாதிக்கக்கூடிய நபர்களின் பாதி பேர் வஸிய்யத் அமைப்பில் இணைந்து விட வேண்டும் என்று ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 2004 ஆம் ஆண்டு தமது விருப்பத்தை வெளிப்படுத்தி இருந்தார்கள். ஆனால், வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், ஹுஸுர் அன்வர் அவர்களின் இந்த விருப்பத்தை நம்மால் இதுவரை நிறைவேற்ற முடியவில்லை. நாம் வெகு விரைவாக வஸிய்யத் எனும் இந்த அருளுக்குரிய அமைப்பில் இணைந்து நமது இவ்வுலக மற்றும் மறுமை வாழ்வை சீர் செய்து கொள்ளக்கூடியவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக! வஸிய்யத் அமைப்பைக் குறித்த ஸய்யிதுனா ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் சில மேற்கோள்கள் கீழே வழங்கப்படுகின்றன.

### ஈமான் முழுமையடைவதற்கான அளவுகோல் வஸிய்யத் ஆகும்

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) கூறுகின்றார்கள்:

வஸிய்யத்தின் முக்கியத்துவத்தை ஜமாஅத் மக்களுக்கு எடுத்துக் கூறவேண்டும். மேலும், இது இறைவனால் ஏற்படுத்தப்பட்ட வழிமுறையாகும் என்றும் அவர்களுக்கு கூற வேண்டும். அவ்வாறு செய்தால், இதுவரை இதன் பக்கம் கவனம் ஏற்படாத ஆயிரக்கணக்கான நபர்கள் வஸிய்யத்தின் மூலமாக தமது ஈமானை முழுமைப்படுத்திக் காட்டுவார்கள் என நான் கருதுகிறேன்..........

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ


## பதர் வார இதழ் - காதியான்
## சிறப்பிதழ் : முஸ்லிஹ் மவூத்


## இந்த இதழில்


| | இந்த இதழில் | பக்கம் |
|---|---|---|
| 1 | முஸ்லிஹ் மவ்வூத் முன்னறிவிப்பின் வாசகங்கள் | 1 |
| 2 | தலையங்கம் | 2 |
| 3 | ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் ஜுமுஆ பேருரை (டிசம்பர் 30, 2023) | 4 |
| 4 | முஸ்லிஹ் மவ்வூத் முன்னறிவிப்பின் பின்னணி, முக்கியத்தும் மற்றும் உண்மைத்துவம் | 13 |
| 5 | ஷூத்தீ இயக்கமும், முஸ்லிஹ் மவ்வூத் முன்னறிவிப்புடன் அதற்கு உள்ள ஒரு சிறப்பான தொடர்பும் | 15 |
| 6 | ஸய்யிதுனா முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கு இறைவனால் வழங்கப்பட்ட திருக்குர்ஆன் ஞானம் மற்றும் அன்னார் திருக்குர்ஆனிற்கு ஆற்றிய தொண்டுகள் | 22 |

வஸிய்யத் திட்டம் இறைவன் புறமிருந்து வந்துள்ளது. மேலும், அத்துடன் ஏராளமான அருட்கொடைகள் இணைந்துள்ளன. இதுவரை வஸிய்யத் செய்யாதவர்கள், வஸிய்யத் செய்துவிட்டு தமது ஈமானை முழுமைப்படுத்திக் கொண்டதற்கான சான்றை கொடுக்கவும். ஏனெனில், எவர் வஸிய்யத் செய்வதில்லையோ அவரது ஈமானில் எனக்கு ஐயம் உள்ளது என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எழுதியுள்ளார்கள். எனவே ஈமான் முழுமையடைவதற்கான அளவுகோல் வஸிய்யத் ஆகும். (குத்பாதே மஹ்மூத், தொகுதி 10 பக்கம்-166)

**வஸிய்யத்தின் நோக்கங்கள்**

வஸிய்யத் அமைப்பு முழுமை அடைந்துவிடும்போது அதன் மூலம் தப்லீக் மட்டுமே நடைபெறாது. மாறாக, இஸ்லாத்தின் விருப்பத்திற்கு ஏற்ப ஒவ்வொரு மனிதனுடைய தேவைகளும் அதன் மூலம் நிறைவேற்றப்படும். மேலும் துன்பமும், வறுமையும் உலகிலிருந்து அழிக்கப்பட்டு விடும். இன்ஷாஅல்லாஹ். அனாதைகள் பிச்சை எடுக்க மாட்டார்கள். விதவைகள் மக்களுக்கு முன்னால் கையேந்த மாட்டார்கள். மேலும், செல்வமற்றவர்களாக கவலையுடன் திரிய மாட்டார்கள். ஏனெனில், வஸிய்யத் பிள்ளைகளுக்கு தாயாக இருக்கும். இளைஞர்களுக்கு தந்தையாக இருக்கும். பெண்களுக்கு கணவனாக இருக்கும். எந்த நிர்பந்தமும் இல்லாமல் அன்புடனும், உளமகிழ்ச்சியுடனும் ஒரு சகோதரர் மற்ற சகோதரருக்கு அதன் மூலம் உதவி செய்வார். அவர் கொடுப்பது நற்கூலியின்றி போகாது. மாறாக, கொடுக்கின்ற ஒவ்வொருவரும் இறைவனிடமிருந்து சிறந்த நற்கூலியைப் பெறுவர். செல்வந்தரும் நஷ்டம் அடைய மாட்டார். ஏழையும் நஷ்டமடைய மாட்டார். அதேபோன்று (ஒரு) சமுதாயம் (மற்ற) சமுதாயத்துடன் சண்டையிடாது. மாறாக, முழு உலகத்தின் மீதும் அதன் நன்மை பரந்துபட்டதாக இருக்கும். (நிஸாமே நவ், அன்வாருல் உலூம், தொகுதி 16, பக்கம்-600)

**வஸிய்யத்தின் செல்வம் முழு உலகிற்காகவும் செலவிடப்படும்**

அஹ்மதிய்யத்தின் மூலம் ஒன்றுசேரும் பணம் ஒரு நாட்டில் மட்டும் செலவிடப்படாது. மாறாக, முழு உலகிலும் ஏழைகளுக்காக செலவிடப்படும். அது இந்தியாவின் ஏழைகளுக்காகவும் பயன்படும். சீனாவின் ஏழைகளுக்காகவும் பயன்படும். அது ஜப்பானின் ஏழைகளுக்கும் பயன்படும். அது ஆஃப்ரிக்காவின் ஏழைகளுக்காவும் பயன்படும். அது அரேபியாவின் ஏழைகளுக்கும் பயன்படும். அது இங்கிலாந்து, அமெரிக்கா, இத்தாலி, ஜெர்மனி, ரஷ்யா ஆகிய நாடுகளின் ஏழைகளுக்கும் பயன்படும். (நிஸாமே நவ், அன்வாருல் உலூம், தொகுதி 16, பக்கம்-593)

**வஸிய்யத் செய்யக்கூடியவர் புதிய அமைப்பிற்கான அடித்தளத்தை அமைக்கக்கூடியவர்**

எனவே நண்பர்களே! எவர்கள் வஸிய்யத் செய்துவிட்டார்களோ அவர்கள் கருதிக் கொள்ளட்டும்! அதாவது, உங்களில் எவரெல்லாம் தத்தமது இடத்தில் வஸிய்யத் செய்துவிட்டாரோ அவர் அந்த புதிய அமைப்பிற்கு அடித்தளம் அமைத்துவிட்டார் எனக் கருதிக் கொள்ளுங்கள். எந்த அமைப்பு அவரது மற்றும் அவரது குடும்பத்தின் பாதுகாப்பிற்கான அடிக்கல்லாக உள்ளதோ அதற்கு அவர் அடித்தளம் அமைத்துவிட்டார். ( நிஸாமே நவ், அன்வாருல் உலூம், தொகுதி 16, பக்கம்-601)

**எவரெல்லாம் வஸிய்யத் செய்வாரோ அவர் ஒருவேளை ஒருநேரத்தில் சுவர்க்கவாசியாக இல்லாமல் இருந்தாலும் கூட அவர் சுவர்க்கவாசியாக ஆக்கப்படுவார்**

நான் ஜமாஅத்திற்கு கவனமூட்டுகின்ற மூன்றாவது கடமை வஸிய்யத் ஆகும். வஸிய்யத் ஈமானின் பரீட்சைக்கான வழிமுறையாகும். மேலும், யார் நம்பிக்கையாளர்? யார் இல்லை? என்பதை இறைவன் அதன் மூலமாக பார்க்கின்றான் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எழுதியுள்ளார்கள்.....

வஸிய்யத் எப்படிப்பட்ட விஷயம் என்றால், அது நிச்சயமாக ஒருவர் இறை நெருக்கம் பெற்றவர் என்பதை வெளிப்படுத்துகின்றது. நம்பிக்கையாளரே வஸிய்யத் செய்கின்றார் என்பதில் ஐயமில்லை. அதேநேரம் இந்த விஷயத்திலும் ஐயமில்லை. அதாவது, ஒரு நபரிடத்தில் ஒருவேளை சில பலவீனங்களும் காணப்படுகின்றன என்றால் அவர் வஸிய்யத் செய்துவிட்டால் பின்னர் பெஹஷ்தி மக்பராவில் சுவர்க்கவாசிகள் மட்டுமே நல்லடக்கம் செய்யப்படுவார்கள் என்ற தனது வாக்குறுதிக்கு ஏற்ப அல்லாஹ் அவரது அமல்களை சரிசெய்து விடுகின்றான். எனவே வஸிய்யத் நஃப்ஸின் சீர்திருத்தத்திற்கு சிறந்த வழிமுறையாகும். ஏனென்றால், எவரெல்லாம் வஸிய்யத் செய்வாரோ அவர் ஒருநேரத்தில் சுவர்க்கவாசியாக இல்லாமல் இருந்தாலும் கூட அவர் சுவர்க்கவாசியாக ஆக்கப்படுவார். அவரது செயல்கள் மிகவும் மோசமானதாக இருந்தால் இறைவன் அவரது நயவஞ்சகத்தை வெளிப்படுத்தி அவரை வஸிய்யத்திலிருந்து பிரித்துவிடுவான்.

(குத்பாதே மஹ்மூத், தொகுதி 13,பக்கம் 52)

**இறைவன் வஸிய்யத் செய்கின்ற நபரை இறையச்சமுடையவராக ஆக்கிவிடுகின்றான்**

மூன்றாவது விவகாரம் வஸிய்யத் ஆகும். இறைவன் நமக்காக ஒரு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த விஷயத்தை வைத்துள்ளான். இந்த வழிமுறை மூலமாக சுவர்க்கத்தை நமக்கு அருகில் கொண்டு வந்துவிடுகின்றான். எனவே எவருடைய உள்ளத்தில் ஈமானும், தூய்மையும் உள்ளதோ ஆனால், அவர் வஸிய்யத் தொடர்பாக சோம்பலை வெளிப்படுத்தி வருகின்றாரோ அவர் வஸிய்யத்தின் பக்கம் விரைந்து முன்னேறட்டும் என்று நான் அவருக்கு கவனமூட்டுகின்றேன். இந்த சோம்பலின் காரணமாக இவ்வாறு காணக் கிடைக்கின்றது. அதாவது, மிகவும் நல்லவர்கள் சிலர் மரணித்துவிடுகின்றனர். இன்று, நாளை என்று தாமதித்து வந்த நிலையில் அவர்களுக்கு மரணம் வந்துவிடுகிறது. பின்னர் உள்ளம் வேதனையடைகின்றது. மேலும், அந்தோ! இவர்களும் நல்லடியார்களுடன் நல்லடக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டுமே! என்ற ஏக்கம் உருவாகின்றது. ஏனெனில் (வஸிய்யத் அமைப்பின் கீழ்) நல்லடக்கம் செய்யப்பட முடியாது. அவர்கள் தூயவர்களாக இருந்தார்கள். தூய மக்களுடன் நல்லடக்கம் செய்யப்படுவதற்கு அவர்கள் தகுதி படைத்தவர்களாக இருந்தார்கள் என்பதை அவர்களின் மரணத்தின்போது அனைவரின் உள்ளமும் உணர்ந்து கொண்டிருக்கும். ஆனால், அவர்களின் சிறிய அளவிலான கவனக்குறைவும், சோம்பலும் இந்த விவகாரத்தில் தடையை உருவாக்கி விடுகிறது....

எனவே இயன்றவரை நண்பர்கள் விரைந்து வஸிய்யத் செய்ய வேண்டும். வஸிய்யத் செய்வதால் ஈமானில் முன்னேற்றம் ஏற்படுகின்றது என்று நான் நம்புகின்றேன். இறையச்சமுடையவர்களை இந்த பூமியில் அவன் நல்லடக்கம் செய்வான் என்பது இறைவனது வாக்குறுதியாக இருக்கும்போது எவர் வஸிய்யத் செய்கின்றாரோ அவரை இறைவன் இறையச்சமுடையவராக ஆக்கிவிடுகின்றான். (குத்பாதே மஹ்மூத், தொகுதி 13, பக்கம் 563)

அல்லாஹ் அனைத்து அஹ்மதிகளுக்கும் அதிவிரைவாக இந்த அருளுக்குரிய அமைப்பில் இணைவதற்குரிய நற்பேறை வழங்குவானாக.

ஆமீன்!

* * * * *

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையார், மகத்துவமிக்க அந்தஸ்து கொண்ட பத்ர் போர் ஸஹாபி ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் புகழுக்குரிய நற்பண்புகள்**

**நேற்று இரவு நான் சுவர்க்கத்தில் நுழைந்தபோது ஜஃபர் வானவர்களுடன் சேர்ந்து பறந்து கொண்டிருப்பதையும், அதேநேரம் ஹம்ஸா (ரலி) அவர்கள் அரியணையில் அமர்ந்திருப்பதையும் நான் கண்டேன் (நபிமொழி)**

**ஏற்கனவே எடுத்துரைக்கப்பட்ட சில ஸஹாபிகளைப் பற்றி சில விஷயங்கள் அல்லது விவரங்கள் பின்னர் தெரிய வந்துள்ளன. மக்கள் அந்த விஷயங்களை அறிந்து கொள்வதற்காகவும், அதிகமதிகமான மக்கள் கேட்பதற்கு ஏதுவாகவும் அவற்றையும் குத்பாவில் எடுத்துரைப்பதை நான் உகந்ததாக கருதுகிறேன்**

**ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு மிகவும் பிடித்தமான பெயர் ஹம்ஸா ஆகும்**

**தற்போது நான் துஆ செய்து முடிக்கவில்லை அதற்குள் பொய் விலகிவிட்டது. எனது உள்ளம் நம்பிக்கையால் நிறைந்துவிட்டது. பின்னர் நான் காலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி எனது அனைத்து நிலைமைகளையும் எடுத்துரைத்தேன். அப்போது, அல்லாஹ் உமக்கு உறுதிப்பாட்டை வழங்குவானாக என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள்**

**மது தடுக்கப்பட்டப் பிறகு பின்னர் அதற்கு அருகில் கூட இந்த மக்கள் செல்லவில்லை. அல்லாஹ்வின் கட்டளையை ஏற்பதில் எந்த அளவிற்கு தரம் இருந்ததென்றால், உடனடியாக மது பானையை உடைத்துவிட்டார்கள்**

**மோசமாகிவரும் உலகின் நிலையைக் கருத்தில் கொண்டு புத்தாண்டின் ஆரம்பத்தில் துஆக்களுக்கான அறிவிப்பு**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள பள்ளிவாசலில் 30 டிசம்பர் 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **ஃபத்ஹ்** மாதம் **30ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

பத்ர் போர் ஸஹாபிகளின் நற்குறிப்போ இப்போது நிறைவடைந்தது; ஆனால், நான் முன்னர் எடுத்துரைத்திருந்த சில ஸாஹாபிகளைப் பற்றிய சில விஷயங்கள் அல்லது விளக்கங்கள் தெரிய வந்துள்ளன. அவற்றை ஒன்று நான் ஏதாவதொரு தருணத்தில் எடுத்துரைப்பேன் அல்லது அவை அச்சிடப்படும்போது அதில் அவை வந்துவிடும் என்று ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பை நிறைவு செய்துவிட்டு (ஜுமுஆ குத்பாவின்) இறுதியில் நான் கூறியிருந்தேன்.

சிலர் இந்த வரலாற்றைக் கேட்டு நாங்கள் மிகவும் பயன்பெற்றோம் என்று எழுதுகிறார்கள். குத்பாக்களிலும் இந்தப் பகுதி எடுத்துரைக்கப்பட்டு விடும். எனவே அவற்றையும் சில குத்பாக்களில் எடுத்துரைத்து விடுவதை நான் பொருத்தமானதாகக் கருதுகிறேன். இவ்வாறு, இதன் மூலமாகவும் மக்களுக்கு இந்த விஷயங்கள் தெரிய வந்துவிடும். அதிகமதிகமான மக்கள் கேட்டுக் கொள்ள முடியும்.

எவ்வாறு இருப்பினும், இது குறித்த முதல் நற்குறிப்பு ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுடையது ஆகும். அன்னார் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரர் ஆவார்கள். அன்னாருக்கு மிகவும் விருப்பத்திற்குரியவராக இருந்தார்கள். இது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பல்வேறு கூற்றுகள் மூலமாகவும், ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் ஷஹாதத்தின்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் எதிர்வினை என்னவாக இருந்தது ? என்பதலிருந்தும் தெரிய வருகிறது. சில விஷயங்கள் சுருக்கமாக மீண்டும் எடுத்துக் கூறப்படலாம்.

அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஹம்ஸா என்ற பெயர் மிகவும் விருப்பத்திற்குரியதாக இருந்தது. ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எங்களில் ஒருவருக்கு ஆண் குழந்தை பிறந்தது. அப்போது அவர்கள் நாங்கள் இதற்கு என்ன பெயர் வைக்கட்டும்? என்று கேட்டார்கள்.

அப்போது, இவருக்கு ஹம்ஸா பின் அப்தில் முத்தலிப் அவர்களின் பெயரைச் சூட்டுங்கள். அது எனக்கு எல்லாப் பெயர்களைக் காட்டிலும் அதிகம் விருப்பத்திற்குரியது என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(முஸ்தத்ரக் அலஸ் ஸஹீஹைன் லில் ஹாகிம், பாகம் 5, பக்கம் 1831, நூல்: மஃரூஃபத்திஸ் ஸஹாபா, ஹதீஸ் எண்: 4888)

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் துணைவியார்கள் மற்றும் சந்ததிகள் பற்றி தபக்காத்துல் குப்ராவில் எழுதப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் ஒரு திருமணம் அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்த மிலா பின் மாலிக் அவர்களின் மகளுடன் நடைபெற்றது. அன்னார் மூலமாக யஃலா மற்றும் ஆமிர் ஆகியோர் பிறந்தார்கள். தம் மகன் யஃலாவின் பெயரிலேயே ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுக்கு அபூ யஃலா என்ற ஒரு புனைப் பெயரும் உள்ளது.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் இரண்டாவது துணைவியார் ஹஸ்ரத் கவ்லா பின்த் கைஸ் அன்ஸாரியா அவர்கள் மூலமாக ஹஸ்ரத் அம்மாரா பிறந்தார்கள். அன்னாரின் பெயரில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் தமது புனைப் பெயரை அபூ அம்மாரா என்று வைத்தார்கள்.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் ஒரு திருமணம் ஹஸ்ரத் அஸ்மா பின்த் உமைஸ் அவர்களின் சகோதரி ஹஸ்ரத் ஸல்மா பின்த் உமைஸ் அவர்களுடன் நடைபெற்றது. அன்னாரின் வயிற்றிலிருந்து ஹஸ்ரத் உமாமா என்ற ஒரு மகள் பிறந்தார்.

ஹஸ்ரத் அலீ, ஹஸ்ரத் ஜஃபர் மற்றும் ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலியல்லாஹு அன்ஹும்) ஆகியோருக்கு இடையில் எவருக்காக சண்டை ஏற்பட்டதோ அவர் இதே உமாமா தான். அவர்களில் ஒவ்வொருவரும் ஹஸ்ரத் உமாமா தம்முடன் இருக்க வேண்டும் என்று விரும்பினர். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஜஃபர் பின் அபீ தாலிப் (ரலி) அவர்களுக்கு ஆதரவாகத் தீர்ப்பு வழங்கினார்கள்.

ஏனெனில், உமாமா அவர்களின் தாயின் சகோதரி ஹஸ்ரத் அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்களின் மனைவியாக இருந்தார்கள்.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் மகன் யஃலா அவர்களின் சந்ததியில், அம்மாரா, ஃபஸ்ல், ஸுபைர், அகீல், மற்றும் முஹம்மத் ஆகியோர் இருந்தார்கள். ஆனால், அனைவரும் மரணமடைந்துவிட்டார்கள். ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் சந்ததிகளும் உயிருடன் இருக்கவில்லை. அவர்களின் வம்சமும் தொடர முடியாமல் போனது.

(அத்தப்காதுல் குப்ரா, பாகம் 2, பக்கம் 46, தாருல் ஃபிக்ர் பெய்ரூத்)

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் மகள் உமாமா அவர்கள் குறித்து ஹஸ்ரத் அலீ (ரலி), ஹஸ்ரத் ஜஃபர் மற்றும் ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலியல்லாஹு அன்ஹும்) அவர்களுக்கிடையிலான சண்டையைப் பற்றிய குறிப்பு தற்போது வந்தது. அதன் விளக்கம் புகாரியில் இவ்வாறு வந்துள்ளது:

ஹஸ்ரத் பரா பின் ஆஸிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அன்னார் கூறினார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் துல் கஅதாவில் உம்ரா செய்ய எண்ணியபோது, மக்கா வாசிகள் அன்னாரை மக்காவில் நுழைய விட மறுத்தார்கள். கடைசியில் அன்னார் (ஸல்), அடுத்த ஆண்டு உம்ரா செய்ய மக்காவிற்கு வருவார்கள்; மூன்று நாட்கள் வரையே தங்கியிருப்பார்கள் என்ற நிபந்தனையின் பேரில் அவர்களுடன் சமரசம் செய்து கொண்டார்கள்.

சமாதான உடன்படிக்கை எழுத ஆரம்பித்தபோது, இந்த நிபந்தனைகளின் பேரிலேயே முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சமரசம் செய்து கொண்டார்கள் என்று எழுதப்பட்டிருந்தது. மக்கா வாசிகள் நாங்கள் இதை ஏற்பதில்லை; நீங்கள் அல்லாஹ்வின் தூதர் என்பதை நாங்கள் ஏற்றால் உங்களை ஒருபோதும் தடுக்க மாட்டோம். எனவே, நீங்கள் இங்கு அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மத் ஆவீர்கள் என்று கூறினார்கள்.

நான் அல்லாஹ்வின் தூதரும் ஆவேன். அப்துல்லாஹ்வின் மகனும் ஆவேன் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம், ரஸூலுல்லாஹ் என்ற சொல்லை அழித்து விடுங்கள் என்று

அன்னார் (ஸல்) கூறினார்கள். அதற்கு, நான் ஒருபோதும் அழிக்க மாட்டேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் தங்களின் பதவியை ஒருபோதும் அழிக்க மாட்டேன் என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்த காகிதத்தைப் பெற்றுக் கொண்டார்கள். அன்னாருக்கு நன்றாக எழுதத் தெரியாது. எனினும் அன்னார் (ஸல்) இவ்வாறு எழுதினார்கள்:

இவை முஹம்மது பின் அப்தில்லாஹ் நிலைநிறுத்திய நிபந்தனைகள் ஆகும். உறையில் இடப்பட்ட வாள்களைத் தவிர, வேறு எந்த ஆயுதத்தையும் யாரும் கொண்டு வர மாட்டோம். மக்கா வாசிகளில் எவரும் அவர்களுடன் செல்ல விரும்பினாலும், எவரையும் தம்முடன் அழைத்துச் செல்ல மாட்டோம். தம் தோழர்களில் எவராவது மக்காவில் தங்க விரும்பினால் அவரைத் தடுக்க மாட்டோம்.

எவ்வாறாயினும், உடன்படிக்கையின்படி, அன்னார் (ஸல்) அடுத்த ஆண்டு, மக்காவில் நுழைந்தபோது, கால அளவு முடிந்ததும் குறைஷியர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் வந்து, உம் தோழர் அதாவது ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களிடம் இப்போது இங்கிருந்து சென்றுவிடுமாறு கூறுங்கள். ஏனெனில், நிர்ணயிக்கப்பட்டிருந்த காலகட்டம் முடிந்துவிட்டது என்று கூறினர்.

எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கிருந்து புறப்பட்டுவிட்டார்கள். ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் மகள் அன்னாருக்குப் பின்னால் வந்தார்கள். சிறிய தந்தையே! சிறிய தந்தையே! என் அன்னார் அழைத்துக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் சென்று அன்னாரை அழைத்துக் கொண்டார்கள்.

அவரது கையைப் பிடித்து ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களிடம், உங்கள் சிறிய தந்தையாரின் மகளை (உடன்) அழைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். அன்னார் அவரை சவாரியில் ஏற்றிக் கொண்டார்கள்.

அப்போது ஹஸ்ரத் அலீ, ஹஸ்ரத் ஸைத் மற்றும் ஹஸ்ரத் ஜஃபர் (ரலியல்லாஹு அன்ஹும்) ஆகியோர் ஹம்ஸாவின் மகளைக் குறித்து சண்டையிட்டார்கள். நான அவரை அழைத்துக் கொள்கிறேன். அவர் எனது சிறிய தந்தையின் மகள் என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள். இவர் எனது சிறிய தந்தையின் மகள் ஆவார். இவர் தாயின் சகோதரி, எனது மனைவி ஆவார் என்று ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) கூறினார்கள். என் சகோதரியின் மகள் என்று ஸைத் கூறினார்கள்.

பின்னர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர் தன் தாயின் சகோதரியுடன் இருக்கட்டும் என்று அது குறித்து தீர்ப்பு வழங்கினார்கள். மேலும், தாயின் சகோதரி தாயின் அந்தஸ்தைக் கொண்டவர் என்றும் கூறினார்கள்.

நீர் என்னுடையவர் ஆவீர். நான் உம்முடையவன் ஆவேன் என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் கூறினார்கள். ஜஃபரிடமும், நீர் தோற்றத்திலும், பண்பிலும் என்னுடன் ஒத்தவர் ஆவீர் என்று கூறினார்கள். ஸைதிடம் நீர் என் சகோதரரும், தோழரும் ஆவீர் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், தாங்கள் ஹம்ஸாவின் மகளுடன் திருமணம் செய்து கொள்ள மாட்டீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அன்னார், அவர் என் பால்குடி சகோதரரின் மகள் ஆவார். நான் அவருக்கு சிறிய தந்தை ஆவேன் என்று பதில் அளித்தார்கள்.

(ஸஹீஹ் புகாரி, கிதாபுல் மகாஸீ, பாப் உம்ரதுல் கஸாஃ, ஹதீஸ் எண்: 4251)

இந்தச் சின்ன சின்ன விவகாரங்களுக்கும் இந்த சம்பவங்களில் தீர்ப்பு கிடைத்துவிடுகிறது. சிலவேளை, ஏன் தாயின் சகோதரியிடம் செல்ல வேண்டும்? ஏன் தாய் வழிப்பாட்டியிடம் செல்ல வேண்டும்? போன்ற கேள்விகள் கஸா துறையிடம் வருகின்றன. ஆக, இங்கு அவை தீர்மானிக்கப்பட்டு விட்டன.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பாக, ரவ்ஸுல் அன்ஃபில் நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

இப்னு இஸ்ஹாக் மட்டுமல்லாமல், வேறு சிலரும் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றது குறித்து ஒரு விஷயத்தைக் கூடுதலாகக் கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அடிமைப் பெண் கூறியதைக் கேட்டு, எனக்குக் கோபம் தலைக்கேறியதும், நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மார்க்கத்தில் இருக்கின்றேன் என்று கூறிவிட்டேன்.

நடந்த சம்பவம் அனைத்தும் முன்னர் எடுத்துரைக்கப்பட்டுவிட்டது.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) கூறுகிறார்கள். அவ்வாறு கூறியபிறகு நான் என் மூதாதையர்கள் மற்றும் என் சமுதாயத்தின் மதத்தை விட்டு விட்டேன் என்று எனக்கு, பின்னர் வெட்கம் ஏற்பட்டது. நான் அந்த மாபெரும் விஷயத்தைக் குறித்து சந்தேகத்திலும், சஞ்சலத்திலும் எப்படி இரவைக் கழித்தேன் என்றால், என்னால் நொடி பொழுது கூட தூங்க முடியவில்லை. பிறகு, நான் கஅபா ஆலயத்துக்கு அருகில் வந்தேன். அல்லாஹ்வே! எனது உள்ளத்தை உண்மைக்காக திறந்து விடுவாயாக! சஞ்சலங்களையும், சந்தேகங்களையும் என்னை விட்டு அகற்றி விடுவாயாக! என்று அல்லாஹ்வுக்கு முன் அழுது மன்றாடினேன்.

நான் தற்போது துஆ செய்து முடித்திருக்கக் கூட இல்லை. அதற்குள் பொய் என்னை விட்டு விலகிவிட்டது. எனது உள்ளம் நிச்சய உறுதியால் நிறைந்து விட்டது.

அடுத்து, காலையில் நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன் ஆஜரானேன். என் நிலை அனைத்தையும் கூறினேன். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உமக்கு அல்லாஹ் உறுதியான பாதத்தை வழங்க வேண்டும் என்று எனக்காக துஆ செய்தார்கள்.

ஹஸ்ரத் அம்மார் பின் அபீ அம்மார் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ஹம்ஸா பின் அப்தில் முத்தலிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் தமக்கு ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்களின் உண்மையான வடிவத்தைக் காட்டுக் கொடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொண்டார்கள். அப்போது, ஹஸ்ரத்

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், உங்களிடம் அவர்களைப் பார்ப்பதற்கான ஆற்றல் இல்லை என்று கூறினார்கள். ஏன் இல்லை? என்று அன்னார் பணிவுடன் கூறினார்கள். அதற்கு, நீங்கள் விரும்பினால் இப்போது உங்கள் இடத்தில் அமர்ந்து கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர் கூறுகிறார்கள்: பிறகு, ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள், கஅபா இறை இல்லத்தில் இணைவைப்பாளர்கள் வலம் வரும்போது, தம்முடைய ஆடைகளைத் தொங்கவிடும் அந்தக் கட்டை மீது இறங்கி வந்தார்கள். பின்னர், உங்கள் பார்வையைத் தாழ்த்திக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அன்னார் பார்த்தபோது, அவர்களின் அதாவது ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்களின் இரண்டு பாதங்களும் பச்சை நிறக் கோமேதகத்தைப் போன்று இருப்பதைக் கண்டார்கள். பின்னர் அன்னார் மயங்கி விழுந்தார்கள். கோமேதகம் என்பது ஒரு விலையுயர்ந்த கல்லைக் குறிப்பிடுவார்கள். அது மரகதக் கல்லுக்கு ஒப்பானது.

(அத்தப்காதுல் குப்ரா, பாகம் 3, பக்கம் 8, தாருல் ஃபிக்ர் பெய்ரூத்)

ஹிஜ்ரீ 2 ஆம் ஆண்டு ஸஃபர் மாதத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முஹாஜிர்களின் ஒரு கூட்டத்துடன் மதீனாவிலிருந்து அப்வாவை நோக்கிப் புறப்பட்டார்கள். அதில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுக்கும் கலந்து கொள்வதற்கான நற்பேறு கிடைத்தது.

இந்தப் போரில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கொடியை ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களே ஏந்தியிருந்தார்கள். அது வெள்ளை நிறத்தில் இருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமக்கு பின் மதீனாவின் அமீராக ஹஸ்ரத் அபூஸயீத் (ரலி) அவர்களை அல்லது ஓர் அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் சஃது பின் உபாதா (ரலி) அவர்களை நியமித்தார்கள்.

இந்தப் பயணத்தில் போர் புரியும் நிர்பந்தம் வரவில்லை. பனூ ளும்ராவுடன் சமரச உடன்படிக்கை முடிவானது. இது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தாமே கலந்து கொண்ட முதல் போராகும். இந்தப் போரின் இன்னொரு பெயர் வதான் என்பதுமாகும்.

(ஸுபுலுல் ஹுதா வர்ரஷாத், பாகம் 4, பக்கம் 4, பதிப்பு தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் எழுதியுள்ளார்கள்.

வாளைக் கொண்டு போர் புரிவதற்கான அனுமதி ஹிஜ்ரத்தின் இரண்டாவது ஆண்டு, ஸஃபர் மாதத்தில் இறங்கியது. ஏனெனில், குறைஷியர்களின் கொலை வெறி எண்ணங்கள் மற்றும் அவர்களது பயங்கரமான செயல்பாடுகளுக்கு எதிரில் முஸ்லிம்களைப் பாதுகாப்பாக வைப்பதற்காக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்த மாதத்திலேயே முஹாஜிர்களின் ஒரு கூட்டத்தைத் தம்முடன் அழைத்துக் கொண்டு அல்லாஹ்வின் பெயரைக் கொண்டு மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள்.

புறப்படுவதற்கு முன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமக்குப் பின் மதீனாவில் கஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவர் ஸஃது பின் உபாதா (ரலி) அவர்களை அமீராக நியமித்தார்கள். மேலும், மதீனாவிலிருந்து தென்மேற்குப் பக்கமாக மக்காவின் வழியில் பயணமானார்கள். கடைசியில், வத்தான் எனும் இடம் வரை வந்தடைந்துவிட்டார்கள். இந்தப் பகுதியில் பனூ ளும்ராவின் மக்கள் வசித்து வந்தார்கள். இது பனூ கனானா கோத்திரத்தின் ஒரு கிளைக் கோத்திரமாக இருந்தது. இவ்வாறு ஒருவகையில் இவர்கள் குறைஷியர்களின் சிறிய தந்தை வழி சகோதரர்களாக இருந்தனர்.

இங்கு வந்தடைந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பனூ ளும்ரா கோத்திரத்தின் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். பரஸ்பர விருப்பத்துடன் அவர்களுக்குள் ஓர் உடன்படிக்கை செய்யப்பட்டது. அதற்கான நிபந்தனைகள் இவ்வாறு இருந்தன:

பனூ ளும்ரா கோத்திரத்தினர் முஸ்லிம்களுடன் நட்பு ரீதியிலான தொடர்புகள் வைத்திருப்பார்கள். முஸ்லிம்களுக்கு எதிராக எந்த எதிரிக்கும் உதவி செய்ய மாட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவர்களை முஸ்லிம்களுக்கு உதவி செய்வதற்காக அழைத்தால் அவர்கள் உடனடியாக வருவார்கள்.

மறுபுறம், அன்னார் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து இவ்வாறு உடன்படிக்கை செய்தார்கள்:

முஸ்லிம்கள் பனூ ளும்ரா கோத்திரத்துடன் நட்பு ரீதியிலான தொடர்பு கொண்டிருப்பார்கள். தேவையின்போது அவர்களுக்கு உதவி செய்வார்கள்.

இந்த உடன்படிக்கை முறையாக எழுதப்பட்டது. இதில் இரு தரப்பினரும் கையொப்பமிட்டனர். பதினைந்து நாட்கள் வராமல் இருந்ததற்கு பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வருகை தந்தார்கள். வத்தான் போரின் இன்னொரு பெயர் அப்வா போர் என்பதுமாகும். ஏனெனில், அப்வா எனும் ஊரும் வத்தானுக்கு அருகிலேயே உள்ளது. இந்த இடத்தில் தான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்குரிய தாயார் மரணமடைந்தார்கள். இது தான் அந்த இடமாகும்.

வரலாற்றாசிரியர்கள் எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்தப் போரில் பனூ ளும்ராவுடன் சேர்த்து, மக்கத்து குறைஷியர்களையும் கருத்தில் கொண்டார்கள். இதன் பொருள், உண்மையில் அன்னாரின் இந்தப் போர்ப் படை குறைஷியர்களின் கடுமையான நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்காக இருந்தது என்பதே ஆகும்.

அதில் விஷமத்தனமான மற்றும் ஆபத்தான தாக்கத்தை அழிப்பது நோக்கமாக இருந்தது. குறைஷியர்களின் கோத்திரத்தைப் போன்றோர் முஸ்லிம்களுக்கு எதிராக அரபு கோத்திரங்களில் உருவாகிக் கொண்டிருந்தனர். அதன் காரணமாக, அந்த நாட்களில் முஸ்லிம்களின் நிலை மிகவும் மோசமாகிக் கொண்டிருந்தது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் எம்.ஏ. (ரலி) அவர்களின் நூல்: ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 327 -328)

எவ்வாறு இருப்பினும், அந்தப் போரில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கொடியை ஏந்தியிருந்தார்கள். ஜமாதில் ஊலா ஹிஜ்ரீ 2 ஆம் ஆண்டில் மீண்டும் மக்கத்து குறைஷியர்கள் தரப்பிலிருந்து ஒரு செய்தியறிந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முஹாஜிர்களின் ஒரு கூட்டத்துடன்- அவர்களின் எண்ணிக்கை 150 அல்லது 200 என்று கூறப்பட்டுள்ளது அவர்களுடன் மதீனாவிலிருந்து அஷீராவை நோக்கிச் சென்றார்கள். தமக்குப் பின் தம் பால்குடி சகோதரர் அபூஸலமா பின் அப்தில் அஸத் அவர்களை அமீராக நியமித்திருந்தார்கள்.

இந்தப் போரிலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வெள்ளை நிறக் கொடியை ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் ஏந்தியிருந்தார்கள். இந்தப் போரில் அன்னார் பல இடங்களைச் சுற்றியவாறு கடைசியில் கடற்கரை ஓரத்துக்கு அருகில் யன்பா எனும் இடத்துக்கு அருகில் அஷீராவுக்கு வந்தடைந்தார்கள். குறைஷியர்களுடன் சண்டை நடைபெறவில்லைதான்; எனினும் அதில் அன்னார் பனூ முத்லஜ் கோத்திரத்துடன், பனூ ளும்ராவுடன் இருந்த அதே நிபந்தனைகளோடு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டு திரும்பி வந்தார்கள்.

பத்ர் யுத்தத்தில் தனிப் போரில் ஒற்றையாகப் போர் புரிவது தொடர்பாக குறிப்பு உள்ளது. இது பல்வேறு ஹதீஸ்களின் ஒளியில் முன்னர் கூறப்பட்டுவிட்டது. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இதற்கான விளக்கத்தை இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்:

படைகள் சரியாக ஒன்று மற்றொன்றுக்கு எதிரில் இருந்தன. ஆனால், இறை வல்லமையின் விநோதமான காட்சி என்னவெனில், அப்போது படைகள் நிற்கும் வரிசை எப்படி இருந்தது? என்றால் இஸ்லாமிய படை குறைஷியர்களுக்கு அசல் எண்ணிக்கையை விட அதிகமாக, இன்னும் சொல்வதென்றால், இரட்டிப்பாகத் தென்பட்டது. அதன் காரணமாக, நிராகரிப்பாளர்கள் மதிப்பச்சத்திற்குள்ளாகிக் கொண்டே

சென்றார்கள்.

மறுபுறம், முஸ்லிம்களுக்கு குறைஷியர்களின் படை அவர்களது அசல் எண்ணிக்கையை விடவும் குறைவாகத் தென்பட்டது. அதன் விளைவாக, முஸ்லிம்களின் உள்ளம் மேலாங்கியிருந்தது. எப்படியாவது இஸ்லாமிய படையின் எண்ணிக்கை சரியாகத் தெரிந்து விடவேண்டும். அப்போதுதான் தம்மால் குறுகிய உள்ளங்களுக்கு ஆதரவளிக்க முடியும் என்பது குறைஷியர்களின் முயற்சியாக இருந்தது.

அதற்காக குறைஷிய தலைவர்கள் உமைர் பின் வஹபை, இஸ்லாமியப் படையின் நாலாப் புறமும் குதிரைகள் ஓட்டிச் சென்று அவர்களின் எண்ணிக்கை எத்தனை? அவர்களுக்குப் பின்னால் உதவிப் படை எதுவும் மறைந்திருக்கவில்லையே? என்பதைப் பாருங்கள் என்று கூறி அனுப்பி வைத்தனர். எனவே, உமைர் குதிரை மீது பயணித்து முஸ்லிம்களை ஒரு சுற்று சுற்றி வந்தார். ஆனால், அவருக்கு முஸ்லிம்களின் தோற்றம் மற்றும் வடிவத்தால் எத்தகைய கம்பீரமும், உறுதிப்பாடும் மரணத்தை பொருட்படுத்தாதிருக்கும் தன்மையும் தென்பட்டது என்றால், அவர் கடுமையான மதிப்பச்சத்திற்காளாகித் திரும்பினார். மேலும், குறைஷியர்களைப் பார்த்து கூறினார்:

எனக்கு மறைவான உதவிப் படை எதுவும் தென்படவில்லை. ஆனால், குறைஷியக் கூட்டமே! முஸ்லிம்களின் சேனைகள் ஒருவகையில் ஒட்டகங்களின் பல்லக்குகள் தம் மீது மனிதர்களை அல்ல; மாறாக, மரணத்தை சுமந்திருக்கின்றன. யஸ்ரபின் பாறைகள் மீது அழிவுகள் சவாரி செய்கின்றன என்பதை நான் பார்த்தேன்.

குறைஷியர்கள் இந்த விஷயத்தைக் கேட்டதும் அவர்களிடம் ஒரு வித அமைதியின்மை உருவாகிவிட்டது. அவர்களின் பொறுப்பாளராக வந்திருந்த ஸுராக்கா எந்த அளவு மதிப்பச்சத்துக்குள்ளானார் என்றால், திரும்பி ஓடிவிட்டார். மக்கள் அவனைத் தடுத்தபோது, அவன் எனக்குத் தென்படுவதை நீங்கள் பார்க்க முடியாது என்று கூறினார்.

ஹகீம் பின் ஹஸ்ஸாம் உமைரின் கருத்தைக் கேட்டதும், பதற்றமடைந்து உத்பா பின் ரபீஆவிடம் வந்து இவ்வாறு கூறினான்:

உத்பாவே! கடைசியில் நீ முஹம்மது (ஸல்) அவர்களிடம் அம்ர் ஹஸ்ரமீக்காகப் பழிவாங்கத் தானே விரும்புகின்றாய்? அவன் உனது நட்புக் கோத்திரத்தைச் சேர்ந்தவனாக இருந்தான். உன்னால் அவன் தரப்பிலிருந்து ஈட்டுத் தொகையை செலுத்தி விட முடியாதா? குறைஷியர்களை அழைத்துக் கொண்டு திரும்பிச் சென்று விட முடியாதா? இதில் என்றென்றைக்குமாக உள்ள நற்பெயர் இருக்கும்.

சுயமே பதறிப் போயிருந்த உத்பாவுக்கு வேறு என்ன வேண்டும்? அவன் உடனே, ஆம்! ஆம்! எனக்கும் சம்மதம் தான். பார். ஹகீம் கடைசியில் இந்த முஸ்லிம்களும் நாமும் ஒருவருக்கொருவர் உறவினர் தானே! சகோதரர் சகோதரர் மீதும், தந்தை மகன் மீதும், வாள் ஏந்துவது நன்றாகவா இருக்கிறது? நீ ஒன்று செய்! இப்போது அபுல் ஹகம், அதாவது, அபூ ஜஹ்லிடம் சென்று, அவர் முன் இந்த ஆலோசனையை எடுத்து வை! என்று அவர்கள் கூறினர்.

மறுபுறம், உத்பா சுயம் ஒட்டகத்தின் மீது ஏறி தன் தரப்பிலிருந்து மக்களுக்கு இவ்வாறு புரிய வைக்க ஆரம்பித்து விட்டார்:

உறவினர்களுக்கு இடையில் சண்டை சரியில்லை. நாம் திரும்பிச் சென்று விட வேண்டும். முஹம்மது (ஸல்) அவர்களை அவர்கள் மற்ற அரபு கோத்திரங்களை எதிர்கொள்வதற்கு, அவர்களின் நிலையில் விட்டு விட வேண்டும். விளைவு என்ன ஆகிறது? என்று பார்க்கலாம். பிறகு, நீங்கள் பாருங்கள்! இந்த முஸ்லிம்களோடு சண்டையிடுவதும் எளிதான பணி ஒன்றும் இல்லை. ஏனெனில், நீங்கள் என்னை கோழை என்றாலும் பரவாயில்லை. ஆனால், நான் கோழை அல்ல. எனக்கோ இவர்கள் மரணத்தை வென்றவர்களாகத் தெரிகின்றனர்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொலைவில் இருந்து உத்பாவைப் பார்த்தார்கள். அப்போது அன்னார், நிராகரிப்பாளர்களின் படையில் யாரிடமாவது ஒழுக்கம் இருக்கிறது என்றால், செந்நிற ஒட்டகத்தின் மேல் பயணத்திருக்கும் இவரிடம் இருக்கிறது. ஒருவேளை அவர்கள் அவரது பேச்சைக் கேட்டால் அது அவர்களுக்கு நல்லதாக இருக்கும் என்று கூறினார்கள்.

ஆனால், ஹகீம் பின் ஹஸ்ஸாம் அபூ ஜஹ்லிடம் வந்து அவனிடம் இந்த ஆலோசனையைக் கூறியபோது, சமுதாயத்தின் ஃபிர்அவ்னான அவன் இத்தகைய விஷயங்களை எங்கிருந்து கேட்பான். அவன் புறப்பட்டவாறு, ஓஹோ!, இப்பொழுது உத்பாவுக்குத் தன் முன் உறவினர்கள் தென்பட ஆரம்பித்துவிட்டார்களா? என்று கூறினான். பிறகு, அவன் அம்ர் ஹஸ்ரமீயின் சகோதரன் ஆமீர் ஹஸ்ரமீயை அழைத்து, உனது நட்புக் கோத்திரத்தின் உத்பா என்ன சொல்கிறார்? என்று நீ கேட்டாயா? அதுவும் உன் சகோதரனுக்காப் பழிவாங்கும் சந்தர்ப்பம் கையில் வந்துள்ள நேரத்தில் (இப்படி) கூறுகிறார் என்று கூறினான்.

ஆமீரின் கண்களில் இரத்தம் பொங்கி வந்தது. அவன் அரேபியாவின் தொன்மையான வழக்கத்திற்கு ஏற்ப தனது ஆடையைக் கிழித்துக் கொண்டு நிர்வணமாகி, அந்தோ! சகோதரனுக்காகப் பழி வாங்க முடியாமலேயே போகிறதே! அந்தோ! என் சகோதரனுக்காகப் பழி வாங்க முடியாமலேயே போகிறதே! என்று அழ ஆரம்பித்தான். அந்த பாலைவனக் குரல் குறைஷியர்களின் நெஞ்சங்களில் பகைமை எனும் தீப்பொறிகளைக் கொழுந்து விட்டெரியச் செய்தது. போர் அடுப்பு தனது முழு ஆற்றலுடன் எரிய ஆரம்பித்தது.

எவ்வாறு இருப்பினும், அபூ ஜஹ்லின் குத்திக் காட்டும் பேச்சு உத்பாவின் உடலிலும் நெருப்பை மூட்டிவிட்டது. இந்தக் கோபத்தில் கொந்தளித்திருந்த அவன் தன் சகோதரன் ஷீபாவையும் தன் மகன் வலீதையும் உடன் அழைத்துக் கொண்டு குறைஷிய படையிலிருந்து முன்னால் வந்தான். அரேபியாவின் தொன்மையான வழக்கப்படி, தனிப் போருக்காக ஒற்றையாகப் போரிட அழைத்தான். எனவே அவர்களை எதிர்கொள்ள அன்ஸாரிகள் முன்னால் சென்றார்கள்.

ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவர்களைத் தடுத்துவிட்டு கூறினார்கள்: ஹம்ஸா! நீங்கள் எழுந்திருங்கள்! அலீ நீங்கள் எழுந்திருங்கள்! உபைதா நீங்கள் எழுந்திருங்கள்!

இவர்கள் மூவரும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு மிகவும் நெருங்கிய உறவினர்களாக இருந்தனர். ஆபத்தான இடத்தில் முதலில் தம் அன்பர்கள், நெருக்கமானவர்கள், முன்னால் செல்ல வேண்டும் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் விரும்பினார்கள்.

மறுபக்கம், உத்பா போன்றோரும் அன்ஸாரிகளைப் பார்த்து, இவர்களை எங்களுக்கு என்ன தெரியும்? எங்களுக்கு போட்டியானவர்கள் எங்கள் முன் வரட்டும் என்று கூறினர். எனவே, ஹம்ஸா, அலீ மற்றும் உபைதா ஆகியோர் முன்னால் சென்றார்கள். அரேபியாவின் வழக்கப்படி, முதலில் ஒருவர் மற்றவருக்கு அறிமுகமானார்கள். பின்னர், உபைதா பின் முத்தலிப் வலீதோடும், ஹம்ஸா உத்பாவோடும், அலீ ஷீபாவோடும் போரிடச் சென்றார்கள்.

ஹம்ஸாவும் அலீயும் ஓரிரு வாள் வீச்சிலேயே தங்கள் எதிரிகளை மண்ணில் விழச் செய்துவிட்டார்கள். ஆனால், உபைதா மற்றும் வலீதுக்கு இடையில் மூன்று, நான்கு நல்ல வாள் வீச்சுகள் நடந்தன. இறுதியில் ஒருவர் மற்றவரின் கையால் கடும் காயம் அடைந்து விழுந்தார்கள். இதனால், ஹம்ஸாவும் அலீயும் உடனடியாக முன்னால் சென்று வலீதையே கொன்றுவிட்டார்கள். உபைதாவைத் தம் முகாமுக்கு தூக்கிச் சென்றார்கள். ஆனால், உபைதாவால் அந்தப் பெருந்துயரத்தில் இருந்து உயிர் தப்ப முடியவில்லை. அவர்கள் பத்ர் (ப் போர் மைதானத்தில்) இருந்து திரும்புகையில் வழியில் மரணித்து விட்டார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் எம்.ஏ. (ரலி) அவர்களின் நூல்: ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 358 - 360)

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் பத்ர் யுத்தத்தில் குறைஷிய தலைவன் தயீமா பின் அத்தீயையும் கொன்றார்கள். பத்ர் யுத்தத்தின் சம்பவத்தின் போதுள்ள ஓர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் போதை நிலையில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் ஒட்டகங்களைக் கொன்றுவிட்டிருந்தார்கள். இது மது ஹராம் ஆவதற்கு முன்னுள்ள சம்பவம் ஆகும்.

இதன் விபரம் புகாரியில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

பல்வேறு அறிவிப்பாளர்கள் உள்ளார்கள். ஹஸ்ரத் அலீ பின் ஹுஸைன் அவர்கள் தம் தந்தையார் ஹுஸைன் பின் அலீ (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்களிடம் இருந்து அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் அலீ பின் அபீ தாலிப் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் பத்ர் யுத்தத்தின் போது எனக்கு ஓர் இளம் ஒட்டகம் போர்ச் செல்வத்தில் கிடைத்தது. மற்றோர் ஒட்டகத்தை எனக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வழங்கியிருந்தார்கள்.

நான் அவற்றின் முதுகில் அஸ்கர் புல்லை வைத்து - இது ஒரு புல்லாகும். இதைப் பொற் கொல்லர்கள் போன்றோரும் பயன்படுத்துவார்கள். நறுமணம் மிகக் புல்லாகும்- அதை விற்கச் செல்வேன் என்ற எண்ணத்தில் ஒருநாள் ஓர் அன்ஸாரி ஸஹாபியின் கதவில் அவை இரண்டையும் கட்டி வைத்தேன்.

பனூ கைனுக்காவின் ஒரு பொற்கொல்லனும் என்னுடன் இருந்தான். இவ்வாறு அதன் வருமானத்தில் இருந்து, நான் நிக்காஹ் செய்யவிருந்த ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் வலீமாவை நடத்திக் கொள்வேன் என்று நான் நினைத்திருந்தேன். ஹஸ்ரத் ஹம்ஸா பின் அப்தில் முத்தலிப் (ரலி) அவர்கள் அதே அன்ஸாரியின் வீட்டில் மது அருந்திக் கொண்டிருந்தார்கள். அவர்களுடன் பாட்டுப் பாடும் ஒரு பெண்ணும் இருந்தாள். ஹம்ஸாவே! எழுந்திருங்கள். கொழுத்த இளம் ஒட்டகங்களை நோக்கிச் செல்லுங்கள் என்ற கவிதை வரியை அவள் பாடினாள்.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் உத்வேகத்தில் வாளை எடுத்துக் கொண்டு எழுந்தார்கள். இரண்டு ஒட்டகங்களின் திமில்களையும் கிழித்துவிட்டார்கள். அவற்றின் வயிற்றைக் கிழித்தெறிந்தார்கள். அவற்றின் கல்லீரலை வெளியே எடுத்துவிட்டார்கள். இப்னு ஜரீஹ் கூறினார்:

திமிலின் சதையையும் வெட்டிவிட்டார்களா? என்று நான் இப்னு ஷஹாபிடம் கேட்டேன். அவை இரண்டின் திமில்களையும் வெட்டி, அதை எடுத்துச் சென்றுவிட்டார்கள் என்று கூறினார்கள். இப்னு ஷஹாப் கூறினார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்: எனக்கு இதைப் பார்த்து மிகவும் வேதனை ஏற்பட்டது. பிறகு, நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன் ஆஜரானேன். அச்சமயம், அன்னாருடன் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்களும் இருந்தார்கள். நான் அன்னாருக்கு இந்த சம்பவத்தைப் பற்றி தகவல் கொடுத்த போது அன்னார் வருகை தந்தார்கள்.

ஹஸ்ரத் ஸைத் (ரலி) அவர்களும் அன்னாருடனே இருந்தார்கள். நானும் அன்னாருடனே இருந்தேன். ஹுஸூர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களிடம் வந்தபோது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சினத்தை வெளிப்படுத்தினார்கள். அப்போது, ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் பார்வையை உயர்த்திப் பார்த்தார்கள். போதை நிலையில் இருந்தார்கள். நீங்கள் அனைவரும் என் மூதாதையர்களின் அடிமைகள் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களையும் அன்னார் கூறிவிட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரை விட்டு விலகிச் சென்றுவிட்டார்கள்.

இது மது தடை செய்யப்படுவதற்கு முன்னுள்ள நிகழ்வாகும். பின்னர், இந்த மக்கள் அதற்கு அருகில் கூட செல்லவில்லை. இதுதான் அல்லாஹ்வின் கட்டளையை ஏற்பதற்கான ஸஹாபா பெருமக்களின் தரமாக இருந்தது. உடனடியாக (மது) பானைகளை உடைத்து விட்டார்கள். இன்றைய நாட்களில் மக்கள், நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக, போதை பழக்கத்தை விட்டுவிடுவோம் என்று கூறுவது போன்று அவர்கள் கூறவில்லை.

முதலில் போதையில் மூழ்கிவிடுகிறார்கள். அதுவே தவறான ஒரு செயலாகும்; இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டதாகும். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக விட்டுவிடுவோம். எங்களுக்கு அவகாசம் கொடுங்கள் என்கிறார்கள்.

ஆக, எவ்வாறாயினும், இது அப்போது நடந்த ஒரு சம்பவம் ஆகும். பின்னர், அதற்குப் பிறகு அவர்களின் தியாகத்திற்கான தரமும் அதிகரித்துக் கொண்டே சென்றுவிட்டது. நிச்சயமாக, ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுக்குத் தாம் என்ன கூறிவிட்டோம்! என்று அதற்கு பிறகு வெட்கமும் ஏற்பட்டிருக்கும்.

பத்ர் யுத்தத்திற்குப் பிறகு, பனூ கேன்காவுடனான போர் முன்னால் இருந்தபோது. அதிலும் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் முன்னணியில் இருந்தார்கள். அந்த யுத்தத்திலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கொடியை ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களே ஏந்தியிருந்தார்கள். இந்தக் கொடி வெள்ளை நிறத்தில் இருந்தது. இதன் விபரத்தை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து மதீனாவுக்கு வருகை தந்தபோது, அச்சமயம் மதீனாவின் யூதர்களின் மூன்று கோத்திரங்கள் இருந்தன. அவற்றின் பெயர் பனூ கைனுக்கா, பனூ நளீர் மற்றும் பனூ குரைழா ஆகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்ததுமே அந்தக் கோத்திரங்களுடன் சமாதான அமைதி உடன்படிக்கை செய்து கொண்டார்கள். பரஸ்பரம் சமாதானத்துடனும், அமைதியுடனும் வாழ்வதற்கான அடித்தளமிட்டார்கள்.

உடன்படிக்கை அடிப்படையில், இரு பிரிவினரும் மதீனாவில் அமைதியை நிலைநாட்ட வேண்டும். யாராவது வெளி எதிரிகள் மதீனா மீது தாக்குதல் நடத்தினால், அனைவரும் சேர்ந்து அவர்களை எதிர்க்க வேண்டும் என்ற விஷயத்திற்கு அவர்கள் பொறுப்பாளர்களாக இருந்தார்கள்.

ஆரம்பத்திலோ, யூதர்கள் இந்த உடன்படிக்கைக்குக் கட்டுப்பட்டிருந்தார்கள். குறைந்தபட்சம் அவர்கள் வெளிப்படையாக முஸ்லிம்களோடு எந்த சண்டையையும் உருவாக்கவில்லை. ஆனால், முஸ்லிம்கள் மதீனாவில் அதிகம் ஆற்றல் பெற்றுக் கொண்டே செல்கிறார்கள் என்பதை அவர்கள் பார்த்தபோது அவர்களின் முகபாவம் மாற ஆரம்பித்தது. பெருகி வந்த முஸ்லிம்களின் இந்த ஆற்றலை தடுப்பதற்கு அவர்கள் முடிவு செய்தார்கள். மேலும், அதற்காக எல்லாவிதமான ஆகுமான மற்றும் ஆகுமற்ற திட்டங்களை அவர்கள் மேற்கொள்ள ஆரம்பித்தார்கள்.

எதுவரை என்றால், முஸ்லிம்களுக்குள் பிரிவினையை ஏற்படுத்தி உட்பூசல்களை ஆரம்பித்து வைப்பதற்கான முயற்சியை செய்வதிலிருந்தும் தவிர்ந்திருக்கவில்லை. எனவே, அறிவிப்பு வருகிறது: ஒரு சந்தர்ப்பத்தில் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தின் பல மக்கள் ஒன்றாக அமர்ந்து, பரஸ்பரம் அன்போடும், ஒற்றுமையோடும் உரையாடிக் கொண்டிருந்தார்கள். குழப்பம் விளைவிக்கக் கூடிய சில யூதர்கள் அந்த சபையை அடைந்து ப்ஆஸ் போரைப் பற்றி பேச ஆரம்பித்துவிட்டார்கள்.

இது அவ்விரு கோத்திரங்களுக்கும் இடையில் ஹிஜ்ரத்துக்கு சில ஆண்டுகளுக்கு முன் நடந்திருந்தது. அதில் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தின் பல மக்கள் ஒருவர் மற்றவரின் கைகளால் கொல்லப்பட்டிருந்தார்கள். இந்தப் போரைப் பற்றி பேச்சு வந்ததுமே, உணர்ச்சிவசப்படக்கூடிய இயல்பைக்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

கொண்ட சிலரது உள்ளத்தில் பழைய நினைவுகள் புத்துயிர் பெற்றன. பழைய பகைமையின் காட்சிகள் மீண்டும் கண்கள் முன் வந்தன. விளைவு, பரஸ்பரம் பழித்துரைத்தல் மற்றும் குற்றம் சாற்றுதல் ஆகியவற்றைக் கடந்து எதுவரை நிலை சென்றடைந்தது விட்டது என்றால், அதே சபையில் முஸ்லிம்களுக்குள் (ஒருவர் மற்றவருக்கெதிராக) வாள்கள் ஓங்கப்பட்டன.

ஆனால், நல்ல வேளையாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் குறித்த நேரத்தில் இதைப் பற்றி தகவல் கிடைத்துவிட்டது. அன்னார் (ஸல்) முஹாஜிர்களின் ஒரு கூட்டத்துடன் உடனடியாக அந்த இடத்திற்கு வந்தார்கள். இருபிரிவினருக்கும் புரிய வைத்து தணியச் செய்தார்கள். பிறகு, அவர்களை இவ்வாறு குற்றம் சாட்டவும் செய்தார்கள்:

நீங்கள் நான் இருக்கும் போதே அறிவீனமான வழியை மேற்கொள்கிறீர்களா? இறைவன் இஸ்லாத்தின் மூலமாக உங்களை சகோதரர்களாக ஆக்கிவிட்ட இறைவனின் அந்த அருட்கொடைக்கு நீங்கள் மதிப்பளிப்பதில்லையா?

அன்னாரின் இந்த அறிவுரையினால் அன்ஸாரி ஸஹாபிகளின் மீது எந்த அளவு தாக்கம் ஏற்பட்டது என்றால், அவர்களின் கண்களில் இருந்து கண்ணீர் வழிய ஆரம்பித்தது. அவர்கள் தமது அந்த செய்கையை விட்டு தவ்பா செய்து ஒருவர் மற்றவரைக் கட்டியணைத்துக் கொண்டார்கள்.

பத்ர் யுத்தம் நடந்து முடிந்தது, அல்லாஹ் தன் அருளால் முஸ்லிம்களுக்கு அவர்கள் குறைவாக இருந்தும் போதுமான ஆயுதங்கள் இன்றி இருந்த நிலையிலும் குறைஷியர்களின் ஒரு மாபெரும் படை மீது பகிரங்கமான வெற்றியை அளித்திருந்து, மக்காவின் பெரும், பெரும் தலைவர்கள் மண்ணில் கலந்துபோன பிறகு, மதீனத்து யூதர்களின் மறைமுகமான பொறாமை எனும் நெருப்பு கொழுந்து விட்டெறிய ஆரம்பித்தது.

அவர்கள் முஸ்லிம்களை வெளிப்படையாகப் பழித்துரைத்துக் குற்றம் கூற ஆரம்பித்துவிட்டார்கள். குறைஷியர்களின் படையைத் தோற்கடிப்பது என்ன பெரிய விஷயம், எங்களுடன் முஹம்மது (ஸல்) போர் புரிந்தால் எவ்வாறு போர் புரியப்படும் என்பதை நாங்கள் காட்டுவோம் என்று சபைகளில் பகிரங்கமாகக் கூற ஆரம்பித்துவிட்டார்கள். எதுவரை என்றால், ஒரு சபையில் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முகத்துக்கு முன்னால் இதுபோன்ற சொற்களைக் கூறினார்கள். ஆக, அறிவிப்பில் வருகிறது.

பத்ர் யுத்தத்திற்குப் பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்தபோது, ஒரு நாள்

யூதர்களை ஒன்றிணைத்து அவர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். தமது வாதத்தை முன்வைத்து இஸ்லாத்தின்பால் அழைப்பு விடுத்தார்கள். அன்னாரின் இந்த அமைதி நிறைந்த, அனுதாபம் மிக்க சொற்பொழிவுக்கு யூதத் தலைவர்கள் இவ்வாறு பதில் அளித்தார்கள்: முஹம்மதே! (ஸல்) சில குறைஷியர்களைக் கொன்று ஆணவம் கொண்டு விட்டீர் போலும். அவர்கள் போர் திறமையை அறியாதவர்களாக இருந்தனர். எங்களோடு நீர் போரிட்டால், போர் புரிபவர்கள் எப்படி இருப்பார்கள்? என்பது உமக்குத் தெரிந்துவிடும்.

யூதர்கள் பொதுவான அச்சுறுத்தலை மட்டுமே போதுமானதாகக் கருதவில்லை. அதற்கும் மேற்பட்டு, அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைக் கொல்வதற்கான சதித் திட்டத்தை தொடங்கியிருந்ததும் தெரிய வருகிறது. ஏனெனில், அறிவிப்பில் வருகிறது. இந்த நாள்களில் கலப்பற்ற தோழராக இருந்த ஒரு ஸஹாபி தல்ஹா பின் பராஃ மரணிக்க இருந்தபோது அவர்கள், ஒருவேளை நான் இரவில் மரணித்தால் ஜனாஸா தொழுகைக்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு தகவல் கொடுக்கக் கூடாது. என் மூலமாக யூதர்கள் தரப்பிலிருந்து அன்னாருக்கு எந்த அசம்பாவிதமும் ஏற்பட்டு விடக் கூடாது என்று வலியுறுத்திக் கூறியிருந்தார்கள்.

சுருக்கமாக, பத்ர் யுத்தத்திற்குப் பிறகு யூதர்கள் வெளிப்படையாக தீங்கிழைக்க ஆரம்பித்து விட்டார்கள். மதீனாவின் யூதர்களில் பனூ கேன்கோ அனைவரைக் காட்டிலும் ஆற்றல் வாய்ந்தவராகவும், வீரர்களாகவும் இருந்தார்கள். எனவே, அனைவரையும் விட முதலில் அவர்கள் தரப்பிலிருந்து வாக்குறுதி மீறுதல் ஆரம்பமானது. ஆக, வரலாற்றாசிரியர்கள் எழுதுகின்றார்கள்:

மதீனத்து யூதர்களில் அனைவரையும் விட முதலில் பனூ கேன்கோ கோத்திரத்தினர், தமக்கும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கும் இடையில் செய்யப்பட்டிருந்த உடன்படிக்கையை முறித்தனர். பத்ர் போருக்குப் பிறகு அவர்கள் அதிகம் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்துவிட்டனர். பகிரங்கமாக காழ்ப்புணர்ச்சியையும், பொறாமையையும் வெளிப்படுத்தினார்கள்.

வாக்குறுதியையும், உடன்படிக்கையையும் முறித்துவிட்டார்கள். ஆனால், இதுபோன்ற விஷயங்கள் நடந்தும் கூட முஸ்லிம்கள் தம் எஜமானரின் வழிகாட்டலின் கீழ் எல்லா விதத்திலும் பொறுமையாக செயல்பட்டார்கள். தம் தரப்பிலிருந்து தாக்குதல் நடக்க விடவில்லை. இன்னும் சொல்வதன்றால், ஹதீஸில் வருகிறது. இந்த உடன்படிக்கைக்குப் பிறகு, யூதர்களுடன் என்ன நடந்தது? என்றால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் யூதர்களின் மனமகிழ்வைக் குறிப்பாக கருத்தில் கொண்டு வந்தார்கள்.

ஆகவே, ஒருமுறை முஸ்லிமுக்கும் ஒரு யூதருக்கும் சிறிது கருத்து வேறுபாடு ஏற்பட்டுவிட்டது. (யூதர்) ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு எல்லா நபிமார்களைக் காட்டிலும் சிறப்பு உள்ளதாகக் கூறினார். இதைக் கேட்ட ஸஹாபிக்குக் கோபம் வந்துவிட்டது. அவர்கள் யூதருடன் சற்று கடுமையாக நடந்து கொண்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைத் தூதர்களுள் சிறந்தவர் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இந்த சம்பவம் பற்றி தெரிய வந்தபோது அன்னார் கோபமடைந்தார்கள். அந்த ஸஹாபியைக் குற்றம் சாட்டியவாறு, இறைவனின் தூதர்களில் ஒருவர் மற்றவர் மீது சிறப்பை எடுத்துரைப்பது உங்கள் பணியல்ல என்று கூறினார்கள். பின்னர், அன்னார் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் ஒரு சிறப்பம்சத்தை எடுத்துரைத்து யூதரை மகிழ்வித்தார்கள்.

ஆனால், இந்த மனமகிழ்ச்சி ஏற்படுத்தும் வகையில் அவர்களுடன் நடந்து கொள்ளப்பட்டிருந்தும் கூட யூதர்கள் தங்களது தீங்கில் முன்னேறிக் கொண்டே சென்றனர். கடைசியில் சுயம் யூதர்கள் தரப்பிலிருந்தே போருக்கான காரணம் ஆரம்பமானது. அவர்களது உள்ளப் பகைமை அவர்களின் நெஞ்சங்களிலிருந்து வெளிப்பட்டு விட்டது.

அது எப்படி நடந்தது என்றால், ஒரு முஸ்லிம் பெண்மணி சந்தையில் ஒரு யூதரின் கடையில் சில பண்ட பொருள்கள் வாங்குவதற்காகச் சென்றார். அந்த நேரத்தில் அந்தக் கடையில் அமர்ந்திருந்த சில தீய யூதர்கள் அந்தப் பெண்ணை மிகவும் ஒழுக்கக் கேடான முறையில் சீண்டினார்கள்.

சுயம் கடைக்காரனே என்ன தீமையைச் செய்தான் என்றால், அந்தப் கவனமற்றிருக்கும் போது அவரது கீழாடையின் அடிப்பகுதியின் ஓரத்தை ஏதோ முள் போன்ற ஒன்றில் அவரது முதுகில் இருந்த ஆடையோடு சேர்த்து தொங்க விட்டுவிட்டான். அதன் விளைவாக, அந்தப் பெண் அவர்களது ஒழுக்கமற்ற வழிமுறையைப் பார்த்து அங்கிருந்து எழுந்து திரும்பிச் செல்ல முற்பட்டபோது நிர்வாணமாகிவிட்டார். இதைப் பார்த்த அந்த யூதக் கடைக்காரனும், அவனது கூட்டாளிகளும் உரக்க சப்தமிட்டு சிரிக்க ஆரம்பித்தார்கள்.

முஸ்லிம் பெண்மணி வெட்கத்தால் உரக்க கத்தி, உதவிக்கு அழைத்தார். தற்செயலாக ஒரு முஸ்லிம் அங்கு அருகில் இருந்தார். அவர் அந்த இடத்திற்கு ஓடிச் சென்றார். ஒருவர் மற்றவருடனான சண்டையில் யூதக் கடைக்காரன் கொல்லப்பட்டான். இதனால், நாலாப்புறமிருந்தும் அந்த முஸ்லிம் மீது வாள்கள் வீசப்பட்டன. அந்த தன்மான உணர்வு கொண்ட முஸ்லிம் அங்கேயே மாண்டு வீழ்ந்தார்.

முஸ்லிம்களுக்கு இந்த சம்பவத்தைப் பற்றி தெரிய வந்த போது சமுதாயத்திற்கான தன்மான உணர்வினால் அவர்களின் கண்களில் கண்ணீர் வந்தது. மறுபுறம் அந்தச் சண்டையைப் போருக்கு சாக்குப்

போக்காக ஆக்க நினைத்திருந்த யூதர்கள் கூட்டத்தைக் கூட்டி ஒன்று சேர்ந்தனர். ஒரு கலவரத்திற்கான சூழல் உருவாகிவிட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு தகவல் கிடைத்ததும், அன்னார் பனூ கேன்காவின் தலைவர்களை ஒன்று திரட்டி, இந்த முறை சரியல்ல; நீங்கள் அந்தத் தீங்குகளிலிருந்து தவிர்ந்திருங்கள். இறைவனுக்கு அஞ்சுங்கள் என்று கூறினார்கள்.

அவர்கள் வருத்தத்தை வெளிப்படுத்தி வெட்கப்பட்டு மன்னிப்பு கேட்பதற்கு பகரமாக, முன்னாலிருந்து சற்றும் கீழ்படியாத வகையில் பதிலளித்தனர். பிறகு, மீண்டும் அதே மிரட்டலை விடுத்தனர். அதாவது பத்ர் வெற்றியில் ஆணவம் கொள்ளாதீர்கள். எங்களுடன் போர் நடக்கும்போது, போர் புரிபவர்கள் எப்படி இருப்பார்கள் என்று தெரிந்துவிடும் என்றார்கள்.

அன்னார் வேறு வழியின்றி ஸஹாபிகளின் ஒரு கூட்டத்தைக் உடன் அழைத்துக் கொண்டு பனூ கேன்காவின் கோட்டைகளை நோக்கி புறப்பட்டுச் சென்றார்கள். இது அந்த மக்கள் தமது செய்கைகளுக்காக வருத்தப்படுவதற்கான கடைசி வாய்ப்பாக இருந்தது. ஆனால், அவர்களும் முன்னால் இருந்து போருக்கு ஆயத்தமாகி விட்டார்கள். ஆக, போர் அறிவிப்பு செய்யப்பட்டது.

இஸ்லாம் மற்றும் யூதத்தின் ஆற்றல்கள் ஒன்று மற்றதற்கு எதிராக முன் வந்தன. அந்தக் காலத்தின் வழக்கத்திற்கு ஏற்ப தமது கோட்டையில் பாதுகாப்பாக உட்கார்ந்து இருந்து விடுவது போருக்கான ஒரு வழிமுறையாக இருந்தது. பின்னர் முற்றுகையிடப்படும். எதிர் தரப்பினர் கோட்டையை முற்றுகையிட்டு விடுவார்கள். பின்னர், அவ்வப்போது ஒருவர் மற்றவர் மீது தாக்குதல் தொடுத்து வந்தனர்.

எதுவரை எனில், ஒன்று முற்றுகையிட்டிருக்கும் படை கோட்டையைக் கைப்பற்றுவதை விட்டும் நிராசையடைந்து முற்றுகையை அகற்றி விடுவார்கள் அல்லது அடைபட்டு இருந்தவர்கள் வெற்றி பெற்றதாகக் கருதப்பட்டு வந்தது. அது அடைபட்டவர்கள் பெற்ற வெற்றியாகக் கருதப்பட்டு வந்தது. (அல்லது) அடைபட்டு இருப்பவர்கள் போரை சமாளிக்க முடியாமல் கோட்டைக் கதவைத் திறந்து வெற்றி பெற்றவர்களிடம் தம்மை ஒப்படைத்து விடுவார்கள்.

அந்த சந்தர்ப்பத்திலும் பனூ கேன்கா கோத்திரத்தினர் இந்த வழிமுறையையே மேற்கொண்டார்கள். தம்முடைய கோட்டைகளில் அடைபட்டு இருந்து கொண்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களை முற்றுகையிட்டார்கள். தொடர்ந்து 15 நாட்கள் முற்றுகை தொடர்ந்தது.

கடைசியில் பனூ கேன்காவின் முழு ஆற்றலும், அகம்பாவமும் அழிந்து போன பிறகு, அவர்கள் தம் செல்வங்களை முஸ்லிம்கள் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அவர்களின் உயிர்கள் மற்றும் மனைவி மக்கள் மீது முஸ்லிம்களுக்கு எந்த உரிமையும் இருக்காது என்ற நிபந்தனையின் பேரில் கோட்டைகளின் கதவுகளைத் திறந்துவிட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த நிபந்தனையை ஏற்றுக் கொண்டார்கள்.

ஆயினும், மூஸவிய்ய ஷரீஅத்தின் அடிப்படையில் இந்த மக்கள் அனைவரும் கொல்லப்பட வேண்டியவர்களாக இருந்தனர். உடன்படிக்கை படி அந்த மக்களிடம் மூஸவிய்ய ஷரீஅத்தின் அந்த தீர்ப்பைத் தான் செயல்படுத்த வேண்டியிருந்தது. ஆனால், இது அந்த சமுதாயத்தின் முதல் குற்றமாக இருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கருணை மிக்க, பரிவுள்ள உள்ளம் கடைசி சிகிச்சையாக இருக்கும் தண்டனையின் எல்லையை நோக்கி செல்ல முடியாததாக இருந்தது. ஆனால், மறுபக்கம் இத்தகைய வாக்குறுதியை மீறிய எதிரி கோத்திரம் ஒன்று, மதீனாவில் வசிப்பதும் கூட கைக்குள் பாம்பை வளர்ப்பதைக் காட்டிலும் குறைவான விஷயமாக இருக்கவில்லை.

குறிப்பாக, அவ்ஸ் மற்றும் கஸ்ரஜின் ஒரு நயவஞ்சகக் கூட்டம் ஏற்கனவே மதீனாவில் இருந்தது. வெளிப்புறத்திலிருந்தும் முழு அரேபியாவின் எதிர்ப்பானது முஸ்லிம்களை இக்கட்டான நிலையில் ஆழ்த்தியிருந்தது. இத்தகைய நிலையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பனூ கேன்கா கோத்திரம் மதீனாவை விட்டுச் சென்றுவிட வேண்டும் என்றுதான் தீர்மானித்திருக்க முடியும். இந்த தண்டனை அவர்கள் செய்த குற்றத்தோடு ஒப்பிடுகையில் அந்தக் காலத்தின் நிலைமையைக் கருத்திற் கொண்டு மிகவும் மென்மையான ஒரு தண்டனையாக இருந்தது.

உண்மையில் அதில் சுய பாதுகாப்பு அம்சமும் கருத்திற் கொள்ளப்பட்டிருந்தது. அரேபியாவின் நாடோடி சமுதாயங்களின் பார்வையில், இடம் பெயர்ந்து செல்தல் ஒரு பெரிய விஷயமாக இருக்கவில்லை. குறிப்பாக, ஒரு கோத்திரத்தின் சொத்து பத்துகள், நிலங்கள் மற்றும் தோட்டங்கள் வடிவில் இல்லாதபோது.

உதாரணமாக, பனூ கேன்காவுக்கும் அப்படி இருக்கவில்லை. மேலும், முழு கோத்திரத்தையும் அமைதியோடு ஓரிடத்தில் விட்டுவிட்டு வேறு இடத்தில் சென்று வசிப்பதற்கான சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைத்துவிடும்.

எனவே, பனூகைனுக்கா கோத்திரத்தினர் மிகவும் நிம்மதியோடு மதீனாவை விட்டுவிட்டு சிரியா பக்கம் சென்றுவிட்டார்கள். அவர்களது பயணம் தொடர்பான அவசியமான ஏற்பாடுகள் மற்றும் கண்காணிப்பு ஆகிய பணிகளை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம் சஹாபி உபாதா பின் ஸாமித் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள்.

அவர்கள் அன்னாரின் நட்புக் கோத்திரத்தைச் சேர்ந்தவராக இருந்தார்கள். எனவே, உபாதா பின் ஸாமித் (ரலி) அவர்கள் கொஞ்சம் பயண தூரம் வரை பனூ கைனுக்காவோடு சென்றார்கள். பின்னர், அவர்களைப் பாதுகாப்பான முறையில் முன்னால் அனுப்பி வைத்துவிட்டு திரும்பி வந்துவிட்டார்கள். முஸ்லிம்களின் கைக்குக் கிடைத்த போர்ச் செல்வங்களில் போருக்கான ஆயுதங்கள் மற்றும் வியாபாரம் சம்மந்தப்பட்ட பொருட்கள் மட்டுமே இருந்தன.

பனூ கைனுக்கா தொடர்பாக சில அறிவிப்புகளில் கூறப்பட்டுள்ளது:

அவர்கள் தம்முடைய கோட்டைகளின் கதவுகளைத் திறந்து தம்மை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ஒப்படைத்து விட்ட போது அவர்களின் வாக்குறுதி மீறல், கிளர்ச்சி மற்றும் தீங்குகள் காரணமாக, அவர்களின் போர் வீரர்களான ஆண்களைக் கொன்றுவிட வேண்டும் என்பது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நோக்கமாக இருந்தது.

ஆனால், நயவஞ்சகர்களின் தலைவன் அப்துல்லாஹ் பின் உபை ஸூலூல் உடைய பரிந்துரையின் பேரில் அன்னார் இந்த எண்ணத்தைக் கைவிட்டார்கள்.

ஆனால், இந்த விஷயத்திற்கு எந்தச் சான்றும் இல்லை. ஆய்வு செய்பவர்கள் இந்த அறிவிப்புகளை சரியானவையாகக் கருதுவதில்லை. ஏனெனில், பனூ கேன்கா கோத்திரத்தினர் தம்மையும் தம் மனைவி மக்களையும் மன்னித்து உயிரோடு விடுவதற்கான நிபந்தனையின் பேரில் கதவுகளைத் திறந்தார்கள் என்பது மற்ற அறிவிப்புகளில் தெளிவாகக் கூறப்பட்டுள்ள போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்த நிபந்தனையை ஏற்றுக் கொண்டு விட்ட பிறகு, வேறு வழியை மேற்கொண்டிருப்பார்கள் என்பதும், பின்னர் கொல்வதற்கு முயற்சி செய்தார்கள் என்பதும் ஒருபோதும் நடந்திருக்காது.

எனவே இது முற்றிலும் தவறான விஷயமாகும். எனினும், பனூ கைனுக்கா தரப்பிலிருந்து மன்னித்து உயிரோடு விடுவதற்கான நிபந்தனை முன் வைக்கப்பட்டது, தமக்கான அசல் தண்டனை கொல்லப்படுவதுதான் என்பதை அவர்களே புரிந்து வைத்திருந்தார்கள் என்பதைக் காட்டுகிறது. ஆனால், அந்த மக்கள் ஹஸ்ரத் ரஸூல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கருணையை வேண்டினார்கள்.

அவர்கள் தமக்கு மரண தண்டனை வழங்கப்படக்கூடாது என்ற வாக்குறுதியைப் பெற்ற பிறகு தம்முடைய கோட்டைகளின் கதவுகளைத் திறக்க விரும்பினார்கள். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது கருணை உள்ளத்தால் அவர்களை மன்னித்துவிட்டிருந்தார்கள்.

ஆனால், வல்ல இறைவனின் பார்வையில் இந்த மக்கள் தம்முடைய தீய செயல்கள் மற்றும் குற்றங்கள் காரணமாக, இப்பொழுது உலகத்தில் உயிருடன் விடப்படுவதற்குத் தகுதி வாய்ந்தவர்களாக இருக்கவில்லை என்பது தெரிய வருகிறது.

எனவே, அறிவிப்பில் வருகிறது. இவர்கள் நாட்டை விட்டு எங்கு

சென்றார்களோ அங்கு அவர்களுக்குத் தற்போது ஓராண்டு காலம் கூட கழிந்திருக்காது, அதற்குள் எத்தகைய ஒரு நோய் பரவியது என்றால், முழுக் கோத்திரமும் அதற்கு இரையாகி மண்ணில் மறைந்தது;

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் எம்.ஏ. (ரலி) அவர்களின் நூல்: ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 457- 461)

அழிந்து போனது. பனூ கைனுக்கா போர் துல் ஹஜ்ஜாஹ் ஹிஜ்ரீ 2 ஆம் ஆண்டு நடைபெற்றது. எவ்வாறு இருப்பினும், அதில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் கொடியை ஏந்தியிருந்தார்கள்.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் ஷஹாதத் குறித்த விஷயம் உள்ளது. அன்னார் உஹது போரில் ஷஹீத் ஆனார்கள். இது முன்னர் கூறப்பட்டுவிட்டது. அல்லாஹ் இதைப் பற்றி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் கனவின் மூலமாகத் தெரியப்படுத்தி இருந்தான். எனவே, ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கனவில் பார்த்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நான் ஒரு செம்மறியாட்டைப் பின் தொடர்வதாகவும், எனது வாளின் முனை உடைந்து விட்டதாகவும் கனவில் பார்த்தேன். அதற்கு நான், சமுதாயத்தின் செம்மறியாட்டைக் கொல்வேன், அதாவது அவர்களின் படைத்தளபதியைக் கொல்வேன் என்று விளக்கம் அளித்தேன். வாளின் முனைக்கு, எனது குடும்பத்தில் ஒருவர் என்று நான் விளக்கம் அளித்தேன்.

பின்னர், ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் ஷஹீத் ஆக்கப்பட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இணை வைப்பாளர்களின் கொடியை ஏந்தியிருந்த தல்ஹாவைக் கொன்றார்கள்.

(முஸ்தத்ரக் அலஸ் ஸஹீஹைன் லில் ஹாகிம், பாகம் 5,பக்கம் 1834, நூல்: மஃரூஃபத்திஸ் ஸஹாபா, ஹதீஸ் எண்: 4896)

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் உடல் சிதைக்கப்பட்டது. தோற்றம் சீர்குலைக்கப்பட்டது. மூக்கு, காது, ஆகியவை அறுக்கப்பட்டன. அவர்களின் வயிறு கிழிக்கப்பட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அன்னாரின் இந்த நிலையைக் கண்டபோது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு கடுமையான வேதனை ஏற்பட்டது.

அன்னார் (ஸல்) கூறினார்கள்: அல்லாஹ் எனக்கு குறைஷியர்கள் மீது வெற்றி வழங்கினால், நான் அவர்களின் 30 பேரின் உடலை சிதைத்துவிடுவேன் என்று கூறினார்கள். ஆனால், மற்றோர் அறிவிப்பில் அவர்களின் 70 பேரின் உடலை சிதைத்துவிடுவேன் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஆணையிட்டுக் கூறியதாக வருகிறது. அதற்கு இந்த வசனம் இறங்கியது

عَاقَبْتُمْ فَعَاقِبُوْا بِمِثْلِ
مَا عُوْقِبْتُمْ بِهٖ وَلَئِنْ صَبَرْتُمْ لَهُوَ خَيْرٌ لِّلصّٰبِرِيْنَ

நீங்கள் தண்டனை வழங்கினால், உங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியின் அளவிற்கே தண்டனை வழங்க வேண்டும். ஆனால், நீங்கள் பொறுமையை மேற்கொண்டால் நிச்சயமாக அது பொறுமையை மேற்கொள்பவருக்கு மிகச் சிறந்ததாகும்.

இதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், பொறுமை காப்போம், என்று கூறி தமது சத்தியத்துக்கு ஈட்டுத் தொகை வழங்கிவிட்டார்கள். ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நேற்றிரவு நான் சொர்க்கத்தில் நுழைந்தபோது ஒரு காட்சியைக் கண்டேன். (ஹஸ்ரத் நபி (ஸல்) கண்டார்கள்) நான் வானவர்களோடு இணைந்து ஜஃபர் பறப்பதைப் பார்த்தேன். ஆனால், ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களோ அரியணையில் சாய்ந்திருக்கிறார்கள்.

(முஸ்தத்ரக் அலஸ் ஸஹீஹைன் லில் ஹாகிம், பாகம் 5,பக்கம் 1832, நூல்: மஃரூஃபத்திஸ் ஸஹாபா, ஹதீஸ் எண்: 4890)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹது நாளன்று ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களைக் கடந்து சென்றார்கள். அன்னாரது மூக்கு, காது, ஆகியவை வெட்டப்பட்டிருந்தன. உடல் சிதைக்கப்பட்டிருந்தது. இதைக் கண்ட அன்னார் (ஸல்), எனக்கு ஸஃபிய்யாவின் வேதனை மற்றும் துயரத்தைப் பற்றிய சிந்தனை இல்லாமல் இருந்திருந்தால் நான் அவர்களை அப்படியே விட்டிருப்பேன். எதுவரை என்றால், அல்லாஹ் அன்னாரைப் பறவைகள் மற்றும் காட்டு விலங்குகளின் வயிற்றிலிருந்தே உயர்த்தியிருப்பான். பின்னர், அன்னாருக்கு ஒரு போர்வையில் கஃபன் கொடுக்கப்பட்டது.

(முஸ்தத்ரக் அலஸ் ஸஹீஹைன் லில் ஹாகிம், பாகம் 5, பக்கம் 1831, நூல்: மஃரூஃபத்திஸ் ஸஹாபா, ஹதீஸ் எண்: 4887)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் ஷஹாதத்தையும் அன்னாரின் சடலத்தையும் பார்த்து உணர்வுகளை வெளிப்படுத்துதல் மற்றும் பொறுமைக்கான முன்மாதிரியைத் தாம் மட்டும் காட்டாமல் அதற்கும் அப்பாற்பட்டு ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் சகோதரியான தம் மாமியையும் இந்த விஷயத்திற்குக் கட்டுப்படச் செய்தல் ஆகியவற்றைப் பற்றி முன்னரும் சிறிது கூறப்பட்டு விட்டது.

அடுத்து, ஒப்பாரி வைக்கக்கூடிய அன்ஸாரி பெண்களை ஒப்பாரி வைப்பதைவிட்டும் தடுத்த சம்பவம் உள்ளது. இந்த சம்பவத்தை ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் தமது கிலாஃபத்துக்கு முன்னர் நடைபெற்ற ஓர் ஆண்டு மாநாட்டின் சொற்பொழிவில் எடுத்துரைத்தார்கள்.

அதை நான் எடுத்துக் கூறிவிடுகிறேன். அதன் மூலம், இந்த சம்பவத்திலிருந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க நல்லொழுக்கத்தைப் பற்றியும் தெரிய வருகிறது. எவ்வாறு இருப்பினும், இங்கு அதை எடுத்துக் கூறுவது பொருத்தமானது. முன்னர் ஹதீஸ்களின் ஆதாரத்தில் சுருக்கமாக எடுத்துரைக்கப்பட்டுவிட்டது.

அன்னார் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் மீது இருந்த அன்பு, உஹது போரின் மாலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் உடலுக்கு அருகில் நின்று கூறிய அந்தச் சொற்களில் இருந்து வெளிப்படுகிறது.

அன்னார் (ஸல்) கூறினார்கள்:

ஹம்ஸாவே! இன்று எனக்கு இருக்கும் கோபம் மற்றும் நீர் கொலையுண்ட இடத்தில் நின்று எனக்கு ஏற்பட்ட வேதனையை போன்ற ஒரு வேதனையை அல்லாஹ் இனி ஒருபோதும் எனக்கு அளிக்க மாட்டான். அப்பொழுது அன்னாரின் மாமியும் ஹஸ்ரத் ஹம்ஸாவின் சகோதரியுமான ஹஸ்ரத் ஸஃபிய்யாவும் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டு அங்கு வந்தார்கள்.

அன்னார் பொறுமையை இழந்துவிடக்கூடாது என்ற அச்சத்தில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் உடலைப் பார்ப்பதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முதலில் அனுமதி வழங்கவில்லை. ஆனால், அன்னார் பொறுமை காப்பதாக வாக்குறுதி வழங்கியதும் அன்னார் (ஸல்) அனுமதி வழங்கிவிட்டார்கள்.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் கொலையுண்ட இடத்திற்கு அன்னார் வந்தார்கள். அல்லாஹ் மற்றும் இறைத் தூதரின் சிங்கமான தம் அன்பிற்குரிய சகோதரரின் உடலை எந்த நிலையில் முன்னால் இருக்கக் கண்டார்கள் என்றால், கொடுமைக்காரர்கள், நெஞ்சைப் பிளந்து இதயத்தை வெளியில் எடுத்திருந்தார்கள். முகத்தின் தோற்றத்தையும் பயங்கரமாக சிதைத்திருந்தார்கள். ஒவ்வொரு கனமும் உள்ளம் வேதனையால் தாழ்ந்து கொண்டே சென்றது. ஆனால், ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் தமது பொறுமைக்கான வாக்குறுதியில் நிலை நின்றார்கள்.

பொறுமையின்மைக்கான ஒற்றைச் சொல்லைக் கூட வாயில் வர விடவில்லை. ஆனால், கண்ணீரை எப்படி தடுக்க முடியும்? இன்னா லில்லாஹ் ஓதிக்

கொண்டிருந்தார்கள். அழுதவாறே அங்கேயே அமர்ந்து கொண்டார்கள். வேதனைக்குள்ளாயிருந்த, பொறுமையான கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. அறிவிப்பாளர் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களும் உடன் அமர்ந்து கொண்டார்கள். அன்னாரின் கண்களில் இருந்தும் கட்டுப்பாடின்றி கண்ணீர் வழிய ஆரம்பித்தது.

ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களின் கண்ணீர் குறையும்போது, ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கண்ணீரும் குறைந்துவிடும். ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களின் கண்ணீர் வேகம் எடுக்கும்போது, ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கண்ணீரும் வேகம் எடுத்துவிடும். இந்நிலையிலேயே சில நிமிடங்கள் கழிந்தன.

ஆக, ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாரின் வீட்டாரின் துக்கம் இந்த சில மௌனமான கண்ணீரை விட வேறு எதுவும் இருக்கவில்லை. இதுதான் மாநபி (ஸல்) அவர்களின் நடைமுறையாகும். அன்னார் மதீனாவில் நுழைந்தபோது மதீனா முழுவதும் மௌத்து வீடாக மாறியிருந்தது. ஒவ்வொரு வீட்டிலிருந்தும் உஹது போரின் ஷஹீத்களின் நினைவாக ஒப்பாரி வைப்பவர்களின் அழுகை சப்தம் உயர்ந்து கொண்டே சென்றது.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இதைக் கேட்டபோது மிகவும் வேதனையோடு இவ்வாறு கூறினார்கள்: ஹம்ஸாவிற்காக ஒப்பாரி வைத்து அழுபவர் எவரும் இல்லை. ஆமாம்! நபியின் வீட்டார் அனைவருக்கும் பொறுமை காப்பதற்கான வலியுறுத்தல் காலையும், மாலையும் வழங்கப்பட்டிருக்கும் நிலையில், ஹம்ஸாவுக்காக ஒப்பாரி வைப்பவர் யார் இருக்க முடியும்?

ஹுஸுர் (ஸல்) அவர்களின் வேதனை மிக்க இந்தச் சொற்களை சில அன்ஸார் சகோதரர்கள் கேட்ட போது, துடித்துப் போனார்கள். வீடுகளுக்கு ஓடிச் சென்று மற்றவர்களுக்காக துக்கம் கொள்வதை விட்டு விடுங்கள். ஹம்ஸாவுக்காக துக்கம் கொள்ளுங்கள் என்று தம் மனைவிமார்களுக்குக் கட்டளையிட்டார்கள். பார்த்துக் கொண்டிருக்கையிலேயே எல்லாப் பக்கத்திலிருந்தும் ஹம்ஸாவுக்காக ஒப்பாரி அழுகை சத்தம் உயர்ந்தது. ஒவ்வொரு வீடும் ஹம்ஸாவுக்கான மௌத்து வீடாக மாறிவிட்டது.

அன்ஸார் சகோதரர்களின் மனைவிமார்கள் ஒப்பாரி பாடியவாறு கண்ணீர் வடித்தார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கருணை இல்லத்திற்கு முன்னரும் ஒன்று கூடிவிட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் சத்தத்தைக் கேட்டு வெளியே பார்த்தபோது, அன்ஸாரிகளின் மனைவிமார்களின் ஒரு பெருங்கூட்டம் இருந்தது.

ஹுஸுர் (ஸல்) அவர்கள் அந்த மக்களின் அனுதாபத்திற்காக அவர்களுக்கு துஆ செய்தார்கள். மேலும், நன்றி தெரிவித்தார்கள். ஆனால், அத்துடன் மரணித்தவர்களுக்காக ஒப்பாரி வைப்பது ஆகுமானதல்ல என்பதையும் கூறிவிட்டார்கள். எனவே, அந்த நாளில் இருந்து ஒப்பாரி வைக்கும் சம்பிரதாயம் கைவிடப்பட்டது.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலடிகளில் நம்முடைய உயிர்கள் அர்ப்பணமாகட்டும்! எத்தகைய மேன்மை மிக்க, நல்லொழுக்கம் வழங்கும் ஆசிரியராக அன்னார் இருந்தார்கள். அன்னார் ஆன்மீகம் எனும் விண்ணிலிருந்து நமக்கு மார்க்கத்தைக் கற்பிப்பதற்காக இறங்கினார்கள். இந்த அறிவுரை கூறுபவர் எத்தகைய முன்னோக்குப் பார்வை உடையவராகவும், புத்திக்கூர்மை உடையவராகவும் இருந்தார்கள்.

அன்னாரின் பார்வை மனித இயல்பின் பாதாளம் வரை கடந்து சென்று வந்தது. ஒருவேளை அன்னார் அன்ஸார் சகோதரர்களின் மனைவிமார்களை, அவர்கள் தம் ஷஹீதுகளுக்காக ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கும்போது தடை செய்திருந்தால் சில உள்ளங்களுக்கு இது கஷ்டமாக இருந்திருக்கலாம். மேலும்,

இந்தப் பொறுமை அவர்களுக்கு அவர்களின் பொறுமையை சோதிக்கக்கூடியதாக அமைந்திருக்கலாம்.

ஆனால், பாருங்கள்! அன்னார் எப்படி நுட்பமான முறையில் முதலில் அவர்களது ஒப்பாரியின் திசையை தம் சிறிய தந்தை ஹம்ஸாவின் பக்கம் திருப்பினார்கள். பின்னர், ஒப்பாரி வைப்பதைத் தடுத்தார்கள் எனும்போது, ஒருவகையில் தம் சிறிய தந்தைக்காக ஒப்பாரி வைப்பதைத் தடுத்தார்கள். அல்லாஹ்வின் தேர்வு அல்லாஹ்வின் தேர்வுதான்!

பாருங்கள்! அல்லாஹ் தன் படைப்பினங்களுக்காக எத்தகைய மேன்மைக்குரிய அறிவுரை கூறுபவரை அனுப்பியுள்ளான். அன்னார் மனிதர்களின் இயல்புகளின் நுணுக்கங்களையும், மென்மையையும் நன்றாக அறிந்திருந்தார்கள். தம் அடிமைகளின் மென்மையான உணர்வுகளை எந்த அளவு கருத்தில் கொண்டிருந்தார்கள்.

ஹுஸுர் (ஸல்) அவர்களின் இந்த தோரணைகள் மீது பார்வை படும்போது, உள்ளம் நெஞ்சுக்குள் துடிக்கிறது. துள்ளுகிறது. நம்மையும் அறியாமல் உள்ளத்தில் இருந்து இநத ஓசை வருகிறது; எங்கள் உயிர்கள், எங்கள் செல்வங்கள், எங்கள் சந்ததிகள் தங்கள் காலடியில் அர்ப்பணம்!

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்கள் மீது இலட்சக்கணக்கான துரூதுகளும் கோடிக்கணக்கான ஸலாமும் உண்டாகுவதாக!

தமது அழகு மற்றும் பேருதவியின் கடல் கரையற்றதாகவும், அழியாததாகவும் இருக்கும் அந்த மாமனிதரே! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்கள் மீது இலட்சக்கணக்கான துரூதுகளும் கோடிக்கணக்கான ஸலாமும் உண்டாகுவதாக!

வானம் மற்றும் பூமியின் ஏகனும் தனித்தவனுமான இறைவன் மீது ஆணையாக! வானம் மற்றும் பூமியில் அவனுடைய படைப்பினங்கள் அனைத்திலும் தாங்கள் தனித்தவரும், ஈடுஇணையற்றவரும் ஆவீர்கள். தங்களைப் போன்ற ஒருவர் இருந்ததுமில்லை. இருக்கவுமில்லை. இருக்கவும் மாட்டார்.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பில் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியைப் பற்றியும் கூறப்பட்டுவிட்டது. இத்துடன் இது இங்கு நிறைவடைகிறது.

இப்போது நான், மற்ற சிலரைப் பற்றி இனி வரும் காலங்களில் எடுத்துரைப்பேன். இன்ஷாஅல்லாஹ்

நாளை புத்தாண்டும் ஆரம்பமாகிறது. இன்ஷா அல்லாஹ். துஆ செய்யுங்கள். அல்லாஹ் புத்தாண்டில் பரக்கத்துகளைக் கொண்டு வருவானாக.! அந்த பரக்கத்துகளை நமக்கு வழங்குவானாக! அது ஜமாஅத்திற்கும் எல்லா வகையிலும் அருளுக்குரியதாகட்டுமாக எதிரியின் எல்லா சூழ்ச்சிகளையும் அல்லாஹ் மண்ணோடு மண்ணாக்குவானாக! உலகில் பரவியிருக்கும் ஜமாஅத்துகளுக்கு அல்லாஹ் முன்னரை விட அதிகம் தமது படைப்பின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

அவ்வாறே, பொதுவாக உலகிற்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களைப் போர்களிலிருந்து காப்பாற்றுவானாக! நிலைமைகள் பயங்கரத்திலும் பயங்கரமாகிக் கொண்டே செல்கின்றன. அழிவு வாயைப் பிளந்து கொண்டு நிற்கிறது. என்ன ஆகும்? என்று தெரியாது. ஒவ்வொருவரும் தனது பலனை நாடுகிறார். அல்லாஹ்வே கருணை புரிய வேண்டும்!

அநீதிக்குள்ளாக்கப்படுகின்ற உங்கள் (ஆன்மீக) சகோதரர்களுக்காகவும் அதிகமாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் வரும் வருடத்தில் எல்லா விதமான அநீதி மற்றும் அக்கிரமங்களிலிருந்து அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பாதுகாத்து வைப்பானாக!.

ஆமீன்!

தமிழாக்கம் :

மவ்லவி அதாவுல் முக்னீ

* * * * *

## முஸ்லிஹ் மவ்வூத் (வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி) தொடர்பான முன்னறிவிப்பின் பின்னணி முக்கியத்துவம் மற்றும் அதற்கு உகந்தவர் - (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் எழுத்துக்களின் ஒளியில்)

(ஸய்யது பஷாரத் அஹ்மத், சத்ர் முஹல்லா பாபுல் அமன், காதியான்)

கருணையாளன் மற்றும் கண்ணியத்திற்குரிய இறைவன் இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் உண்மைக்கு சான்றாக என்னென்ன அடையாளங்கள் வழங்கியிருந்தானோ அவற்றில் ஒரு மிகப் பெரிய அடையாளம் முஸ்லிஹ் மவ்வூத் அவர்களைப் பற்றிய முன்னறிவிப்பாகும். இந்த முன்னறிவிப்பின் பின்னணி என்ன? அதற்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் மற்றும் மகத்துவம் உள்ளது? மேலும், இந்த முன்னறிவிப்பு யாரைக் குறித்து கூறப்பட்டுள்ளது? இந்த அனைத்து கேள்விக்கான பதில்களும், விளக்கங்களும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் எழுத்தில் உள்ளது.

### முன்னறிவிப்பின் பின்னணி:

வாக்களிக்கப்பட்ட மஹ்தி மற்றும் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) காதியானி அவர்களின் மகத்துவமான நூல் பராஹீனே அஹ்மதிய்யா வெளியான பிறகு ஒருபுறம் இஸ்லாமிய உலகம் மகிழ்ச்சியின் அலையில் ஆழ்ந்தது. மறுபுறம், இஸ்லாத்தின் எதிரிகளிடம் ஒரு பதட்டத்தை ஏற்படுத்திவிட்டது. அன்னார் இந்த புத்தகத்தில் உலகத்தை நோக்கி இவ்வாறு நற்செய்தியை வழங்கியுள்ளார்கள்:

எல்லாம் வல்ல இறைவன் இந்த எளிமையான அடியானை இக்காலத்தில் பிறக்க வைத்து மேலும் நூற்றுக்கணக்கான விண்ணின் அடையாளங்களையும் மறைவான செய்திகளையும் இறை ஞானங்களின் உண்மைகளையும் வழங்கியதுடன் அறிவு ஒப்புக் கொள்ளக்கூடிய அவ்வாறான நூற்றுக்கணக்கான சான்றுகளின் மீது ஞானத்தை வழங்கி தன்னுடைய நோக்கத்தை வெளிப்படுத்திவிட்டான். அதாவது அதன் மூலம் திருக்குர்ஆனின் உண்மையான போதனைகளை ஒவ்வொரு சமுதாயத்திலும் நாட்டிலும் வெளிப்படுத்தி அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என அவன் விரும்பினான். மேலும், தன்னுடைய வாதத்தை அவர்கள் மீது முழுமைப்படுத்த விரும்பினான். (பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ ஹஸாயின், தொகுதி 1, பக்கம் 596, அடிக்குறிப்பு)

இந்த நற்செயதியை அன்னார் இந்தியாவில் மட்டும் அறிவிக்கவில்லை. மாறாக, கடிதங்கள் மூலமாக வெளிநாடுகளிலும் இந்தத் தூதுச் செய்தியை எட்ட வைத்தார்கள். மேலும் தன்னுடைய சக்திக்கேற்ப இஸ்லாத்தின் எதிரிகளிடமும் வாதத்தை முழுமையான முறையில் எட்ட வைப்பதற்கு முயற்சி செய்தார்கள். தற்போது இஸ்லாத்தின் உண்மைத்துவமும் மற்றும் அதன் அசல் வடிவின் நிலையின் முரசானது உலகின் எல்லா திசைகளிலும் ஒலிக்கின்றது. ஒவ்வொரு விரோதிக்கும் அதன் உயிருள்ள அடையாளங்களை காண்பதற்கு அழைப்பு விடப்பட்டது.

இதற்கிடையில் 1885 ஆம் ஆண்டில் சாஹோகாரான் மற்றும் காதியானைச் சார்ந்த பிற இந்து நண்பர்களின் ஒரு கடிதம் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு கிடைத்தது. அதில் இந்த கோரிக்கை இருந்தது:

இவ்வாறு நீங்கள் இலண்டன் மற்றும் அமெரிக்கா வரை இந்த கட்டுரையை பதிவுத் தபால் மூலம் அனுப்பியுள்ளீர்கள். அதில் உண்மையை நாடுபவர் ஓர் ஆண்டு காலம் வரை காதியான் வந்து எம்முடன் தங்கினால், எல்லாம் வல்ல இறைவன் அந்த நபருக்கு எப்படிப்பட்ட அடையாளங்களை வெளிப்படுத்திக் காட்டுவான் என்றால் அதன் மூலம் இஸ்லாத்தில் உறுதியாக நிற்பதற்கான வாசல் திறக்கப்படும். அது மனித சக்திக்கு அப்பாற்பட்டதாக இருக்கும் என எழுதியிருந்தீர்கள். ஆக, நாங்கள் உங்களுடைய அண்டை வீட்டாராகவும், நகர வாசிகளாகவும் இருக்கின்ற நிலையில் இலண்டன் மற்றும் அமெரிக்காவில் வசிக்கின்றவர்களை விட எங்களுக்குத்தான் அதிக உரிமை இருக்கின்றது.

ஆனால், எப்படிப்பட்ட அடையாளத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம் என்றால் அதில் வானம், பூமி ஆகியவை மேலும் கீழுமாக ஆகிவிட வேண்டும் என்ற நோக்கமில்லை. இயற்கைச் சட்டத்தை மீறுவதையும் நாங்கள் விரும்பவில்லை. ஆனால், நாங்கள் மனித சக்திக்கு அப்பாற்பட்ட அடையாளங்களைக் காண விரும்புகின்றோம். உண்மையான மற்றும் தூய்மையான அந்த பரமேஸ்வர் உங்களின் இறைத் தொடர்பு, இறை நேசம், மார்க்கப்பற்று ஆகியவற்றின் காரணமாக உங்களுடைய துஆக்களை ஒப்புக் கொள்கின்றான் என்பது அந்த அடையாளங்கள் மூலம் வெளிப்பட வேண்டும். மேலும், துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன் அதற்கான செய்தியையும் உங்களுக்கு வழங்கிவிட வேண்டும் அல்லது உங்களுடைய சில மறைவான சிறப்புப் பண்புகளை அவன் வெளிப்படுத்த வேண்டும். மேலும், முன்னறிவிப்பின் அடிப்படையில் அந்த மறைவான ரகசியங்கள் தொடர்பான செய்தியை அவன் உங்களுக்கு வழங்க வேண்டும் அல்லது அற்புதமான முறையில் உங்களுக்கு உதவி மற்றும் ஆதரவு அளிக்க வேண்டும். எவ்வாறு அவன் தொன்றுதொட்டு தன்னுடைய நேசர்கள், நெருக்கத்தைப் பெற்றவர்கள், சீடர்கள் மற்றும் தான் தேர்ந்தெடுத்துக் கொண்ட அடியார்களுடன் நடந்து கொண்டுள்ளானோ அதேபோன்று வெளிப்படுத்த வேண்டும்...........

மேலும், அந்த அடையாளங்களை வெளிப்படுத்துவதற்காக நிர்ணயிக்கப்பட்ட காலகட்டம் செப்டம்பர் 1885 ஆம் ஆண்டின் துவக்கமாக கருதப்படும். அதனுடைய முடிவு செப்டம்பர் 1886 ஆம் ஆண்டின் இறுதி வரை ஆகும். (மஜ்முஆ இஷ்திஹாராத், தொகுதி 1, பக்கம்-92)

இந்தக் கடிதத்தின் இறுதியில் பத்து இந்து நண்பர்களின் பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்திற்கு ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இவ்வாறு பதில் எழுதியிருந்தார்கள்:

தோழர்களின் அன்பு மடல் கிடைத்தது. அதில் நீங்கள் விண்ணின் அடையாளங்களைக் காண வேண்டும் என விண்ணப்பித்திருந்தீர்கள். அக்கடிதம் நீதி மற்றும் உண்மையின் அடிப்படையில் உள்ளது. மேலும், உண்மையை தேடுகின்ற ஒரு பத்து நபர்களைக் கொண்ட குழுவினரால் அது எழுதப்பட்டுள்ளது. எனவே அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக அதில் கூறப்பட்டுள்ள அந்தக் கருத்தை நான் ஏற்றுக் கொள்கின்றேன். மேலும், உங்களிடம் இவ்வாறு உறுதி மொழி அளிக்கின்றேன். அதாவது நீங்கள் அனைவரும் உங்கள் கடிதத்தில் எழுதியுள்ள அந்த விதிமுறைகளுக்கு உட்பட்டு நடந்தால் நிச்சயமாக எல்லாவற்றிற்கும் ஆற்றல் பெற்றுள்ள மற்றும் மகத்துவமிக்க இறைவனின் உதவியுடன் ஒரு வருடத்திற்குள் மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஏதாவது ஒரு அடையாளம் கண்டிப்பாக காட்டப்படும். இந்த எளியவன் நீங்கள் எழுதிய நேர்மையான கடிதத்தை படிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

(மஜ்முஆ இஷ்திஹாராத், தொகுதி 1, பக்கம் 95)

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இந்த பிரசுரத்திலிருந்து வெளிப்படுகின்ற விஷயமானது அன்னார் அந்த இந்துக்களின் கடிதத்தினால் மகிழ்ச்சியடைந்தார்கள் என்பதாகும். அதாவது இஸ்லாத்தின் உண்மைத்துவத்திற்கான அடையாளத்தை அவர்கள் வேண்டினார்கள். எனவே ஹுஸூர் (அலை) அவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு அந்த இணையில்லாத ஒரே இறைவனின் பக்கம் கவனம் செலுத்தினார்கள். அவனின் உதவி மற்றும் வெற்றியின் நிச்சய வாக்குறுதியை பெற்று அன்னார் இஸ்லாத்தின் உண்மைத்துவத்தை அந்த காலத்தில் அறிவித்தார்கள். மேலும், மிகவும் உள்ளச்சத்தோடும், பணிவுடனும், தாழ்மையுடனும் மன்றாடியவாறு அந்த அடையாளத்திற்காக துஆக்கள் செய்தார்கள். அன்னார் அனைத்து விதமான இடையூறுகளிலிருந்தும் விலகியவாறு துஆக்களில் உருக்கத்தையும், தாக்கத்தையும் ஏற்படுத்துவதற்காக தனிமையை மேற்கொள்ள நாடினார்கள். மேலும், அந்த நோக்கத்திற்காக தன்னுடைய உற்றார், உறவினர்களிடமிருந்து விலகியவாறு ஹோஷியார்பூரில் இஃதிகாஃப் இருந்தார்கள். மேலும் உலக ரீதியான அனைத்து தொடர்புகளையும் துண்டித்துவிட்டு அனைத்து விவகாரத்திலிருந்தும் விலகியவாறு எல்லாம் வல்ல அல்லாஹ்வின் சன்னிதானத்தில் துஆக்கள் செய்து வந்தார்கள். மேன்மேலும் கருணை காட்டக்கூடியவனும், கண்ணியத்திற்குரியவனும் ஆகிய இறைவன் அன்னாரின் இந்த துடிப்பு மற்றும் இஸ்லாத்தின் உண்மைக்கான அவர்களின் நிம்மதியின்மையையும் கண்டு அன்னாருக்கு ஆறுதல் வழங்கினான். மேலும் அன்னாரின் துஆக்களை ஏற்றுக் கொண்டவாறு முஸ்லிஹ் மவ்வூத் (வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி) குறித்த முன்னறிவிப்பை அன்னாருக்கு வழங்கினான்.

முஸ்லிஹ் மவ்வூத் தொடர்பான முன்னறிவிப்பு குறித்து இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களின் சில பிரிவுகள் புறமிருந்தும் ஆட்சேபனை செய்யப்பட்டது. ஆனால், ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை)அவர்கள் பிரசுரம் மற்றும் கடிதத்தின் மூலம் அதற்கான பதிலை வழங்கினார்கள். அன்னாரின் இந்த முன்னறிவிப்பிற்கு பிறகு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதன் காரணமாக, முன்னறிவிப்போ ஆண் குழந்தைக் குறித்து செய்யப்பட்டிருந்தது. ஆனால் பெண் குழந்தை பிறந்துள்ளதே என்ற அடிப்படையில் அன்னார் மீது ஆட்சேபனை செய்யப்பட்டது. எல்லாவற்றையும் விட மிக அதிகமாக இவ்விஷயத்தில் கூச்சல் எழுந்தது. அதாவது வீட்டில் குழந்தை பிறப்பது எவ்வாறு அடையாளமாக இருக்க முடியும்? என்று கூச்சல் எழுந்தது.

திருமணத்திற்கு பிறகு குழந்தை பிறப்பது என்பது ஓர் இயற்கை நியதிதான். எனினும், முன்னறிவிப்பை நாம் ஆய்வு செய்து பார்க்கும்போது இவ்விஷயத்தை மிகத் தெளிவாக விளங்க முடியும். அதாவது, எல்லாம் வல்ல அல்லாஹ் ஒன்பது வருட காலகட்டத்திற்குள் ஒரு மகத்துவம் வாய்ந்த ஆண் குழந்தை என்ற செய்தியை வழங்கியிருந்தான். அந்தக் குழந்தையைத் தவிர வேறு எந்த குழந்தையும் பிறக்காது என்று கூறப்படவில்லை. மேலும் திருமணத்திற்கு பிறகு குழந்தை பிறப்பது

கண்டிப்பாக இயற்கைக்கு உட்பட்டதுதான் என்றாலும், எந்த ஒரு நபரும் தன்னைப் பற்றி குறித்த நேரத்திற்கு முன்பே உறுதியான வாதம் செய்ய முடியாது. இங்கு ஆண் குழந்தை பிறப்பது தொடர்பாக இறை வாக்குறுதியின் உறுதியான அறிவிப்பு மட்டும் செய்யப்படவில்லை. மாறாக, உறுதி வாய்ந்த மகத்துவமான அந்தஸ்து மற்றும் எண்ணற்ற பண்புகளைக் கொண்ட ஒரு மகன் தொடர்பாக முன்னறிவிப்பு செய்யப்படுகிறது. அந்த மகன் மூலமாக ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வாழ்நாள்களுக்கு பிறகு இஸ்லாத்தின் மகத்துவமான தொண்டு மற்றும் இஸ்லாத்தை உலகில் பரவச் செய்வதற்கான செய்தியும் கூறப்பட்டுள்ளது.

**முதலாவது பஷீருடைய பிறப்பும் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் விளக்கமும்:**

முதல் பெண் குழந்தை பிறந்த பிறகு ஆகஸ்ட் 7, 1887 ஆம் ஆண்டு ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வீட்டில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்த மகனுக்கு பஷீர் எனப் பெயர் சூட்டப்பட்டது. ஸாஹிப்ஸாதா முதலாவது பஷீர் பிறப்பதற்கு முன்பே அவர் கருவில் இருக்கும் அந்தநேரத்திலேயே ஹுஸூர் (அலை) அவர்கள் ஏப்ரல்8,1886 ஆம் ஆண்டு தாம் வெளியிட்ட ஒரு பிரசுரத்தில் இவ்விஷயத்தை பலமுறை இவ்வாறு தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

தற்போது பிறக்க இருக்கின்ற மகன் அந்த ஆண் மகனா அல்லது அவன் ஒன்பது ஆண்டு காலகட்டத்திற்குள் வேறு ஏதாவது ஒரு நேரத்தில் பிறக்கக்கூடியவனா என்று வெளிப்படுத்தப்படவில்லை.

(மஜ்முஆ இஷ்திஹாராத், தொகுதி 1, பக்கம்-117)

ஸாஹிப்ஸாதா முதலாவது பஷீர் அவர்கள் பிறந்தவுடன் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி எவரைக் குறித்து முன்னறிவிப்பில் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதோ அந்த ஆண் குழந்தை தற்போது பிறந்துள்ள இந்த மகன்தானா? எனக் கேட்டதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்:

எந்த மகன் தொடர்பாக பிப்ரவரி 20, 1886 ஆம் ஆண்டு பிரசுரத்தில் நான் கூறியிருந்தேனோ அந்த முன்னறிவிக்கப்பட்ட மகன் தற்பேது பிறந்த இந்த மகன்தான் என்று எந்த பத்திரிகையிலும் அச்சிட்டு வெளியிடவில்லையே!

(மக்தூபாதே அஹ்மது தொகுதி 1, பக்கம்-306)

**ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பார்வையில் முன்னறிவிப்பின் முக்கியத்துவம் மற்றும் மகத்துவம்:**

அதே காலகட்டத்தில் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் வாக்குறுதிகள் மற்றும் முன்னறிவிப்புகள் அடங்கிய ஒரு பத்திரிகை சிராஜே முனீர் என்ற பெயரில் வெளியிட வேண்டும் என எண்ணினார்கள். அதில் இதர முன்னறிவிப்புகளுடன் வாக்களிக்கப்பட்ட மகனின் முன்னறிவிப்பையும் குறிப்பிட வேண்டும் என்ற நோக்கமும் இருந்தது. மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி, ஹுஸூர் (அலை) அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் அந்த வாக்களிக்கப்பட்ட மகனின் முன்னறிவிப்பை சிராஜே முனீர் என்ற நூலில் குறிப்பிட வேண்டாம் என்ற ஆலோசனையை கூறியிருந்தார்.

தங்கள் கடிதத்தில் வாக்களிக்கப்பட்ட மகன் தொடர்பான முன்னறிவிப்பை நூலில் வெளியிட வேண்டாம். அவ்வாறு வெளியிடுவது சரியில்லை என்று குறிப்பிட்டு இருந்தீர்கள். நான் தற்போது வரை அதற்கான பதிலை உங்களுக்கு ஏன் எழுதவில்லை? என்றால், இறைவன் இந்த விஷயத்தில் என்னுடைய கருத்தை உங்களுடைய கருத்துடன் இணைக்கவில்லை. இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். எனக்கு அல்லாஹ்வின் புறமிருந்து இது தொடர்பாக அறிவிப்பு செய்வதற்கும், பத்திரிகையில் வெளியிடுவதற்கும் கட்டளையிடப்பட்டுள்ளது. என்னுடைய எஜமானன் எவ்வாறு கட்டளையிட்டுள்ளானோ அவ்வாறுதான் அந்தப் பணியைச் செய்ய வேண்டும் என்ற கட்டாயத்திற்கு நான் ஆளாக்கப்பட்டுள்ளேன். உலக சூழ்நிலைகளின் காரணமாக என்ன எதிர்ப்பு ஏற்படும் என்பதையெல்லாம் நான் பொருட்படுத்தவில்லை. மேலும், உலகத்தின் கண்ணியம் மற்றும் இழிவு தொடர்பான எந்த ஒரு கவலையும் எனக்கில்லை. அதை எண்ணி நான் வருத்தப்படுவதுமில்லை. அதற்காக அஞ்சுவதும் இல்லை. எந்த விஷயங்களை அச்சிட்டு வெளியிடுவதற்காக நான் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டுள்ளேனோ அதனை வெளியிடுவேன். தீய எண்ணங்களால் நிரப்பப்பட்ட காலம் அந்த விஷயங்களை எப்படிப்பட்ட கீழ்தரமான பார்வையைக் கொண்டு பார்த்தாலும் சரியே, ஆனால், வருங்காலத்தில் அதிலிருந்து அதிகமான மக்கள் பலன் பெறக்கூடியவர்களாக இருப்பார்கள் என்பதை நான் அறிவேன்.

(மக்தூபாதே அஹ்மது, தொகுதி 1, பக்கம்-304-305)

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் திடமான மற்றும் உறுதியான நிலையானது இந்த முன்னறிவிப்பை நீக்குவதற்கு ஒப்புக் கொள்ளவில்லை என்பதை அறிந்த மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி மேலும் ஒரு கடிதம் எழுதினார். அதில் இவ்வாறான முன்னறிவிப்புகளால் இஸ்லாத்திற்கு எந்தப் பயனும் இல்லை. எனவே முஸ்லிம்களுக்கு இழுக்குதான் ஏற்படும் என்று கூறினார். மவ்லவி சாஹிப் அந்த அவமானத்திலிருந்து விலகியிருக்க சிராஜே முனீர் என்ற நூலை அச்சிட்டு வெளியிட வேண்டும் என்ற எண்ணத்தையே தற்போது விட்டு விடுங்கள் என்ற ஆலோசனையை வழங்கியிருந்தார்.

அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்:

சிராஜே முனீரில் இதுபோன்ற முன்னறிவிப்புகள் இடம் பெற்றுள்ளன. என்னுடைய கருத்து என்னவென்றால், சிராஜே முனீரை வெளியிடுவதை நிறுத்தி வைக்க வேண்டும். ஏனென்றால் இதுபோன்ற புத்தகங்களின் மூலம் முஸ்லிம்களுக்கு உச்சபட்ச அவமானம் நிகழலாம் என்று நீங்கள் கூறுகின்றீர்கள்..........இதுபோன்ற அறிவிப்புகள் மூலம் முஸ்லிம்களுக்கு உச்சபட்ச அவமதிப்பு ஏற்படும் என்ற உங்களின் கூற்று உண்மையான ஞானத்தின் அடிப்படையில் இல்லை.

(மக்தூபாதே அஹ்மது தொகுதி 1, பக்கம், 308-309)

அடுத்து, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மார்ச் 22, 1886 அன்று வெளியிட்ட தமது ஒரு பிரசுரத்தில் சில ஆட்சேபனைகளுக்கு பதிலளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஒரு அறிவிலி கூட இந்த முன்னறிவிப்பின் கருத்தை ஆழ்ந்து சிந்தித்தால் இது மனித சக்திகளுக்கு அப்பாற்பட்டது என்பதை புரிந்து கொள்ள முடியும். அது இறைவன் புறமிருந்து வந்த அடையாளம்தான் என்பதில் எவருக்கும் எந்த சந்தேகமும் இருக்க முடியாது. எவருக்காவது ஐயமிருந்தால் இவ்வாறான முன்னறிவிப்பை இதே போன்ற அடையாளத்தின் தொகுப்பை சமர்ப்பிக்கட்டும். இவ்விடத்தில் கண்களை திறந்து பார்க்க வேண்டும். இது ஒரு முன்னறிவிப்பு மட்டும் அல்ல. மாறாக, மகத்துவம் வாய்ந்த விண்ணின் அடையாளமாகும். இரக்கமுள்ளவரும், கருணையாளருமாகிய நம்முடைய நபி முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் உண்மைத்துவம் மற்றும் மகத்துவத்தை வெளிப்படுத்துவதற்காக கண்ணியமிக்க இறைவன் அந்த முன்னறிவிப்பை வெளிப்படுத்தினான். உண்மையிலேயே இந்த அடையாளம் ஒரு மரணித்தவரை உயிர்ப்பிப்பதை விட அந்தஸ்தில் நூற்றுக்கணக்கான மடங்கு உயர்வானதும், உன்னதமானதும், முழுமையானதும், சிறப்பானதும், நிறைவானதுமாக உள்ளது.........

இவ்விடத்தில் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளாலும் கருணையாலும் ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களின் பரக்கத்தாலும் கண்ணியத்திற்குரிய இறைவன் இந்த எளியவனின் துஆவை ஏற்றுக் கொண்டு எப்படிப்பட்ட அருளுக்குரிய ஆன்மாவை அனுப்புவதற்கான வாக்குறுதி அளித்துள்ளான் என்றால் அதனுடைய வெளிப்புறம் மற்றும் உட்புறம் அருட்கள் பூமியின் அனைத்து மேற்பரப்பிலும் பரவிக் கொண்டே செல்லும். (மஜ்முஆ இஷ்திஹாராத்,தொகுதி 1, பக்கம் 114- 115)

**முன்னறிவிப்பிற்கு உகந்தவர் :**

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தம்முடைய புத்தகம் சிராஜே முனீரில் தம்முடைய உண்மையான முன்னறிவிப்புகளை வெளியிட்டவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

ஐந்தாவது முன்னறிவிப்பு தொடர்பாக நான் என்னுடைய மகன் மஹ்மூதின் பிறப்பைக் குறித்து அறிவித்திருந்தேன். அவன் இனி பிறப்பான். அவனுக்கு மஹ்மூத் என்று பெயர் சூட்டப்படும்.

மேலும் இந்த முன்னறிவிப்பை வெளியிடுவதற்காக பச்சை நிறத்திலான பிரசுரம் அச்சடிக்கப்பட்டது. அது தற்போது வரை உள்ளது. ஆயிரக்கணக்கான மனிதர்கள் வரை அந்த பிரசுரம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. எனவே அந்த ஆண்மகன் முன்னறிவிப்பில் கூறப்பட்டுள்ள காலகட்டத்திற்குள் பிறந்துவிட்டார். மேலும், தற்போது அவர் ஒன்பது வயதை அடைந்துவிட்டார். (சிராஜே முனீர், ரூஹானீ கஸாயீன்,தொகுதி 12, பக்கம் - 36)

சிராஜே முனீர் என்ற புத்தகத்தின் அடிக்குறிப்பில் ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

பச்சை நிறப் பிரசுரத்தில் மிகவும் தெளிவான வார்த்தைகளில் எந்த ஒரு தயக்கமுமின்றி பிறக்கப்போகும் ஆண் மகன் தொடர்பான வாக்குறுதி கூறப்பட்டிருந்தது. அந்த வாக்குறுதிக்கு ஏற்ப மஹ்மூத் பிறந்துவிட்டார்.

எத்தகு மகத்துவம் வாய்ந்த முன்னறிவிப்பாக உள்ளது. இறைவனை அஞ்சக்கூடியவர்களாக இருப்பார்களாயின் தூய உள்ளத்துடன் சிந்தித்துப் பாருங்கள்.

அன்ஜாமே ஆத்தம் என்ற தம்முடைய நூலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

மேலும், மற்றோர் அடையாளம் இதுவாகும். அதாவது, தற்போது மூன்று ஆண் மகன்கள் இருக்கின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் பிறப்பதற்கு முன்பே அவர்களின் பிறப்பு தொடர்பான செய்தி வழங்கப்பட்டுள்ளது. எனவே பெரிய மகனான மஹ்மூதின் பிறப்பைக் குறித்து இந்த பச்சை நிறப் பிரசுரத்தில் மஹ்மூத் என்ற பெயருடன் மிகவும் தெளிவாக முன்னறிவிப்பு உள்ளது. அது முதல் மகனின் மரணம் தொடர்பாக வெளியிடப்பட்ட பிரசுரத்தைப் போன்று பல பக்கங்களைக் கொண்ட பிரசுரத்தின் வடிவில் பச்சை நிற காகிதத்தில் உள்ளது. மேலும், பஷீர் என்ற நடுவில் உள்ள மகன் தொடர்பான செய்தி

இதன் தொடர்ச்சி 24-ம் பக்கம்...

## ஷூத்தீ இயக்கமும் அதற்கு முஸ்லிஹ் மவ்வூத் முன்னறிவிப்புடன் உள்ள ஒரு சிறப்பான தொடர்பும்
## (ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்))
## (ஃபஸ்லே உமர் வரலாறு, தொகுதி 2-ல் இருந்து எடுக்கப்பட்டது)

### ஷூத்தீ இயக்கமும் அதற்கு முஸ்லிஹ் மவ்வூத் முன்னறிவிப்புடன் உள்ள ஒரு சிறப்பான தொடர்பும்

நத்வத்துல் உலமா மற்றும் அலிகட் முஸ்லிம் பல்கலைகழகம் ஆகியவற்றின் சுற்றுப் புறத்தில் வசிக்கக் கூடிய சில மல்கானா ராஜ்புத் சமுதாயங்களை இந்து பண்டிதர்கள் ஷூத் (சுத்தம் செய்தல்) என்ற பெயரால் இஸ்லாத்திலிருந்து வெளியேற்றுகின்றனர் என்ற உள்ளத்தை புண்படுத்தக்கூடிய செய்திகள் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சில தூய முஸ்லிம் தலைவர்களுக்கு கிடைத்தன. மௌலானா ஷிப்லீ நுஃமானி அவர்களுக்கு இந்த செய்தி எவ்வளவு அதிர்ச்சி தரக் கூடியதாக இருந்தது என்றால், அன்னாரின் வேதனையும், கோபமும் உச்சத்தை அடைந்தது. அது பின்வரும் சொற்களில் வெளிப்பட்டது:

இங்கிருந்து செல்லும்போது, என்னுடைய நிலை எவ்வாறு இருந்தது என்றால் நத்வாவின் மாணவர்கள் தற்போது இங்கு அமர்ந்திருக்கின்றனர். அவர்கள் சாட்சி ஆவார்கள். அதாவது அப்பொழுது நான் ஏச ஆரம்பித்துவிட்டேன். நத்வாவின் மக்களைப் பார்த்து நான் கூறினேன்: வெட்கம் இல்லாதவர்களே ! நற்பேறு இழந்தவர்களே! நீங்கள் நீரில் மூழ்கி மடிந்துவிடுங்கள்! எவ்வாறான சம்பவங்கள் நடந்திருக்கின்றன! நத்வாவை எரித்துவிடுங்கள்! மேலும் அலிகடையும் ஊதிவிடுங்கள்!

இதே சொற்களில்தான் அன்றும் நான் கூறியிருந்தேன். இன்றும் கூறுகின்றேன். (ஹயாதே ஷிப்லீ,பக்கம்- 557-558)

இந்த சூழலை சரியான முறையில் எதிர்கொள்வதற்கு அன்னார் 1912 ஏப்ரல் மாதத்தில் லக்னோ நகரில் வைத்து இந்தியாவின் பிரபலமான அனைத்து முஸ்லிம்களையும் ஒன்று கூட்டி ஒரு மாநாட்டிற்காக அழைத்தார்கள். அல்லாமா ஷிப்லீ நுஃமானி அவர்களின் வாழ்க்கை வரலாற்றை தொகுத்த மௌலானா ஸய்யது சுலைமான் நதவி அந்த சம்பவம் தொடர்பாக கீழ்வருமாறு கூறுகிறார்கள்:

மௌலானாவுடைய விருப்பம் என்னவென்றால், மார்க்கத்தை பரப்பும் இந்தப் பணியை அனைத்து பிரிவுகளும் ஒன்று சேர்ந்து செய்ய வேண்டும் என்பதாகும். இந்த காரணத்தினால் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மது சாஹிப் அதாவது தற்போதைய அஹ்திகளின் கலீஃபா மற்றும் காஜா கமாலுத்தீன் சாஹிப் ஆகியோரை மாநாட்டில் கலந்து கொள்வதை தடுக்கவில்லை. அந்த மாநாட்டின்போதே, அன்னார் காதியானிகளை மாநாட்டில் ஏன் கலந்து கொள்ள வைத்தார்கள்? மேலும் அவர்களுக்கு உரையாற்ற ஏன் அனுமதி கொடுத்தார்கள்? என்று மௌலானா ஷிப்லீ மீது ஆட்சேபனை எழுந்தது. (ஹயாதே ஷிப்லீ, பக்கம் 569)

இதனுடைய தாக்கம் மௌலானா ஷிப்லீ மீது எவ்வாறு ஏற்பட்டது என்றால், மௌலானா நோய்வாய்பட்டார்கள். மேலும் மிக மோசமான நிலையை அடைந்தவாறு மௌலவி அப்துஸ் ஸலாம் அவர்களை அழைத்துக் கொண்டு மும்பை சென்றுவிட்டார்கள். இரண்டு, நான்கு மாதங்கள் நன்கு ஆழ்ந்து சிந்தித்து அதற்குப் பிறகு ஜூலை, 1913 ஆம் ஆண்டில் சுயமாக ஓய்வு பெற்று விலகிக் கொண்டார்கள். மேலும் இந்த பணிக்கான அனைத்து ஆலோசனைகளும் வீணாகிவிட்டன. (ஹயாதே ஷிப்லீ, பக்கம்-573)

இந்த சம்பவங்களுக்கு பிறகு மல்கானாவின் இந்து பண்டிதர்கள் தொடர்ச்சிாக முஸ்லிம்களை ஷூத்தி (இந்துவாக மாற்றம்) செய்வதில் மூழ்கியிருந்தார்கள். ஆனால், முஸ்லிம் ஆலிம்கள் காதியானிகளை இந்த இஸ்லாமிய ஜிஹாதில் இணைக்காமல் பிரித்துவிட்டோம் என்ற மாபெரும் வெற்றிக் கொண்டாட்டத்தில் மகிழ்ச்சியுடனும், நிம்மதியுடனும் தங்களுடைய வீடுகளில் உறங்கிக் கொண்டிருந்தார்கள். காலம் கடந்து கொண்டே சென்றது. எதுவரை என்றால், மார்ச் -1923 ஆம் ஆண்டில் இந்தியாவின் முஸ்லிம்களின் மீது ஒரு காலை இந்த நிலையில் விடிந்தது. அதாவது, ஆரிய சமாஜின் தலைவர்கள் தங்களுடைய வெற்றியின் மகிழ்ச்சியை கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். மேலும் இஸ்லாத்தை வலுவாக எதிர்க்கக் கூடிய ஷ்ர்தானந்த் மிகவும் ஆணவத்துடன் இவ்வாறு அறிவிப்பும் செய்து கொண்டிருந்தார்:

அதாவது, ஆக்ராவின் சுற்று வட்டாரத்தில் ராஜ்பூத்களை மிக வேகமாக ஷூத்தி (இந்துக்களாக மத மாற்றம்) செய்து கொண்டிருக்கின்றோம். தற்போது வரை 40 ஆயிரம் ராஜ்புத், மல்கானா, கோஜர் மற்றும் ஜாட் சமுதாயத்தினர் இந்துவாகிவிட்டனர். இவ்வாறான மக்கள் இந்தியாவின் ஒவ்வொரு பகுதியிலும் வசிக்கின்றார்கள். அவர்களின் எண்ணிக்கை 50,60 லட்சத்திற்கும் குறைவு இல்லை. மேலும் ஒருவேளை இந்து சமாஜம் அவர்களை தங்களுக்குள் ஈர்ப்பதற்கான பணியை தொடர்ந்தார்கள் என்றால் அவர்களுடைய எண்ணிக்கை ஒரு கோடியை எட்டி விடும் என்பதில் எனக்கு எந்த ஒரு வியப்பும் இல்லை. (பிரதாப் பத்திரிகை,பக்கம் 4, 16 மார்ச்-1923)

இந்த அறிவிப்பு ஒரு வெடி குண்டு வெடித்ததை போன்ற மாபெரும் அச்சத்தை உருவாக்கிவிட்டது. அது கிழக்கும், மேற்கும் வசித்துக் கொண்டிருக்கின்ற இந்திய முஸ்லிம்களை நடுங்க வைத்துவிட்டது. இந்த ஆச்சரியமூட்டும் சூழல் அனைவரையும் இந்த நிலைமையில் அவர்களை விழித்தெழச் செய்தது. அதாவது, அவர்களுடைய நெஞ்சம் வெடித்தது. இதயம் துயரத்தால் நிறைந்தது.

இந்துக்கள் இந்த அறிவிப்புடன் நின்றுவிடவில்லை. மாறாக, ஷூத்தி (மத மாற்ற) அறிவிப்பை முழு இந்தியாவிலும் பரப்புவதற்காக ஒரு பொது சங்கை ஊதினார்கள். இதனுடைய விளைவு எவ்வாறு வெளிப்பட்டது என்றால், முஸ்லிம்களுக்கு மத்தியில் எல்லாபுறமிருந்தும் கூச்சலும், கூப்பாடும் எழத் தொடங்கியது. மேலும் முஸ்லிம்களுடைய பத்திரிகைகள் மிகப் பெரிய தாக்கம் மற்றும் முழு வருத்தத்துடன் தங்களுடைய ஆலிம்கள் மற்றும் மற்ற தலைவர்கள் முன்பு விண்ணப்பங்களை வைக்க ஆரம்பித்தன. அதாவது, தங்களுக்கிடையில் இருக்கும் கருத்துவேறுபாடுகளை மறந்து இஸ்லாத்திற்கு தொண்டு செய்வதற்காக முன்னால் வாருங்கள் என்று அழைப்பு விடுத்தன. மேலும் எந்தப் பிரிவிற்கு எந்த அளவிற்கு வாய்ப்பு இருக்கின்றதோ, மல்கானாவின் முர்தத்களாகிவிட்ட முஸ்லிம்களை காப்பாற்ற முயற்சி செய்யுங்கள் என்றன. அதன் அடிப்படையில் பல்வேறு இஸ்லாமிய பிரிவுகள் புறமிருந்து தொடர்ச்சியான திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. மேலும் லட்சக்கணக்கான ரூபாய்கள் சந்தாவாக ஒன்றுதிரட்டுவதற்கான விண்ணப்பங்கள் எல்லாபுறமும் பரப்பப்பட்டன. இதே போன்று உயிர் தியாகத்திற்காக முஜாஹித்களை அழைத்தார்கள். முர்தத்களின் அதிபயங்கர காற்றை தடுத்து நிறுத்த வேண்டும் என்று தங்கள் புறமிருந்து ஒரு திட்டத்தை ஷியாக்களும் துவக்கினார்கள்.

அந்தக் காலகட்டத்தில், ஒரு பிரபலமான பத்திரிகையின் ஆசிரியர், ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்களையும் அழைத்தார். அதவாது, இஸ்லாத்திற்கு நன்மை செய்கின்றோம் என்று வாதம் செய்பவரே இன்று நீங்கள் எங்கே உள்ளீர்கள்? இன்று இஸ்லாத்திற்காக தியாகம் செய்யக்கூடிய அந்த மைதானம் உங்களை அழைக்கின்றது. இன்று உங்களுக்கும், உங்களுடைய ஜமாஅத்திற்கும் உங்களுடைய வாதத்தை நிரூபிப்பதற்கான தியாகத்தின் வாய்ப்பு உள்ளது என்று அவர் அழைப்பு விடுத்தார்.

இருப்பினும், அந்த அழைப்பிற்கு ஒருநாள் முன்பு அதாவது 7மார்ச், 1923 ஆம் ஆண்டு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அதே விஷயத்தில் ஜமாஅத்திற்கு அழைப்புக் கொடுத்திருந்தார்கள். ஜமாஅத் எல்லாவிதமான தியாகங்களையும் செய்வதற்காக தயாராக வேண்டும் என்ற வழிகாட்டலையும் வழங்கியிருந்தார்கள்.

மேலும், எவ்வாறான திட்டத்திற்கான அறிமுகத்தை முன்வைத்தார்கள் என்றால், அது மார்க்கப் புறக்கணிப்பு எனும் குழப்பத்திற்கு முடிவு கட்டுவதற்கு தயார் செய்யப்பட்டிருந்தது.

எனினும், அமிர்தசரஸின் “வக்கீல் எனும் பத்திரிகையின் அந்த அழைப்பிற்கு தமது ஈமானின் தன்மானத்தை வெளிப்படுத்தியவாறு அன்னார் உடனடியாக 9,மார்ச் அன்று பிரசுரம் மூலம் பதில் அளித்தார்கள். மேலும், இந்த முயற்சியின் மூலம் சுருக்கமாக முஸ்லிம்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். அவர்களும் ஏற்கனவே தயாராக இருந்தார்கள். மேலும், இந்தியாவின் முஸ்லிம்களிடம் 20 லட்சம் ரூபாய் சந்தா ஒன்று திரட்டுவதற்கு விண்ணப்பம் வைத்தார்கள்.

மேலும் கூறினார்கள்:

அனைத்து பிரிவுகளும் தங்களுடைய பங்களிப்பிற்கான தொகையை தாமே வசூல் செய்து கொள்ள வேண்டும். மேலும், தம்முடைய மேற்பார்வையிலேயே அதனை செலவழிக்க வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு பிரிவின் மேற்பார்வையில் முஜாஹித்களுடைய தனித்தனி குழு இந்த ஒட்டு மொத்த பொறுப்பை நிறைவேற்றுவதற்காக செல்ல வேண்டும்.

அன்னார் (ரலி) கூறினார்கள்:

எண்ணிக்கையின் அடிப்படையில், 20 லட்சம் ரூபாய் மற்ற இஸ்லாமிய பிரிவுகளை பார்க்கும்போது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பங்கு 160வது பங்காகும். அதாவது 13 ஆயிரம் ரூபாய் தான் ஆகின்றது. அனால் கீழ்வரும் இரண்டு விஷயங்களைக் கருத்தில் கொண்டால், ஜமாஅத்தின் பங்கு மேலும் குறைவாகத் தான் இருக்க வேண்டும்.

ஒன்று, ஜமாஅத்தில் கோடீஸ்வர்கள் என்பது ஒருபக்கம் இருக்கட்டும். லட்சாதிபதிகள் கூட இல்லை. மறுபக்கம் மற்ற இஸ்லாமியப் பிரிவுகளில் கோடீஸ்வரர்களும், இலட்சாதிபதிகளும் பலர் இருக்கின்றனர்.

இரண்டு, தற்போதுதான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பெண்கள் இஸ்லாத்தின் தொண்டிற்காக ஒரு மிக முக்கியமான பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அதாவது, பெர்லின் நகரில் பள்ளிவாசல் கட்டுவதற்காக ஐம்பதாயிரம் ரூபாய்க்கான வாக்குறுதி வழங்கியுள்ளனர். இந்த வாக்குறுதியை நிறைவேற்ற முழு முயற்சிகளில் மூழ்கியுள்ளார்கள்.

எவ்வாறு இருப்பினும், பற்றாக்குறைவிற்கான இந்த இரண்டு காரணங்கள் முன்னால் இருந்தாலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் ஹஸ்ரத் ஸாஹிபின் உறுதி எப்படிப்பட்டதாக இருந்ததென்றால், 13000 ரூபாய் என்ற பங்கை குறைப்பதற்கு பகரமாக, தம்முடைய ஜமாஅத்தின் பற்று, தியாகத்தின் உயர் தரத்தை கருத்தில் கொண்டு ஷுத்தி இயக்கத்திற்கு எதிரான திட்டம் தொடர்பாக ஐம்பதாயிரம் ரூபாயை ஒன்று திரட்டுவதற்கான அறிவிப்பை செய்தார்கள்.

மேலும், இது இஸ்லாத்தின் உண்மைக்காகவும், ஷுத்தி அறிவிப்பின் காற்றை திசை திருப்புவதற்காகவும் செலவிடப்பட வேண்டும் என்று கூறினார்கள்.

இந்த குழப்பத்தின் தீர்வுக்காக ஐம்பதாயிரம் ரூபாய்க்கான அறிவிப்பை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் செய்தபோது ஜமாஅத்தின் பொதுவான பொருளாதார நிலையைக் குறித்து சீர்தூக்கிப் பார்ப்பது அவசியமாகும். இந்த வாக்குறுதியின் தன்மை எப்படிப்பட்டது? என்பதை அதன் மூலமாக நாம் கணித்துக் கொள்ளலாம். இன்றைய நிலைமையில் 50 ஆயிரம் ரூபாய் என்பது ஒரு சாதாரண தொகையாகும். அஹ்மதிய்யா ஜமாஅத்தில் தனிப்பட்ட முறையில் இதைவிட அதிகமான தொகையை மார்க்கத் தொண்டிற்காக செலுத்தக் கூடிய நபர்கள் பலர் உள்ளனர். மேலும், அவ்வாறு பொருள் தியாகம் செய்யவும் செய்கின்றார்கள். இருப்பினும், அந்தக் காலம் இதிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது. முதலாவது, அன்றைய மற்றும் இன்றைய பணத்தின் மதிப்பு விண்ணிற்கும், மடுவிற்கும் உள்ள வித்தியாசம் ஆகும்.

இரண்டாவது, ஜமாஅத்தின் பொருளாதார நிலை மிகவும் மோசமாக இருந்தது. மேலும், வருவாய்க்கான வழி மிக சுருங்கியதாகவும் குறுகிய வட்டத்திற்குள்ளும் இருந்தது.

ஷுத்தி இயக்கத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பு அதாவது மார்ச், 1922-ன் மஷாவரத்தின் அறிக்கையை, ஆய்வு செய்யும்போது நமக்கு அது தெரிய வருகிறது. சரியான அஜெண்டாவின் அடிப்படையில் இந்த விஷயம் கவனத்திற்குரியதாக இருந்தது. அதாவது, அஹ்மதிய்யா ஜமாஅத் மிகப் பெரிய பொருளாதார வீழ்ச்சியில் இருந்தது. அதாவது, அஞ்சுமனுடைய ஏழ்மையின் சூழல் எப்படி இருந்தது என்றால், பணிபுரிவர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கு கூட பணம் இல்லை. அவர்களின் பல மாதம் சம்பளம் அஞ்சுமனின் கடனாக இருந்தது. மேலும், அஞ்சுமனின் கடன் நாளுக்குள் நாள் குறைவதற்கு பகரமாக ஒவ்வொரு நாளும் ஆபத்திற்குரிய வேகத்தில் முன்னேறிக் கொண்டிருந்தது. இவ்வாறான சூழலில் அந்த பணி எவ்வாறு சாத்தியமாகும். ஜமாஅத் தனது ஏழ்மை நிலையிலும், வழிவகைகள் இல்லாமல் இருந்தபோதும் எப்படிப்பட்ட ஓர் உலகளாவிய இஸ்லாமிய வெற்றிக்கான முயற்சிகளில் மூழ்கியிருந்தது என்றால். அதற்கான பொருளாதார தேவையை பூர்த்தி செய்வது என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். சொற்பமான தேவைகளை கூட முழுமை செய்வது ஜமாஅத்தால் இயலாததாக இருந்தது. மேலும், அஹ்மதி கொள்கை பரப்புனர்கள் மிகவும் ஏழ்மையான நிலையில் தமது வாழ்க்கையை கழித்துக் கொண்டிருந்தார்கள். வெளி நாடுகளில் பணி செய்து கொண்டிருந்த கொள்ளை பரப்புனர்கள் நோய்வாய்பட்டார்கள் என்றால், அவர்களுடைய மருத்துவத்திற்கான செலவுகளுக்கு கூட பணம் இல்லாமல் இருந்தது. இந்த பொருளாதார சிக்கலின் காலகட்டத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆண்டு பட்ஜெட் எவ்வாறு உருவாக்கப்பட்டது என்றால், மேலும் மிகவும் கஷ்டமான சூழலில் உருவாக்கப்பட்ட அந்த பட்ஜெட் ஜமாஅத்திற்கு மிகவும் கஷ்டத்துடன் கடக்க வேண்டிய பட்ஜெட்டாக இருந்தது. இது தொடர்பாக, ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) மஜ்லிஸே ஷூராவில் உரை நிகழ்த்தும்போது இவ்வாறு கூறினார்கள்:

மேலும், ஒரு கமிட்டி அமர்த்தப்பட்டது. அது மூன்றாயிரம், நான்காயிரம் ரூபாய் கூடுதல் செலவை ஏற்படுத்தியது. பிறகு, பட்ஜெட் என்னிடம் வந்தது. நான் அதில் 30 ஆயிரம் ரூபாயை குறைத்தேன். மேலும் மாணவர்களுடைய உதவித் தொகையைக் குறைத்தோம். அதற்கு மேல், குறைக்க முடியாது. மேலும், எவ்வாறு இருப்பினும் வெளியில் பணி செய்பவர்களுக்கு கிடைக்கும் மாத சம்பளம் இதை விட அதிகம். இப்போது அவர்களுடைய சம்பளத்தை மேலும் குறைத்திருக்கின்றோம். ஏழைகளை காப்பாற்றுவதற்காக எந்த ஏழைகளுக்கு வறுமை நிவாரணத் தொகை கிடைத்ததோ அதை நிறுத்தவில்லை. மாறாக, எவருடைய சம்பளம் 60 ரூபாயை விட அதிகம் இருந்ததோ, அவர்களுக்கு 15 சதவிகிதமும், மேலும் எவருடைய வருமானம் 100-க்கு அதிகமாக இருந்ததோ அவர்களுக்கு 20 சதவிகிதமும் குறைத்து இருக்கின்றோம். நான் கூறுகின்றேன். அவர்கள் தியாகம் செய்ய வேண்டும்.

மேலும், அனைவருமே மகிழ்ச்சியுடன் அதனை ஏற்றுக் கொண்டார்கள். எவ்வாறு இருப்பினும், இங்குள்ள மக்களுக்கு குறைவான சம்பளம் தான் கிடைக்கின்றது. அரசாங்கம் இரட்டிப்பான கஷ்டத்தை ஏற்படுத்தி உள்ளது. ஆனால், நாம் மேலும் குறைத்துவிட்டோம். எவ்வாறு இருப்பினும், சுமையை குறைப்பதற்கு பகரமாக பல மாதத்தின் சம்பளம் வழங்கப்படாமல் இருந்தது. ஏற்கனவே மூன்று மாதத்திற்கான சம்பளம் பாக்கி இருந்தது. தற்போது ஐந்து மாதத்திற்கான சம்பள பாக்கி உள்ளது. மேலும் தற்போதைய நிலை என்னவென்றால், அவர்கள் கடன் வாங்கி சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எனவே கடைகளும் காலியாகிவிட்டன. இங்கு ஐந்து மாதத்திற்கான சம்பளம் கிடைக்கவில்லை. அங்கோ கடைகளில் எவ்வித வரவும் இல்லை. பல மக்கள் பல நாட்களாக பசியுடன் இருக்கின்றார்கள். தற்போது ஒரு நபர் கூறினார். என்னை ஒரு நபர் கடந்து சென்றார். அவர் பட்டினியாக இருந்தார். நான் அவருடைய முகத்தை பார்த்து அறிந்து கொண்டேன். அவர் உண்மையிலேயே பல நாட்களாக பட்டினியாக உள்ளார். ஒருவர் சிறிது கொடுத்தார். இருப்பினும், பாதியை வழியில் வேறு ஒருவருக்கு கொடுத்துவிட்டார். இவ்வாறு மற்றொரு நபர்

தொடர்பாக கேள்விப்பட்டேன். அவர் பசியினால் மயங்கி விட்டார். மேலும், நான் வீட்டிலிருந்த உணவை அவருக்கு அனுப்பி வைத்தேன். மேலும் ஒரு நபரிடம், அவரை உணவு அருந்த வைத்துவிட்டு வாருங்கள் என்று கூறினேன்.

இங்கு எப்படிப்பட்ட பற்றுள்ளர்வர்கள் உள்ளனர் என்றால், பசியினால் மரணித்துவிடுவார்கள். ஆனால் ஒருபோதும் பணியை விட்டுவிட மாட்டார்கள் என்பதை நான் புரிந்து வைத்துள்ளேன். நம்முடைய ஜமாஅத்திற்கு இவ்வாறு பணி செய்பவர்கள் பசியினால் மரணித்துவிட்டார்கள் என்ற அவப் பெயர் வேண்டுமா? ஆகையால், பொருளாதார ரீதியில் மிகவும் இக்கட்டான காலகட்டம் வந்துள்ளது.

(மஜ்லிஸே முஷாவரத் அறிக்கை 1992, பக்கம் 18-19)

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்வாறான சூழ்நிலையில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பெண்களின் முன்பு பெர்லின் பள்ளிவாசல் கட்டுமானத்திற்கான அறிவிப்பை முன் வைத்தார்கள். பொருளாதார கஷ்டங்கள் மார்க்கத் தேவைகளுக்கு தடையாக இருக்கவிட மாட்டோம் என்பதை தெளிவுபடுத்தினார்கள்.

மேலும் அன்னார் (ரலி) கூறினார்கள்:

இன்று ஜெர்மனியில் இஸ்லாமிய தொண்டுகளுக்கு ஒரு புதிய மற்றும் பரந்த மைதானம் திறந்துள்ளது. எதை செலவு செய்தாலும் அதனை விட்டுக் கொடுக்க முடியாது. உலகப் போருக்கு பிறகு ஜெர்மனி சமுதாயம் மன ரீதியாக எவ்வாறான சூழலை உருவாக்கிவிட்டது என்றால், ஐரோப்பாவின் மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு அதிக சாத்தியக் கூறுகள் அவர்களிடம் மிகத் தெளிவாக தென்படுகின்றன.

எனவே ஏற்கனவே ஜமாஅத் பொருளாதார கஷ்டத்தில் சிக்கியிருந்தாலும் பெர்லின் பள்ளிவாசல் கட்டுவதற்காக அன்னார் (ரலி) சந்தாவிற்கான அறிவிப்பை செய்தார்கள். அதில் எவ்வித கவலையும் கொள்ளவில்லை. மேலும்,பெர்லின் பள்ளிவாசல் கட்டுவதற்காக ஐம்பதாயிரம் ரூபாய் எனும் ஒரு மிகப் பெரிய தொகையை முன்வையுங்கள் என்று அஹ்மதிப் பெண்களிடம் கூறினார்கள். மேலும், உங்களுடைய குடும்பத்தில் எந்தவிதமான விண்ணப்பத்தையும் வைக்காதீர்கள் என்றார்கள். இந்தச் சட்டம் எதனால் நிறுவப்பட்டதென்றால், உண்மையிலேயே ஜமாஅத்தின் ஆண்களின் மீது அன்றைய காலத்தில் பொருளாதாரச் சுமை ஏற்கனவே அதிகமாகத் தான் இருந்தது. தம்முடைய ஆபரணங்கள் மற்றும் நகைகளை விற்பனை செய்து இஸ்லாத்தின் மிக முக்கிய தேவையை பூர்த்தி செய்ய வேண்டும் என்று பெண்களிடம் எதிர்பார்ப்பு இருந்தது. அவ்வாறே நிகழ்ந்தது. ஆனால், இது வேறு ஒரு வரலாறாகும். இது தொடர்பாக உரிய சந்தர்ப்பத்தில் பேசப்படும். தற்போது ஷூத்தி இயக்கம் தொடர்பாக படிக்கக் கூடியவர்கள் அன்றைய சூழலை கணித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக மட்டுமே அது தொடர்பாக இங்கு பேசப்பட்டது.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மல்கானா பகுதியில் ஜிஹாத் செய்வதற்காக ஜமாஅத்திடம் 50,000 ரூபாய் வாக்குறுதியை முன் வைத்தார்கள். அது எவ்வாறான சூழலை கடந்து கொண்டிருந்தது! இந்த விண்ணப்பம் தன்னுடைய இருப்பின் அடிப்படையில் எவ்வளவு மகத்துவமிக்கதாகவும், உயர் தரத்தை கொண்டதாகவும் இருந்தது!

இந்த இரண்டு விண்ணப்பங்களும் அன்னாருடைய வலுவான உறுதியை நிரூபிக்கக் கூடியதாக இருந்தது. மேலும், அன்னாருக்கு தம்முடைய இறைவனுடைய அருட்கள் மேலும் உதவியின் மீது அசாதாரணமான நம்பிக்கை மற்றும் உறுதி இருந்ததை நிரூபிக்கின்றது. மேலும், நிச்சயமாக இது இறைவன் மீதான நம்பிக்கையாகும். அவனே இதை முழுமைப் படுத்துவதற்கான காரணிகளை ஏற்படுத்தி தருவான். எனவே, உலகம் இந்த வியப்பான அற்புதத்தை பார்த்தது. பட்டினியாக இருந்தவர்களுடைய இந்த ஜமாஅத் தன்னுடைய தேவையை விட இஸ்லாத்தின் தேவைக்கு முன்னுரிமை வழங்கியது. மேலும், தியாகத்திற்கான ஒவ்வொரு விண்ணப்பத்தின்போதும் மிகவும் முன்னேறியவாறு தனது பற்றுள்ள உள்ளத்துடன் சிரம் பணிந்தது. நிச்சயமாக இது இறைவனுடைய அருளாகும். இருப்பினும் மஹ்மூதின் மூலமாக இது வெளிப்பட்டது.

ஜமாஅத்திற்கு இறைவன் ஒரு மாபெரும் வழிகாட்டியை வழங்கியிருந்தான். அவர் இஸ்லாத்தின் தொண்டிற்காக அர்ப்பணம் ஆகக் கூடியவர்களை ரத்தத்தின் ஒவ்வொரு துளியையும் முன் வைப்பதற்காக தயார்படுத்தி இருந்தார். அவர் எவ்வாறான வழிகாட்டியாக இருந்தார் என்றால், தியாகத்தினுடைய ஒவ்வொரு மைதானத்திலும் முதலில் தானே பாதத்தை எடுத்து வைத்தார். பிறகு தம்முடைய ஜமாஅத்தை பின்னால் வருமாறு அழைப்பு கொடுத்தார்கள். அவருடைய செயலலில் அசாதாரண உயர்வு இருந்தது. அவருடைய நாவில் மந்திரம் இருந்தது. இஸ்லாத்திற்கு தொண்டாற்றுவதற்கான மைதானத்திற்கு அவர் ஜமாஅத்தை அழைத்தபோதெல்லாம் உள்ளத்தில் ஒரு விசித்திரமான உணர்வு ஏற்படும். தொண்டிற்கான ஆர்வத்தில் உள்ளம் வெடித்துவிடும். மேலும் மனம் மகிழ்ந்தவாறு முஹம்மதின் மார்க்கத்தில் அர்ப்பணம் ஆகுவதற்காக இதயம் நெஞ்செலும்பில் முட்டிக் கொண்டிருந்தது. ஜமாஅத் நேசத்தின் காரணத்தினால் அவருக்கு பின்னால் செல்ல ஆரம்பித்தது. ஒவ்வொரு அஹ்மதியும் ஒருவர் மற்றவரை முந்துவதற்கான முயற்சியில் இருந்தார். எவர்கள் எல்லாம் பலவீனமானவர்களாக இருந்தார்களோ அவர்கள் விழுந்தெழுந்து தியாகத்தின் இடத்திற்கு ஓடிக் கொண்டிருந்தார்கள். எவர்கள் எல்லாம் வாய்ப்பில்லாதவர்களாகவும், முடமாகவும் இருந்தார்களோ அவர்களுடைய நாவில் இருந்து வருத்தத்தின் ஓசைகள் வெளிப்பட்டன.

கவிதையின் தமிழாக்கம்:

விழுந்தெழுந்து அந்த அமர்வுக்கு சென்றவர்கள் மகிழ்ச்சிக்குரியவர்கள்

சில சமயம் பாதத்தில் தலை வைத்தனர். சில சமயம் மடியில் வந்து விழுந்தனர்.

எவ்வாறு இந்த அறிவிப்பை அன்னார் (ரலி) அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு முன்பு வைத்தார்கள் என்ற விஷயமும், ஆரிய சமாஜிக்கு எதிராக அர்ப்பணமாகக்கூடிய நபர்களை வியப்பிற்குரிய, கண்ணியமான முறையில் உறுதியான நம்பிக்கையுடன் எவ்வாறு வரிசையில் நிறுத்தினார்கள் என்ற அந்த விஷயமும் அஹ்மதிய்யத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் எழுதப்படும்.

முதன் முதலில் பணி செய்வதற்காக ஒரு திட்டத்தை வகுத்தார்கள். மேலும் சூழ்நிலையை கண்காணிப்பதற்காக சில திறமையான அறிவு படைத்த இளைஞர்களை மல்கானா பகுதிகளுக்கு அனுப்பி வைத்தார்கள். அதன் பிறகு குத்பா மற்றும் சொற்பொழிவுகளின் மூலமாக இந்த சிக்கல் தொடர்பான விஷயங்களை நன்றாக புரிய வைத்தார்கள். பிரச்சனைகள் தொடர்பாக விழிப்புணர்வை தந்தார்கள். மேலும், நன்கு புரிய வைத்தார்கள். அதாவது ஒரு மிகவும் வலுவான எதிரியை எதிர் கொள்ள வேண்டியது உள்ளது. அவன் கூட்டம் மற்றும் செல்வம் ஆகியவற்றின் அடிப்படையில் எந்த அளவு பெரியவன் என்றால் உலக ரீதியில் அஹ்மதிய்யா ஜமாஅத் அவனுக்கு முன்பு ஒன்றுமற்றதாகும். அதன் பிறகு, இஸ்லாத்தின் ஆரம்ப காலகட்ட முஸ்லிம் முஜாஹித்களின் மாபெரும் தியாகம் நினைவூட்டப்பட்டது. அதனால் பெரியவர், சிறியவர், ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், குழந்தைகள் என அனைவரும் தங்களுடைய அனைத்தையும் இஸ்லாத்திற்காக தியாகம் செய்வதற்கு தயாராகிவிட்டனர். இருப்பினும் அன்னார் (ரலி) அவர்களுடைய இந்த ஆர்வத்தை கடிவாளம் இல்லாமல் திரியக்கூடியதாக ஒருபோதும் ஆக்கவில்லை. மேலும் பொது மக்களுடைய முழக்கங்களைப் போன்று அவர்களுடைய ஏக்கத்தை வீணாக்குவதற்கு அனுமதி வழங்கவில்லை. காதியானுடைய வீதிகளில் ஆவேசமான முழக்கங்களை எழுப்புவதற்கு அனுமதி வழங்கவில்லை. மேலும், ஆரிய சமாஜிற்கு எதிராக ஏச்சு பேச்சுகள் என்று எவ்விதமான திட்டத்தையும் வகுக்கவில்லை. மாறாக, உறுதி வாய்ந்த உள்ளத்தைக் கொண்ட சமுதாயத்தின் தலைவராக இருந்து செயல்களத்திற்கு செல்வதற்கு தயாராகிவிட்டார்கள்.

எல்லாவற்றையும் விட முதலில் அன்னார் (ரலி) ஜமாஅத்தின் கவனத்தை துஆவின் பக்கம் ஈர்த்தார்கள். துஆ செய்யாமல் நல்ல அமல்கள் செய்வதற்கு வாய்ப்பு கிடைக்காது என்பதை அன்னார்

(ரலி) நன்றாக தெளிவுபடுத்தினார்கள். பிறகு, ஒவ்வொரு ஆணும், பெண்ணும், முதியவரும், சிறுவரும் தம்முடைய சக்திக்கு ஏற்றவாறு துஆக்களில் மூழ்கி இருங்கள் என்று கூறினார்கள். அனைத்து அஹ்மதிகளின் பகுதிகளும் இரவிலும் விழித்திருந்தன. இரவுகளில் இறைவனுக்கு முன்னால் வைக்கப்பட்ட அந்த அழுகைகள் வீடுகளிலிருந்து வெளிப்பட ஆரம்பித்தது. தஹஜ்ஜுத் நேரத்தில் இஸ்லாத்தின் வெற்றிக்காக துஆக்கள் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன. மேலும் இறைவனுடைய மார்க்கத்தின் உதவி மற்றும் ஒத்தாசைக்காக தங்களுடைய பாதங்களை முன்னெடுத்து வைப்பவர்கள் இறைவனுடைய உதவி மற்றும் ஒத்தாசைக்காக இறைவனிடம் கையேந்த ஆரம்பித்தார்கள்.

துஆவின் பக்கம் கவனமூட்டியதன் பிறகு, அன்னார் (ரலி) ஜமாஅத்திற்கு செல்வம் மற்றும் உயிர் தியாகத்தின் பக்கம் கவனமூட்டினார்கள். மேலும் எதிர்கொள்ள வேண்டிய கஷ்டங்கள் தொடர்பாக நன்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். எல்லாவிதமான ஆபத்துகளையும் அறியும்படி செய்தார்கள்.

இந்த வழியில் மிகவும் கடினமான நேரம் வர இருக்கின்றது என்பதை தெளிவாக எடுத்துக் கூறினார்கள். மேலும், சிலநேரம் பசியுடனும், சிலநேரம் தாகத்துடனும், சிலநேரம் வெயிலிலும், சிலநேரம் குளிரிலும், சிலநேரம் காலணி இல்லாமலும், சிலநேரம் கிழிந்த ஆடையுடனும், சிலநேரம் தம்முடைய பொருட்களை தாமே சுமந்து கொண்டும், மேலும் மற்றவர்களுடைய சுமைகளை சுமந்து கொண்டும், உங்களுக்கு நாட்கள், வாரங்கள், மாதங்களை கழிக்க நேரிடும் என்று கூறினார்கள். ஏழ்மையான நிலையில் கிராமம் கிராமமாக சுற்றித் திரிந்து தவறிழைத்த சகோதரர்களை மறுபடியும் இஸ்லாத்தின் பக்கம் அழைக்க வேண்டும் என்று கூறினார்கள். ஏச்சுப் பேச்சுகளை கேட்டு பொறுமையை மேற்கொள்ள வேண்டும். அடியை வாங்கிக் கொண்டு துஆ செய்ய வேண்டும். மருந்துகள் இல்லாமல் எல்லா நோய்களையும் கடந்து செல்ல நேரிடும். இடுப்பு முறியும் அளவிற்கு கஷ்டமான பணிகளை செய்ய நேரிடும். மனைவி, மக்கள் மற்றும் வீட்டின் சுகபோக சிந்தனையை கூட உள்ளத்தில் இருந்து அகற்றிவிட வேண்டும். இவை அனைத்தையும் தெளிவாகக் கூறியதன் பின்னர் அன்னார் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு நம்பிக்கையூட்டினார்கள்: அதாவது, நீங்கள் இஸ்லாத்திற்கு தொண்டு செய்வதற்காக இந்த தியாகத் திடலின் பக்கம் தைரியமாக முன்னேறிச் செல்லுங்கள். அவ்வாறு சென்றீர்கள் என்றால், இறைவன் உங்களுடன் இருப்பான் என்ற நற்செய்தியை நான் உங்களுக்கு கூறுகின்றேன். மேலும், எந்த சக்தியும் தன்னுடைய வெளிப்படையான வல்லமை, செல்வம், ஒற்றுமை ஆகியவற்றால் உங்களை தோற்கடிக்க முடியாது. நீங்கள் இறைவனுடைய நேசர்களாக ஆகிவிடுவீர்கள். மேலும் ஈருலகத்தின் அருட்கள் மற்றும் பயன்கள் உங்களுக்கு கிடைக்க தொடங்கிவிடும்.

அன்னார் (ரலி) ஜமாஅத்திடம் உறுதி வாய்ந்த, நிலைத்து நிற்கக் கூடிய முஜாஹிதீக்களை வினவினார்கள். கஷ்டங்கள், சோதனைகள் எனும் பள்ளத்தில் எந்த விதமான தயக்கமும் இன்றி குதிப்பதற்கு தயாராக இருக்கக்கூடிய நபர்களை வினவினார்கள். மேலும் முன்பே அன்னார் (ரலி) கூறினார்கள்:

நீங்கள் எதிர் கொள்ளும் எதிரிகள் வெளியில் இருந்து வருபவர்கள் மட்டும் அல்ல. மாறாக, உங்களுடைய சகோதரர்களான முஸ்லிம் என்று அழைக்கப்படுகின்ற ஆலிம்களின் குழப்பத்தின் அந்த திட்டங்களையும் நீங்கள் எதிர் கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கை செய்தார்கள். உங்கள் முன்னாலும் ஒரு எதிரி இருப்பார். உங்களுக்கு பின்னாலும் ஒரு எதிரி இருப்பார். மேலும் எல்லாபுறமிருந்தும் உங்கள் மீது தாக்குதல் தொடுக்கப்படும். உங்களை நிராகரிப்பவர்கள் பொய்யர்கள் என்று அழைப்பர். மேலும் உங்களுடைய தப்லீக்கின் தாக்கத்தில் வந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதை விட சிறந்தது, நீங்கள் மார்க்கத்தை விட்டு விட்டு ஆரியர்களாக, பிரம்ம சமாஜ சார்ந்தவர்களாக, அல்லது கிறிஸ்த்தவராக ஆகிவிடுங்கள். அது சிறந்தது என்பர். ஆனால் இந்த அஹ்மதிகள் மூலமாக ஏகத்துவத்தின் கலிமாவை அவர்கள் கூறக்கூடாது என்பார்கள்.

எவ்வாறு இருப்பினும், ஒருபுறம் அன்னார் (ரலி) உலகியல் ஆபத்துகள் தொடர்பாக எச்சரித்தார்கள். அதேநேரம் இறைவனுடைய வல்லமை மற்றும் அவனுடைய கம்பீரத்தின் வரைபடத்தை எவ்வாறு வரைந்தார்கள் என்றால் உள்ளம் இறையச்சத்தால் நிறைந்தது. மேலும் உலக வாழ்க்கை மற்றும் உலக சுகபோகங்களில் இருந்து உள்ளம் வெளியேறியது. மேலும், அன்னாருடைய உரைகளை கேட்கின்ற ஒவ்வொருவரும் மேலும், அன்னாருடைய அறிவிப்புகளை படிக்கின்ற ஒவ்வொருவரும் உள விருப்பத்துடனும், ஆர்வத்துடனும் அர்ப்பணம் ஆகுவதற்கு தங்களுடைய வாழ்க்கை மற்றும் அனைத்து வாழ்வாதாரத்தையும் தொண்டிற்காக முன் வைத்தார்கள்.

இத்தருணத்தில் அன்னார் (ரலி) ஜமாஅத்தின் முன்பு எவ்வாறான பொருள் தியாகத்திற்கான எதிர்பார்ப்பை வைத்திருந்தார்கள் என்றால், அதில் மிக உயரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தயாராகி நின்றார்கள். இது தொடர்பாக ஹஸ்ரத் ஷேக் முஹம்மது அஹ்மது சாஹிப் பி.ஏ.எல்.எல்.பி அவர்களுடைய அறிவிப்பிலிருந்து நாம் புரிந்து கொள்ளலாம்.

அதை கீழே தருகின்றோம். ஹஸ்ரத் ஷேக் ஸாஹிப் கூறுகின்றார்கள்:

1923 ஆண்டு மஜ்லிஸே முஷாவரத்தில் நான் கலந்து கொண்டேன். ஹுஸூர் அவர்கள் ஷுத்தி இயக்கம் தொடர்பாக உரை நிகழ்த்தினார்கள். ஒரு தருணத்தில் கூறினார்கள்: ஆரிய சமுதாயம் தங்களுடைய செல்வங்களை வைத்துக் கொண்டு ஷுத்தி இயக்கத்தை வெற்றிகரமாக ஆக்க விரும்புகின்றது. என்னுடைய கணிப்பு நம்முடைய ஜமாஅத்தின் மொத்த சொத்துகளின் மதிப்பு ஏறக்குறைய இரண்டு கோடி ரூபாய் இருக்கும். என்னுடைய ஜமாஅத் இந்த அனைத்து சொத்துகள் மற்றும் செல்வங்களை இந்த ஷுத்தி இயக்கத்திற்கு எதிராக தியாகம் செய்வதற்கு ஒருபோதும் பின்வாங்காது.

இந்த விஷயம் ஹுஸூர் அவர்களின் மனவலிமையை நிரூபிக்கின்றது. மேலும் ஜமாஅத்திற்கு இவ்வாறான முறையில் தர்பிய்யத் கொடுத்ததையும் நிரூபிக்கின்றது. அதாவது ஜமாஅத் மகிழ்ச்சியுடன் தம்முடைய அனைத்தையும் தியாகம் செய்துவிடும் என்பதில் உறுதியாக இருந்தது.

எனவே இதற்கு பிறகு நடந்த சம்பவங்கள் سَمِعْنَا وَأَطَعْنَا (நாங்கள் செவியேற்றோம். மேலும் நாங்கள் கட்டுப்பட்டு விட்டோம்.) என்ற கட்டுப்படுதலை நிரூபிக்க கூடியதாக இருந்தன.

ஹுஸூர் (ரலி) அவர்களின் உரையின் இந்தப் பகுதி எங்காவது வெளியிடப்பட்டதா? அல்லது பதிவு செய்யப்பட்டதா? என்பது எனக்கு தெரியாது. எனக்கு நன்றாக ஞாபகம் உள்ளது.

இந்த வழிகாட்டலை பின்பற்றுவதற்காக எத்தனை குழுவினர்கள் அங்கு அனுப்பப்பட்டிருந்தனரோ அவர்கள் அனைத்தும் நேர்த்தியான மற்றும் வியப்பைத் தரக்கூடிய முன்மாதிரியை வெளிப்படுத்தினர். மேலும், தியாகத்தின் உயர் தரமான உதாரணங்களை நிலைநாட்டினார்கள். அவை அனைத்தும் ஆரம்பகால முஸ்லிம்களை நமக்கு நினைவூட்டக்கூடியதாக இருந்தன.

எவ்வாறு இருப்பினும், முஜாஹித்கள் 100 சதவிகிதம் தங்களுடைய செலவுகளை தாமே நிவர்த்தி செய்தார்கள். இருப்பினும், இந்த செலவினங்கள் இல்லாமல் முஜாஹித்கள் பணி செய்யும் இடத்தில் தங்களுடைய தேவைகளை முழுமைபடுத்த வேண்டியது இருந்தது. பிரசுரங்கள் வெளியிடுவது, தேவை ஏற்பட்டால் வழக்குகளை தொடர்வது, அரசாங்க அதிகாரிகளுடன் தொடர்பு ஏற்படுத்துவது என இந்த பணிகளை செய்வதற்கு ஒரு மிகப் பெரிய தொகைக்கான அவசியம் இருந்தது. இந்த காரணத்தினால் தான், அன்னார் (ரலி) ஜமாஅத்தின் முன்பு ஐம்பதாயிரம் ரூபாய் சந்தாவிற்கான அறிவிப்பை செய்திருந்தார்கள். இந்த அறிவிப்பின் மூலமாகவும் ஜமாஅத் வியப்பபைத் தரக்கூடிய தியாகங்களை முன் வைத்தது. மேலும் சிறிது காலத்திலேயே இந்த விண்ணப்பம் முழுமை செய்யப்பட்டு உலகத்தை வியப்பில் ஆழ்த்திவிட்டது. அந்தக் காலத்தில் இந்த பொருளாதார அறிவிப்பு ஒரு பெரிய தேவையாக கருதப்பட்டது. அதாவது, இந்தியாவினுடைய அஹ்மதி அல்லாத மேலும் முஸ்லிம் அல்லாத பத்திரிகைகளும் இந்த விஷயத்தை பதிவு செய்தன. பார்வைகள் அனைத்தும் இவர்கள் பக்கம் திரும்பின. இந்த சிறிய ஜமாஅத் இவ்வளவு பெரிய தேவையை முழுமை செய்ய முடியுமா? அல்லது முடியாதா? ஜமாஅத்தை

பார்த்தோமேயானால் எந்த சந்தேகமுமின்றி, இது ஒரு மிகப் பெரிய விண்ணப்பம் ஆகும். ஒரு சாதாரண உறுதியும், தைரியமும் கொண்ட மனிதனால் இதை சிந்தித்து கூட பார்க்க முடியாது. மேலும் இந்த ஒரு சிறிய ஏழையான ஜமாஅத் இவ்வளவு பெரிய தியாகத்தை செய்ய முடியுமா? ஆனால் உலகம் வியப்புடன் பார்த்தது. ஜமாஅத் எல்லாவிதத்திலும் அன்னாருக்கு ஒத்துழைப்பு நல்கியது. மேலும், ஒவ்வொரு ஓசைக்கும் லெப்பைக் (தயாராக உள்ளோம்) என்று கூறியது. வெறும் தியாகத்தை மட்டும் முன்வைக்கவில்லை. மாறாக, எந்த அளவு கம்பீரமாகவும், பற்றுடனும் ஈமானின் உறுதிப்பாட்டுடனும் முன் வந்தது என்றால் அது தொடர்பாக நாம் பார்க்கும்போது கண்கள் கண்ணீரால் நிறைந்துவிடுகின்றன. மேலும், உள்ளத்தின் ஆழத்திலிருந்து தானாகவே அந்த முஜாஹித்களுக்காக துஆ எழுகின்றது.

(அல்ஃபஸ்ல், 15-மார்ச், 1923- பக்கம் 11)

அவர்களிடம் கொடுப்பதற்கு ஒன்றும் இல்லை. அவர்கள் தங்களுடைய வீடு, நிலம் அல்லது பொருட்களை விற்று அந்த ஜிஹாதில் பங்கு பெற்றார்கள். இதற்கு பல உதாரணங்களை கொடுக்க முடியும்.

டாக்டர் மன்ஸூர் அஹ்மது சாஹிப் அவர்களிடம் ஒரு எருமை மாடு தான் இருந்தது. அதையும் அவர் கிடைத்த விலைக்கு விற்பனை செய்து விட்டார். மேலும் இந்த வியாபாரம் நஷ்டமான வியாபாரமாகத் தான் இருந்தது. குறித்த நேரத்தில் வாடிக்கையாளர் கிடைத்துவிட்டார் என்று மிகவும் மகிழ்ச்சியுடன் கூறிவந்தார்.

இன்னும் சில ஏழைகள் கடிதம் மூலம் அனுமதி பெற்றார்கள். அதாவது எங்களிடம் என்ன இருந்ததோ அதனை விற்பனை செய்து பயணத்திற்காகவும், அந்த ஜிஹாதில் பங்கு பெறுவதற்காகவும் தயாராகி விடுவோம் என்று அவர்கள் கூறினார்கள்.

ஸேரா ஃபிரோஸ்பூரைச் சார்ந்த ஓர் ஏழை நண்பர் அலி ஷேர் ஸாஹிப் அவர்கள் ஹுஸூர் (ரலி) அவர்களுக்கு எழுதினார்கள்:

தங்களுடைய கட்டளையை கேட்டேன். நான் ஏழையாவேன். ஹுஸூர் (ரலி) அவர்களின் நிபந்தனைகளின் படி செயல்படுவதற்கு நான் தகுதியற்றவனாக உள்ளேன். எனது நிலை பரிதாபாக உள்ளது. என் மீது 40 ரூபாய் கடன் உள்ளது. ஆனால், ஒரு வீடு உள்ளது. தாங்கள் கட்டளை வழங்கினால் அதை விற்பனை செய்து அல்லது அடமானம் வைத்து இந்த மைதானத்திற்கு விரைவாக சென்று விடுவேன்.

எளியவன்,
அலி ஷேர்,
ஸேரா ஃபிரோஸ்பூர்.

(கார்ஸார் ஷூத்தி, நூலாசிரியர் மாஸ்டர் முகம்மது ஷஃபீ சாகிப் அஸ்லம், பக்கம்-45)

பெர்லின் பள்ளிவாசலின் சந்தாவின் பொறுப்பு இருந்தபோதிலும் பெண்களும் மிகவும் ஆர்வத்துடன் தங்களுடைய ஆடைகள் மற்றும் துப்பட்டா போன்றவற்றை மல்கானா சகோதரிகளுக்காக அன்பளிப்பாக அனுப்பி வைத்தார்கள். சிறிய பெண் பிள்ளைகளும் இந்த நன்மையான காரியத்தில் இணைந்தார்கள். நம்முடைய சகோதரி அமத்துல் கய்யூம் சாஹிபா அதாவது அவர் பாகிஸ்தான் அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சர் எம் எம் அஹ்மது சாஹிப் அவர்களின் மனைவி ஆவார். அந்த நாட்களில் ஆறு வயது தான்; அவர்களுக்கு இருக்கும். அவர்களும் தம்முடைய ஒரு சின்ன சால்வையை கொடுத்து மல்கானாவின் ஏதாவது ஒரு சிறுமிக்கு வழங்கிவிடுங்கள் என்று கூறினார்கள். பொதுவாக, மற்ற அஹ்மதி பெண் பிள்ளைகளின் நிலையும் இவ்வாறுதான் இருந்தது. சின்னச் சின்ன குழந்தைகள் கூட தங்களுடைய அமர்வுகளில் மல்கானா தொடர்பாக பேச ஆரம்பித்தார்கள். அஹ்மதி பெண்களின் ஜிஹாது செய்வதற்கான விருப்பம் இந்த எல்லைக்குள் மட்டும் இருக்கவில்லை. மாறாக, செல்வம், ஆபரணம் ஆகியவை மூலமாக முஜாஹித்களுக்கு உதவி செய்தார்கள். ஏதாவது ஒரு வழியில் அந்த இடத்திற்கு நாமும் சென்றுவிட வேண்டும். இந்த மாபெரும் இஸ்லாமிய ஜிஹாதில் பங்கு பெற வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்கள் இருந்தார்கள்.

சகோதரி உமர் பிபி அவர்கள் ஆக்ராவிலிருந்து ஹுஸூர் (ரலி) அவர்களுக்கு எழுதினார்கள்:

ஹுஸூர் நான் திருக்குர்ஆன் ஓத மட்டும் அறிந்திருக்கின்றேன். மேலும் உருது கொஞ்சம் தெரியும். …….. முஸ்லிம்கள் முர்தத் ஆகிக் கொண்டிருக்கின்றனர். மேலும், ஹுஸூர்! தாங்கள் எனக்கு அனுமதி வழங்கினீர்கள் என்றால் உடனடியாக தயாராகிவிடுவேன். சிறிதும் தாமதிக்க மாட்டேன். இறைவன் மீது சத்தியம் செய்து கூறுகிறேன். எல்லா கஷ்டங்களையும் சகித்துக் கொள்ள தயாராக இருக்கின்றனே.

(கார்ஸார் ஷூத்தி-பக்கம் 46)

அமத்துர் ரஹ்மான் ஸாஹிபா அவர்கள் தம்முடைய ஆர்வத்தை இவ்வாறு வெளிப்படுத்தினார்கள்:

ஹுஸூர் எனது தந்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மீது மிகவும் அன்பு கொண்டவர். இந்த உலகில் இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகளை அன்னார் விட்டுச் சென்றுள்ளார்கள். என்னுடைய இரண்டு சகோதரர்கள் அப்துர் ரஹீம் மற்றும் அப்துல்லாஹ் ஹுஸூர் (ரலி) அவர்களின் கட்டளையின் கீழ் பணி செய்து கொண்டிருக்கின்றார்கள். இந்த எளியவளின் உள்ளமும் துடித்துக் கொண்டிருக்கிறது. நானும் மூன்று மாதத்திற்காக வாழ்க்கையை அர்பணிக்க தயாராக உள்ளேன். (கார்ஸார் ஷூத்தி, பக்கம் 46,47)

ஷூத்தி இயக்கத்தின் காலகட்டத்தில் ஜமாஅத் எந்த அர்ப்பணிப்புடன் முன்னால் நின்றது என்றால், உத்திரபிரதேசத்தின் பல்வேறு தாக்கங்களுக்கு உள்ளான மாவட்டங்களில் ஆரிய சமாஜத்தை எதிர் கொண்டது. ஒரு நீண்ட மேலும் ஆர்வத்தை தூண்டக்கூடிய வரலாறு இருக்கின்றது. அதனுடைய உண்மையான தொடர்பு அஹ்மதிய்யத்தின் வரலாற்றுடன் இணைந்து இருக்கின்றது. மேலும் ஓர்அளவிற்குதான் அஹ்மதிய்யா வரலாற்றிலிருந்து நம்மால் விவரிக்க முடியும். நம்முடைய பார்வை இப்பொழுது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு இந்த இயக்கத்துடன் நேரடியாக இருந்த தொடர்பு மற்றும் திறமை சார்ந்ததாகும்.

அன்னார் (ரலி) ஒரு வெற்றி பெற்ற படை வீரரைப் போன்று அந்த ஷூத்தி இயக்கத்திற்கு எதிராக வழி நடத்திக் கொண்டிருந்தார்கள். மேலும் எல்லா மைதானத்திலும் வெற்றி பெற்றவராகவும், கம்பீரம் படைத்தவராகவும் திகழ்ந்தார்கள். இது குறித்து பின்னர் பேசப்படும்.

இங்கு தற்போது சில விஷயங்களை மட்டும் நான் முன்வைக்கின்றேன். அதாவது, கிலாஃபத் அறிவிப்பின் காலத்தில் அன்னாருடைய பணி மற்றும் ஷூத்தீ இயக்கத்தின் காலகட்டத்தில் அன்னாருடைய பணி இரண்டிலும் வித்தியாசம் தென்படுகிறது. அது என்னவென்றால், அந்த காலத்தில் அன்னார் குறித்த நேரத்தில் எச்சரிக்கை செய்து, மிகவும் உயர்ந்த ஆலோசனைகளை வழங்கி தமது கடமைகளை நிறைவேற்றினார்கள்.

இருப்பினும் சூழல் எவ்வாறானதாக இருந்தது என்றால், செயல் களத்தில் ஒரு வெற்றி பெற்ற தளபதியைப் போன்று அன்னாருடைய அறிமுகம் இஸ்லாமிய சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கவில்லை. ஷூத்தி இயக்கம் அதற்கான வாய்ப்பை அன்னாருக்கு வழங்கியது. மேலும், அன்னாருக்கு கண்ணியமிக்க இறைவன் புறமிருந்து அதற்கான நற்பேறு கிடைத்தது. அதாவது, அன்னாருடைய ஆலோசனையின் உண்மைத்துவம் அதனுடைய மகத்துவம் மற்றும் மதிப்பு செயல் களத்தில் சரியானதாக இருந்தது. அதாவது, உலகம் ஒரு புது வடிவில் பொதுவான ஆர்வம் மற்றும் ஆவேசத்தில் வெளிப்பட ஆரம்பித்தது. இந்த சந்தர்பத்தில் அன்னாருடைய வழிநடத்தும் திறமை உலகின் முன் வந்தது. அதாவது ஜமாஅத் மிகவும் பொருளாதார சிக்கலில் சிக்கிக் கொண்டிருந்தது. அப்பொழுது அன்னார் (ரலி) மேலும் பொருளாதார சுமையை அவர்கள் மீது சுமத்துவதற்கு ஒருபோதும் தயங்கவில்லை. மாறாக, ஒன்றன் பின் ஒன்றாக, அறிவிப்புகளை செய்தார்கள். அது முழுமையடைவது வெளிப்படையான முறையில் சாத்தியம் இல்லை என்று தென்பட்டது. அதாவது, ஜமாஅத் தனது பணியாளர்களுக்கு மாதாந்திர ஊதியம் கொடுப்பதற்கு கூட சக்தியற்றதாக இருந்தது. பெண்களிடமிருந்து மட்டுமே ஐம்பதாயிரம் ரூபாய் வினவப்பட்டது. மேலும் எந்தவிதமான கால தாமதமும் இன்றி உடனடியாக மேலும் ஐம்பதாயிரம் ரூபாய்க்கான அறிவிப்பும் செய்யப்பட்டது. நிச்சயமாக, இது மாபெரும் துணிச்சலான பணியாகும். வெளிப்படையாக பார்த்தால் இதனுடைய விளைவு எவ்வாறு ஏற்பட்டிருக்க வேண்டும் என்றால், ஜமாஅத் இந்த விண்ணப்பங்களை முழுமைப்படுத்த முடியாமல் தோல்வியடைந்திருக்க வேண்டும். மேலும் எதிர்காலத்தில் சந்தாவை செலுத்துவதில் கவனக் குறைவு ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால், அதனுடைய விளைவு உண்மையில் இதற்கு எதிராக தென்பட்டது. பிற்காலத்தின் சூழல் இதற்கு சான்றாகும். அதாவது ஜமாஅத்தின் பொருளாதார அமைப்பின் அடித்தளம் உண்மையில் இந்த காலகட்டத்தில்தான் உறுதியாகவும், நிலை நிற்கக்கூடியதாகவும் அமைந்தது. மேலும், அந்த காலகட்டத்தில் இந்த இரண்டு அறிவிப்புகளின் விளைவு மற்றும் அதனுடைய அருட்களின் மூலமாக ஜமாஅத்தின் மீது பொருளாதார தியாகத்தின் ஆற்றல்கள் முழுவதுமாக புத்துயிர் பெற்றன. புது விடியல் வந்தது. மேலும் தன்னம்பிக்கை புது பரப்பளவை எட்டியது. மேலும் ஜமாஅத் ஒட்டு மொத்தமான முறையில் பொருளாதார தியாகத்தின் ஓர் உயர் படித்தரத்தில் நின்றது. ஸஹாபா பெருமக்களின் காலத்தை தவிர்த்து வேறு எங்குமே உலகத்தின் திரையில் இவ்வாறான உதாரணம் தென்படவில்லை.

சுருக்கம் என்னவென்றால், 1923 ஆம் ஆண்டில் உண்மையிலேயே

மல்கானா பகுதியில் ஜிஹாது மற்றும் பெர்லின் பள்ளிவாசல் தொடர்பான சந்தாவிற்கான அறிவிப்பு ஆகியவற்றின் அருளின் மூலமாக அஹ்மதிய்யா ஜமாஅத் முதல் முறையாக பொருளாதார அடிப்படையில் உறுதியானது. மேலும் இதன் மூலமாக எவ்வாறு சூழல் மாறியது என்றால், ஒரு புதிய ஜமாஅத் உருவானது. ஷூத்தி இயக்கத்திற்கு எதிராக மற்ற முஸ்லிம்களும் ஓரளவிற்கு பணி செய்தார்கள். இருப்பினும், அஹ்மதிய்யா ஜமாஅத் அதனை எதிர் கொண்ட விஷயம் தீர்ப்பு வழங்கக்கூடியதாக இருந்தது. ஆரிய சமாஜ் எனும் இந்து அமைப்பு தேசிய அளவில் தங்களுடைய புத்துயிருக்கான அறிவிப்பாகவும், வலிமை வாய்ந்த அறிவிப்பாகவும் அதனை நம்பியது. குறிப்பாக, இஸ்லாத்திற்கு எதிராக வலிமையான மற்றும் ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய விஷயமாக அது இருந்தது.

மறுபுறம், முஸ்லிம்கள் தரப்பிலிருந்து அறிவிப்பிற்கு எதிராக எவரேனும் ஒருவர் சக்தி பெற்றவராக இருந்தார் என்றால் அது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை தவிர வேறு எவருமில்லை. வேறு எவருமே இந்த அளவிற்கு அமைப்பு ரீதியாகவும் இல்லை. மேலும் எவருக்கும் இறை உதவி பெறும் வழிகாட்டியும் இருக்கவில்லை. தங்களுடைய வசதி வாய்ப்புகளை ஒன்றுதிரட்டி இந்த பணியில் இறங்குவதற்கு அவர்களிடம் ஆற்றலுமில்லை. அமைப்பும் இல்லை. தலைமையும் இல்லை. எந்தவிதமான வரையறையும் இல்லை. மேலும் பணியை தொடர்ச்சியாக செய்வதற்கான திறமையும் அவர்களிடம் இருக்கவில்லை.

எனவே அஹ்திய்யா ஜமாஅத் மட்டும்தான் முஸ்லிம்களில் அந்த ஒரு பிரிவாக இருந்தது. அது அந்த காலகட்டத்தில் உண்மையிலேயே முழு உலக இஸ்லாமியர்களின் பிரதிநிதியாக இருப்பதற்கான வாய்ப்பை பெற்றது. மேலும், எல்லா மைதானத்திலும் தம்முடைய எதிரிகளை தோல்வியுறச் செய்தது. எதுவரை என்றால், எதிரிகள் பணி செய்ய முடியாமல் தோல்வியுற்று மைதானத்திலிருந்து விரண்டோடுவதைத் தவிர வேறு எந்த வழியும் அவர்களுக்கு தென்படவில்லை.

இவை அனைத்தும் நடந்தது. ஒரு நீண்ட காலத்திற்கு முன்பு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கும் ஆரிய பண்டிதன் லேக்ராமிற்கும் இடையில் நடைபெற்ற அதே போட்டியின் ஒரு புது வடிவம் தான் இது என்பதன்பக்கம் எவருடைய சிந்தனையும் செல்லவில்லை. இந்த வாக்களிக்கப்பட்ட மகனுக்கு எதிராக அவன் ஓர் அசுத்தமான முன்னறிவிப்பை செய்தான். அவனுடைய சமுதாயமே ஒருநாள் அந்த வாக்களிக்கப்பட்ட மகனின் உயர்வு, கண்ணியத்தை உலகத்திற்கு முன்பு உரத்த குரலில் கூறும் என்று யாராவது கூறியிருக்க முடியுமா?

ஆரிய சமாஜத்தின் இறைவன் அவனுக்கு கூறினான். அந்தக் குழந்தை பிறந்தாலும் மூன்று வருடத்திற்குள் அதனுடைய அடையாளமே இல்லாமல் அழிந்து விடும். காதியானிற்கு வெளியே பிரபலம் அடைவது ஒருபுறம் இருக்கட்டும். காதியானில் கூட எவருமே அந்தப் பெயரை அறிந்தவர் இருக்க மாட்டார் என்று லேக் ராம் அறிவிப்பு செய்து கொண்டிருந்தான்.

ஆனால், அதே குழந்தை ஒருநாள் ஆரிய சமாஜத்தை திருக்குர்ஆனின் வாள் ஏந்தி கம்பீரத்துடன் எல்லா புறமும் நின்றது. அவருடைய பெயர் பிரபலம் அடைந்துவிட்டது என்பதை யார் மறுக்க முடியும்? மற்றவர்கள் இருக்கட்டும். ஆரியர்களும் வெளிப்படையாக ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும்.

இந்த மாபெரும் வழிகாட்டியின் தலைமையில் அஹ்மதிய்யா இயக்கம் ஆரிய சமாஜத்தை சார்ந்தவர்களுக்கு மிகப் பெரிய ஆபத்தை ஏற்படுத்தியது. எந்த மகன் தொடர்பாக வாதம் செய்யப்பட்டுக் கொண்டிருந்ததோ அதாவது அவருடைய கிராமத்தில் கூட அவருடைய பெயரை அறிந்தவர் எவரும் இருக்க மாட்டார்கள் என்று கூறப்பட்டது. அந்த நாள் வெகு தூரத்தில் இல்லை. அதாவது அவருடைய பெயர் அவருடைய கிராமம் அல்லது மாவட்டம் அல்லது மாநிலத்தில் மட்டுமல்ல. மாறாக, முழு இந்தியாவிலும் பிரபலமாகும். மேலும், எதிராக முன்னறிவிப்பு செய்தவரை பின்பற்றக்கூடியவர்களே அவரை பிரபலப்படுத்துவார்கள் என்பதை யார் சொல்ல முடியும்? இது ஒரு வரலாற்று உண்மையாகும். இதை ஒருபோதும் பொய்படுத்த முடியாது. இந்தியாவின் முஸ்லிம்களில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்கள் ஷூத்தீ இயக்கத்திற்கு முன்பே அறியப்பட்டிருந்தார். இருப்பினும், இந்தியாவில் வாழ்ந்து வந்த பெரும்பான்மை இந்துக்கள் அன்னாரை அறியாதவர்களாக இருந்தனர். ஷூத்தீ இயக்கம் நாடு முழுவதும் பிரபலமானது. முழு இந்தியாவிலும் அன்னார் (ரலி) பிரபலம் ஆவதற்கு அந்த இயக்கம் காரணியாக அமைந்துவிட்டது. மேலும் எதிரிகளும் அன்னாருடைய மாபெரும் வழிநடத்துதலை வெளிப்படையாக ஒப்புக் கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளானார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் வாக்களிக்கப்பட்ட மகன் தொடர்பாக முன்னறிவிப்பு செய்தார்கள். அப்பொழுது ஆரியர்கள் பக்கம் முஸ்லிம் ஆலிம்கள் இணைந்து கொண்டு அந்த முன்னறிவிப்பைக் குறித்து எள்ளி நகையாடினர். லேக்ராம் ஏளனம் செய்யும்போது முஸ்லிம் ஆலிம்கள் சப்தமிட்டு சிரிக்கும் சத்தம் தனியாக கேட்க ஆரம்பித்தது. அன்னாரை பொய்படுத்தும் விதமாக பத்திரிகைகளிலும், பிரசுரங்களிலும் வெளியிடப்பட்டபோது முஸ்லிம் எழுத்தாளர்கள் தங்களின் எழுதுகோல்கள் மூலம் அவர்களுக்கு உதவி செய்தனர். மேலும் எல்லா சந்தர்ப்பங்களிலும் இந்தியாவில் ஆரியர்கள் புறமிருந்தும், முஸ்லிம்கள் புறமிருந்தும் நவூதுபில்லாஹ் மிர்ஸா காதியானியின் முன்னறிவிப்பு பொய்யாகிவிட்டது என்று கூச்சல் எழுப்பப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால், இறைவனின் விருப்பம் வேறொன்றாக இருந்தது. அதே வாக்களிக்கப்பட்ட மகனின் கரங்களில் தோல்வியுற்றதை ஆரியர்கள் தங்கள் நாவுகளால் சாட்சி கூறும் ஒருகாலம் வரவிருந்தது. அதாவது லேக்ராம் தன்னுடைய ஒவ்வொரு கூற்றிலும் பொய்யன் ஆனான். மேலும், மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் தம்முடைய ஒவ்வொரு கூற்றிலும் உண்மையாளர் ஆவார்கள் என்பது நிரூபணமானது. மேலும் இஸ்லாமிய தலைவர்கள் அந்த வாக்களிக்கப்பட்ட மகனின் உதவியின் கீழ் நின்று கொண்டு அறிவிப்பிற்கு மேல் அறிவிப்பு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இஸ்லாத்தின் கம்பீர மிக்க அந்த நபர் களத்தில் ஆரிய எதிரிகளை தோல்வியுறச் செய்தார்கள். மேலும் லேக்ராமின் மார்க்கம் அந்த மகனின் கரங்களால் இழிவுற்றது. அவரை அழிக்க முடியவில்லையே என்ற நிராசையில் (எதிரிகளாகிய) அவர்கள் இந்த உலகத்தைவிட்டுச் சென்றுவிட்டார்கள்.

இந்த தலைப்பில் ஜமீன்தார் பத்திரிகை தன்னுடைய 24 ஜூன் 1923 ஆம் ஆண்டு வெளியீட்டில் இவ்வாறு எழுதுகின்றது:

(முஸ்லிம்கள்) மூர்தத் ஆகிய குழப்பம் தொடர்பாக பத்திரிகைகள் மூலமாக நமக்கு செய்தி கிடைத்துள்ளது. முஸ்லிம்களில் அஹ்மதிய்யா ஜமாஅத் இஸ்லாத்திற்கு விலை மதிப்பில்லா தொண்டாற்றுகின்றது. எந்தத் தொண்டுகளிலும் குறைவில்லாமலும், நல்லெண்ணத்துடனும், இறைவன் மீது நம்பிக்கை வைத்தவாறும் செயல்பட்டு இருக்கின்றது. ஒருவேளை இந்தியாவின் தற்போதைய சூழலின் உதாரணத்தை பார்த்தோமேயானால் அந்தத் தொண்டு கண்ணியத்திற்குரியதும், மதிக்கத் தக்கதுமாக இருக்கின்றது. இதிலிருந்து தெளிவாக தெரிகின்றது. நம்முடைய பிரபலமான பீர்கள் தலைவர்கள் உணர்ச்சி இல்லாமல் அசைவில்லாமல் இருக்கின்றார்கள். அங்கோ உறுதி வாய்ந்த ஜமாஅத் மாபெரும் தொண்டை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது. (ஜமீன்தார் பத்திரிகை, 24 ஜூன் 1923, அட்வகேட் பை கோர்ட், லாகூரின் ஷேக் நியாஸ் அலி அவர்களின் கூற்று)

அடுத்து, ஜூன் 29, 1923 ஆண்டு தனது வெளியீட்டில் அந்த பத்திரிகை இந்த விஷயத்தை ஒப்புக் கொண்டுள்ளது:

அதாவது, காதியானி அஹ்மதிகள் உயர்வான தொண்டை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய 100 கொள்கை பரப்புனர்கள் கூட்டமாக பல்வேறு கிராமங்களில் பணி செய்து கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் மிகச் சிறப்பான பணிகளை செய்கின்றார்கள். இந்த கொள்கை பரப்புனர்கள் எந்த விதமான சம்பளமும் இன்றி அல்லது பயணச் செலவு இல்லாமல் பணி செய்கின்றார்கள். நாம் அஹ்மதி இல்லை. இருப்பினும், அஹ்மதிகளுடைய உயர்வான பணியை புகழாமல் ஒருபோதும் இருக்க முடியாது. அஹ்மதிய்யா ஜமாஅத் எவ்வாறான உயர்வான தொண்டை செய்கின்றது என்றால் இதற்கான உதாரணம் முந்தியவர்களில் பார்ப்பது மிகவும் கடினமாகும். அவர்களில் ஒவ்வொரு கொள்கை பரப்புனரும் ஏழையாக இருந்தாலும் அல்லது வசதி படைத்தவராக இருந்தாலும் பயணம், உணவு தொடர்பாக எந்த உதவியும் பெறாமல் தொண்டின் மைதானத்தில் மூழ்கி இருக்கின்றார்கள். கடுமையான வெயில் மேலும் உஷ்ண காற்று இருந்தபோதும் தங்களுடைய தலைவருக்கு கட்டுப்பட்டு பணி செய்கின்றார்கள். (ஜமீன்தார் பத்திரிகை லாகூர் 29, 1923)

வக்கீல் அமிர்த்ஸர் பத்திரிகை எழுதுகின்றது:

இந்த விஷயத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் செயல்பாடு பாராட்டத்தக்கதாகும். அனைத்து விதமான தொந்தரவுகளும் கொடுக்கப்பட்டபோதும் இஸ்லாத்தின் கண்கள் காயப்படுவதிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக இந்த ஜமாஅத் செயல்படுகிறது. மேலும்

உட்பூசல்களை முடிவுக்குக் கொண்டுவர முஸ்லிம்களின் தலைவர்களுக்கு கவனமூட்டுகின்றது. மேலும், எல்லாவிதமான பணியும் செய்வதற்கு தயாராக இருக்கின்றது. நாம் தெளிவான விரிவான பார்வையில் அறிவிப்பு செய்கின்றோம். காதியானி அஹ்மதி ஜமாஅத் மிகச் சிறப்பான பணியைச் செய்கின்றது. (வக்கீல் அமிர்த்ஸர் பத்திரிகை 3 மே, 1923)

தஹ்ஸீபூன்னிஸ்வான் லாகூர் பத்திரிகையின் ஆசிரியர் மௌலவி மும்தாஜ் அலி சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:

அனைத்து இஸ்லாத்தின் பிரிவும் முர்தத் ஆகின்றவர்களின் மைதானத்தில் தங்களுடைய பிரதிநிதிகளை அனுப்பி கொண்டிருக்கின்றார்கள் என்பதை கேட்டேன். எந்த பிரிவுடைய கொள்கை பரப்புனர்கள் வெற்றி பெறுகின்றார்களோ அவர்களில் ஒரு பிரிவை நான் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று நினைத்தேன். ஆராய்ச்சி செய்ததில் தெரிய வந்தது. தப்லீக் பணியில் மிக அதிகமாக வெற்றி பெற்றவர்கள் அஹ்மதி முபல்லிக்கள் ஆவார்கள். எனவே தஹ்ஸீபீ சகோதரர்களுக்கு ஆட்சேபனை உள்ளதென்றால் அவர்களில் யாராவது ஒரு முபல்லிக்கின் செலவை தங்களுடைய பொறுப்பில் எடுத்துக் கொள்ளட்டும். ஆனால், அஹ்மதி பிரிவை சார்ந்தவர்கள் காஃபிர்கள் ஆவார்கள். இவர்களுடைய நிராகரிப்பு மல்கானா ராஜ்புத்துகளின் நிராகரிப்பை விட மிகவும் பெரியதாகும் என்று இதே சந்தர்ப்பத்தில் நம்முடைய ஆலிம்கள் அறிவிப்பு செய்துள்ளார்கள்.

(ரிஸாலா தஹ்ஸீபூன்னிஸ்வான் லாகூர், 2 மே-1923)

இவை முஸ்லிம் பத்திரிகைகளின் சான்றாகும். பிறகு, இந்துக்களுடைய பத்திரிகைகளுடைய சில ஒப்புதல் வாக்கு மூலங்களும் படிப்பதற்கு தகுந்ததாகும். இஸ்லாத்தை பாதுகாப்பதற்காக மிக அதிகமாக தங்களுக்கு காயத்தை ஏற்படுத்திய பிரிவு எது? என்பதை அவர்களுடைய உள்ளம் அறிந்திருந்தது. இவர்களுடைய தாக்குதல் அவர்களுடைய நெஞ்சை கிழித்தது என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள்.

ஆரிய பத்திரிகை பரேலி 1 ஏப்ரல், 1923-ஆம் ஆண்டு பதிப்பில் கூறுகின்றது:

தற்போது மல்கானா ராஜ்புத்துகளை அவர்களுடைய பழைய ராஜ்புத் கோத்திரங்களின் பக்கம் செல்வதை தடுப்பதற்காக (அதாவது முர்தத் ஆவதில் இருந்து தடுப்பதற்காக) எத்தனை இஸ்லாமிய அமைப்புகள் மற்றும் ஜமாஅத்துகள் பணி செய்கின்றனவோ அவற்றில் அஹ்மதிய்யா ஜமாஅத் காதியானின் பணி மற்றும் முயற்சி உண்மையிலேயே போற்றப்பட வேண்டியதுதான்.

இந்து தர்மம் மற்றும் சீர்திருத்த அறிவிப்புகள் என்ற நூலின் ஆசிரியரின் ஒப்புதல் வாக்குமூலம்:

ஆரிய சமாஜம் ஷுத்தீ அதாவது தூய்மைப்படுத்துதல் என்ற விஷயத்தை ஆரம்பித்துள்ளது. இவ்வாறு செய்வதனால் ஆரிய சமாஜிற்கு இஸ்லாமிய தப்லீக் பிரிவு அதாவது காதியானி பிரிவை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. வேதம் இறைவன் அருளியதாகும். மேலும் அது முதலில் இறக்கப்பட்ட வானத்தின் புத்தகமாகும் என்று ஆரிய சமாஜம் கூறுகின்றது. மறுபுறம், திருக்குர்ஆன் இறைவேதமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுன்னபிய்யீன் ஆவர்கள் என்று காதியானிகள் கூறுகின்றனர். இந்த பேச்சுகளின் விளைவு என்னவானது என்றால், எந்த ஒரு கிறிஸ்துவரும் அல்லது முஸ்லிமும் ஆரிய சமாஜ் மார்க்கத்தில் இணையவில்லை. (இந்து தர்ம் இஸ்லாஹி தஹ்ரீகேன், பக்கம், 23-24)

ஷுத்தீ இயக்கத்தின் தாக்கம் எந்த அளவிற்கு ஆழமானதாகவும், தூரமானதாகவும் இருந்ததென்றால் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மது ஸாஹிப் அவர்களின் மாபெரும் வழிகாட்டல், கம்பீரம் ஆரிய சமாஜின் தலைவர்களுடைய உள்ளத்தில் பதிந்துவிட்டது. ஷுத்தீ இயக்கம் நடந்தது. மேலும் கடந்தும் விட்டது. ஆனால், பல ஆண்டுகள் வரை ஆரிய தலைவர்களுடைய உள்ளத்தில் இந்த காயமும், ஆபத்தான அனுபவமும் ஞாபகத்தில் நின்று கொண்டே இருக்கின்றது. அது ஷுத்தீ இயக்கத்துடன் அஹ்மதிய்ய ஜமாஅத் மோதியதன் விளைவினால் அவர்களுக்கு கிடைத்ததாகும்.

எனவே, நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு டில்லியில் தேக் பத்திரிகை இவ்வாறு ஒப்புக் கொண்டுள்ளது:

எங்களுடைய சிந்தனையில் முழு உலகிலும் உள்ள முஸ்லிம்களில் மிக அதிகமாக தாக்கம் கொண்ட மற்றும் தொடர்ச்சியாக பணி செய்யும் பிரிவு அஹ்மதிய்யா ஜமாஅத் ஆகும். மேலும், நான் உண்மையாகவே கூறுகின்றேன். நம்மிடம் மிக அதிக கவனக் குறைவு உள்ளது. மேலும் இந்த ஆபத்தான ஜமாஅத்தை புரிவதற்கு நாம் முயற்சியே செய்வதே இல்லை. (தேக் பத்திரிகை, டில்லி, 25 ஜூலை-1927)

சிந்தித்துப் பாருங்கள்! சில ஆண்டுகளுக்கு முன்பு ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர்களின் வாதம் என்னவாக இருந்தது. எவ்வாறு ஆடிக் கொண்டிருந்தனர். முஸ்லிம்களை தனியாகவும், ஆதரவற்றவர்களாகவும் கருதி தங்களுடைய முழு சக்தியையும் கொண்டு தாக்கினர். தங்களுடைய தாக்குதலின் போதையில் மூழ்கியவாறு இவ்வாறு அறிவிப்பு செய்தனர்: ஷுத்தீ பணியை ஒருபோதும் நிறுத்தக்கூடாது. இந்துக்களே! உங்களிடம் நம்பிக்கை இருக்கின்றதா? முயற்சி செய்வதால் இந்த தருணம் கிடைக்கின்றது. பூமியில் முஸ்லிம் இருக்கக் கூடாது.

ஆனால், எப்போது அஹ்மதிய்யா ஜமாஅத் ஜிஹாதின் களத்தில் இறங்கியதோ ஆரிய சமாஜ் தங்களுக்கு இவர்களால் ஆபத்து என்று கூறியது. இந்த ஆபத்து சாதாரண ஆபத்து இல்லை என்பதை அவர்களின் பெரும் தலைவர்களும் ஒப்புக் கொண்டு அறிவிப்பும் செய்தனர். அதாவது, இதன் விளைவால் ஆரிய இனம் பூமியிலிருந்து அழிந்துவிடும் என்று அறிவித்தனர். எந்த மகன் இந்த பூமியிலிருந்து அழிந்துவிடுவார் என்று லேக்ராம் கூறினானோ அந்தப் பிள்ளை அவர்களுடைய சமுதாயத்திற்கு மாபெரும் ஆபத்தாக மாறிவிட்டார். மேலும் அவர்களின் முழு சமுதாயமும் அவரால் அழிந்துவிடும் என்று ஒப்புக் கொள்ளுதல் எவ்வளவு வியப்பான விஷயம்! உண்மையை விரும்புகின்றவர்களுக்கு இதில் தெளிவான சான்று இல்லையா? ஆரிய சமாஜ் தனது தோல்வியை ஒப்புக் கொள்ளுதல் என்பது சிந்திப்பவர்களுக்கு அடையாளம் இல்லையா?

(ஃபஸ்லே உமர் வரலாறு, தொகுதி 2, பக்கம் 311- 334)

தமிழாக்கம் :
மவ்லவி எம். ஷஹாபுதீன் சாகிப்

## 24-ம் பக்கத் தொடர்ச்சி...

அவருடைய அரியணைக்கு வாரிசானால் மிகவும் சிறப்பான முறையில் மார்க்கத்தை வழி நடத்துவார்.

(அல் ஹகம் நாளிதழ், ஜூலை 17, 1906)

பேஷா நாளிதழில் வெளிவந்த இந்தக் கட்டுரைக்கான பதிலை அத்தருணமே அல்ஹகம் நாளிதழின் ஆசிரியர் ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ இர்ஃபானீ ஸாஹிப் (ரலி) அவர்கள் வழங்கிவிட்டார்கள். ஆனால், ஒரு பதில் அல்லாஹ்வின் புறமிருந்து கொடுக்கப்பட வேண்டியது எஞ்சியுள்ளது. ஆக, எந்த மகன் தொடர்பாக மிர்ஸாவிற்கு பிறகு இந்த மகன் அவருடைய அரியணைக்கு வாரிசானால் மிகவும் சிறப்பான முறையில் மார்க்கத்தை வழிநடத்துவார் என்று கூறப்பட்டதோ அந்த மகனை எல்லாம் வல்ல அல்லாஹ் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இரண்டாவது கலீஃபாவாக ஆக்கி உலகிற்கு அதை வெளிப்படுத்திக் காட்டிவிட்டான். மேலும், அவர் மூலமாகத் தான் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி உலகின் மூலை முடுக்கெல்லாம் சென்றடைந்தது. அவரின் தோற்றத்தினால் சமுதாயங்கள் அருட்களைப் பெற்றது. அவரின் தோற்றத்தினால் இஸ்லாம் மார்க்கமானது மேன்மை அடைந்தது. மேலும், அல்லாஹ்வின் வார்த்தையும், உயர் தகுதியும் மக்களுக்கு வெளிப்பட்டது. அவரின் மஸீஹி ஆன்மா மற்றும் பரிசுத்த ஆவியின் அருளினாலே அதிகமானோர் நோய்களிலிருந்து குணமடைந்தார்கள். அன்னாரின் மிகுந்த புத்திக்கூர்மை மற்றும் சிந்தித்து செயல்படும் ஆற்றலில் இருந்து ஓர் உலகமே பயனடைந்தது. அவர் ஏராளமான கைதிகளின் விடுதலைக்கு காரணமாகத் திகழ்ந்தார். எதிரிகள் ,மதவெறியர்களின் எதிர்ப்புகள், சாபங்கள், தீய ஏச்சுப் பேச்சுகள், குழப்பங்கள் மற்றும் கிளர்ச்சிகள் எனும் இவை அனைத்தும் அவரைச் சூழ்ந்திருந்தபோதிலும் அந்த ஆண்மகன் விரைவாக வளர்ந்தார். பூமியின் எல்லை வரை அவரது புகழ் பரவிவிட்டது.

“எந்த விஷயங்களை அச்சிட்டு வெளியிடுவதற்காக நான் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டுள்ளேனோ அதனை வெளியிடுவேன். தீய எண்ணங்களால் நிரப்பப்பட்ட காலம் அந்த விஷயங்களை எத்தகு கீழ்த் தரமான பார்வையைக் கொண்டு பார்த்தாலும் சரியே. ஆனால், வருங்காலத்தில் அதிலிருந்து ஏராளமான மக்கள் பலன் பெறக்கூடியவர்களாக இருப்பார்கள் என்பதை நான் அறிவேன் என்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வார்த்தை எவ்வளவு தெளிவாக பூர்த்தியாகிவிட்டது என்பதை பாருங்கள்!

இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மஸீஹே உம் மீது ஆயிரக்கணக்கான கருணையும் ஆயிரக்கணக்கான ஸலாமும் உண்டாகுவதாக! நாங்கள் நீர் கூறிய அடையாளங்களுக்கு ஏற்ப அந்த முஸ்லிஹ் மவ்வூத் (வாக்களிக்கப்பட்ட சீர்திருத்த வாதி) அவர்களை அடையாம் கண்டுவிட்டோம்! மேலும் அன்னாரின் அருளுக்குரிய தோற்றத்திலிருந்து பலன் அடைந்தவாறு வெற்றி மற்றும் ஈடேற்றத்தின் வழியை அறிந்து கொண்டோம்!

தமிழாக்கம் :
மவ்லவி வி.எம். அபுல்ஹஸன்

* * * * *

# ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கு இறைவனால் வழங்கப்பட்ட திருக்குர்ஆன் ஞானமும், அன்னார் (ரலி) திருக்குர்ஆனிற்கு ஆற்றிய தொண்டுகளும்

(மாமூன் ரஷீத் தப்ரீஸ் - நாயிப் இன்சார்ஜ், அஹ்மதிய்யத்தின் வரலாறு துறை, காதியான்)

## ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கு இறைவனால் வழங்கப்பட்ட திருக்குர்ஆன் ஞானமும், திருக்குர்ஆனிற்கு ஆற்றிய தொண்டுகளும்

இறைவன் மனித இயல்பில் இந்த விஷயத்தை வைத்துள்ளான். அதாவது, மனிதன் எந்த விஷயத்தை விரும்புகின்றானோ அதனுடைய ஞானத்தை பெற அவன் எல்லா வகையிலும் ஆய்வு செய்கின்றான். நாம் திருக்குர்ஆனை பற்றி பேசினோம் என்றால், அதனை நான் நேசிக்கின்றேன் என்று வாதம் புரியக் கூடிய ஒருவர் நிச்சயமாக அதில் இருந்து இறை ஞானத்தின் குறிப்புகளை எடுக்கக்கூடியவராக இருப்பார். பிறகு திருக்குர்ஆனின் மீது அளவு கடந்த அன்பும், தூய உள்ளமும் கொண்ட ஒருவரே திருக்குர்ஆனிற்கு தொண்டாற்ற முடியும். அதுவன்றி, திருக்குர்ஆனில் இருக்கின்ற மறைவான ஆன்மீக ஞானங்களை எவராலும் பெற இயலாது.

ஆக, இதுவே திருக்குர்ஆனை நேசிக்கக்கூடிய ஒருவரின் அளவுகோல் ஆகும். ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த அளவுகோலின் அடிப்படையில் திருக்குர்ஆனை நேசிக்கக்கூடிய ஓர் உண்மை நேசராக இருந்தார்கள் என்பதற்கு காலம் சாட்சியாகும்.

வாசகர்களே! அன்பு உரக்க பேசுகின்றது. மேலும் அன்னாரின் திருக்குர்ஆன் மீதான அன்பின் விளைவாக மற்ற இஸ்லாமியர்கள் பெறமுடியாத திருக்குர்ஆனின் ஞானங்களை அன்னார் (ரலி) மூலம் நாம் பெற்றுள்ளோம். முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) மூலமாக மக்களின் மீது இறைவனின் வார்த்தைகள் வெளிப்படும் என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களைக் குறித்த முன்னறிவிப்பில் உள்ளது. ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுடைய வாழ்க்கையை நாம் பார்த்தோம் என்றால், அன்னார் (ரலி) 20 அல்லது 21 வயதிலேயே திருக்குர்ஆன் தர்ஸ் கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள் என்பதை காண முடிகின்றது. மேலும் அன்னாருக்கு முன்னால் அப்போதைய கண்ணியமான மற்றும் மகத்துவமிக்க ஸஹாபா பெருமக்களும், திருக்குர்ஆனுடைய ஞானத்தின் வல்லுநர்களும், இந்தியாவின் முக்கிய கல்வி நிறுவனங்களில் இருந்து பயின்ற சான்றோர்கள் பலரும் இருந்தனர். இப்படிப்பட்ட கண்ணியத்திற்குரிய ஸஹாபிகள் இருக்கும்பொழுது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் 1910 ஆம் ஆண்டில் திருக்குர்ஆன் தர்ஸ் கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். பின்னர் 1913-ஆம் ஆண்டில் அன்னார் (ரலி) ஒரு நாளில் இரண்டு முறை தர்ஸ் கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். அப்பொழுது அன்னாருடைய வயது 23 ஆக இருந்தது. அன்னார் (ரலி) அவர்கள் ஃபஜர் மற்றும் லுஹர் தொழுகைக்குப் பிறகு தர்ஸ் கொடுத்து வந்தார்கள். (ஃபஸ்லே உமர் பாகம் 1, பக்கம் 301, பதிப்பு காதியான்-2005)

ஜுலை 29,1910 அன்று ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் வாழ்நாளிலேயே அன்னார் (ரலி) தம்முடைய முதல் ஜுமுஆ குத்பாவைக் கொடுத்தார்கள். அதில் அன்னார் (ரலி)

اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ

என்ற வசனத்திற்கு ஈமானை வலுவூட்டக்கூடிய தஃப்ஸீரை வழங்கினார்கள்.

இந்தியாவினுடைய பிரபலமான ஆலிமும், பிரபல எழுத்தாளருமான மௌலானா அப்துல் மஜீத் தரியா பாதி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களைப் பற்றி எழுதுகின்றார்கள்:

திருக்குர்ஆன் மற்றும் திருக்குர்ஆன் போதனைகளின் உலகளாவிய வெளியீடு மற்றும் இஸ்லாத்தின் உலகளாவிய பிரச்சாரம் ஆகியவற்றில் அவரது தீவிரமான மற்றும் உறுதியான முயற்சிகளுக்கு அல்லாஹ் அவருக்கு நற்கூலி வழங்குவானாக. அறிஞர் என்ற முறையில் அன்னார் வழங்கிச் சென்றுள்ள திருக்குர்ஆனுடைய உண்மையான ஞானத்தின் விளக்கமும், மொழியாக்கமும் உயர்ந்த மற்றும் உன்னதமான தகுதியை பெற்றிருக்கிறது. (ஃபஸ்லே உமர் வாழ்க்கை வரலாறு, பாகம் 3, பக்கம் 168)

திருக்குர்ஆன் சேவையில் அன்னாருடைய விளக்கவுரைகளை தஃப்ஸீரே கபீர் மற்றும் தஃப்ஸீரே ஸகீர் என்ற பெயரால் அஹ்மதிய்யத்தின் உலகில் அறியப்படுகிறது. அந்நியர்களின் நாவையும் அன்னாரைப் புகழத் தூண்டுகிறது.

இந்தியாவின் பிரபலமான அறிஞரான எழுத்தாளர் அல்லாமா நியாஸ் ஃபத்ஹேபூரி சாஹிப் அவர்கள் தஃப்ஸீரே கபீரை படித்தபோது அன்னாருடைய எண்ணம் மற்றும் உணர்வு இவ்வாறாக இருந்தது:

அல்லாமா நியாஸ் ஃபத்ஹேபூரி சாஹிப் மர்ஹூம் மற்றும் மக்ஃபூர் அவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுடைய தஃப்ஸீரே கபீரில் சூரா ஹூதின் விளக்கவுரையை படித்தபோது ஆவேசமடைந்து எழுந்தார்கள். மேலும் பரவச நிலையில் அதை இவ்வாறு வெளிப்படுத்தினார்கள்:

தற்பொழுது தஃப்ஸீரே கபீர் மூன்றாவது பாகம் என் முன்னால் உள்ளது. நான் இதை மிகவும் ஆழ்ந்து படிக்கின்றேன். திருக்குர்ஆனை படிப்பது அவசியமான ஒன்றாகும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த எண்ணத்தை அன்னாரே உருவாக்கினார்கள். மேலும் இந்த விளக்கவுரையை பொருத்தவரை இது உயர்தரமானதாகும். இதில் ஞானமும், பாவனையும் மிகுந்த அழகுடன் ஒத்துப்போவதாகக் காட்டப்படுகிறது. அன்னாரின் அறிவு, அன்னாரின் பரந்த பார்வை, அன்னாரின் அசாதாரண சிந்தனை, அன்னாரின் பகுத்தறிவு, இதனுடைய ஒவ்வொரு வார்த்தையிலும் தெளிவாக வெளிப்படுகிறது. நான் இது வரை ஏன் அறியாமல் இருந்தேன்? என்றும், இதனுடைய அனைத்து பாகங்களையும் நான் முன்னரே பார்த்திருக்கக்கூடாதா! என்றும் நான் வருந்துகிறேன். நேற்று சூரா ஹூத் விளக்கவுரையில் ஹஸ்ரத் லூத் (அலை) அவர்களைப் பற்றிய அன்னாருடைய எண்ணத்தை அறிந்து எனது உள்ளம் குமுறியது. மேலும் கட்டுப்பாட்டை இழந்து நான் இந்தக் கடிதத்தை எழுதும் நிர்பந்தத்திற்கு ஆளானேன். அன்னார் هٰٓؤُلَآءِ بَنَاتِيْ என்ற வசனததிற்கு விளக்கம் அளிக்கும்போது பொதுவான விரிவுரையாளர்களை விட மாறுபட்ட விவாதத்தை எடுத்து வைத்த விதம் மிக அருமையாக இருந்தது. அதனை முழுமையாக பாராட்டுவது எனது சக்திக்கு அப்பாற்பட்டது. இறைவன் அன்னாரை நீண்ட காலம் நலமுடன் வைப்பானாக. (அய்ஸன், பக்கம்-163)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கு இறைவனின் முன்னறிவிப்பிற்கு ஏற்ப திருக்குர்ஆனின் ஞானங்களை இறைவனே கற்றுக் கொடுத்தான். சிறுவயதிலிருந்தே அன்னாருக்கு சிறுவயதிலிருந்தே கற்பிக்கத் தொடங்கினான்.

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் சிறுவனாக இருந்தபோது ஒரு கனவு கண்டேன். நான் கிழக்கு நோக்கி நின்று கொண்டிருந்தேன். எனக்கு முன்னால் ஒரு பரந்த மைதானம் இருந்தது. அந்த மைதானத்தில் பாத்திரத்தை உருட்டுவதால் ஏற்படும் சப்தத்தை போன்று ஒரு சப்தம் உருவெடுத்தது. அந்த சப்தம் காற்றில் பரவியது. அது காற்று முழுவதும் பரவிவிட்டதாக தோன்றியது. மேலும் அதிலிருந்து சித்திரங்களின் சதுரங்களை போன்று ஒரு சதுரம் உருவாகியது. இறுதியில் அந்த வண்ணம் பிரகாசமாகி ஒரு சித்திரமானது. அந்த சித்திரத்தில் அசைவு உருவானது. அது ஒரு உயிருள்ள இருப்பாக மாறியது. அது ஒரு வானவர் என்று நான் எண்ணினேன். அந்த வானவர் என்னைப் பார்த்து நான் உமக்கு சூரா ஃபாத்திஹாவுடைய விளக்கவுரையை கற்பிக்கட்டுமா? என்று கேட்டார். அதற்கு நான் கட்டாயமாக எனக்கு கற்பியுங்கள் என்று கூறினேன். பின்னர், அந்த வானவர், எனக்கு சூரா ஃபாத்திஹாவுடைய விளக்கவுரையை கற்பிக்கத் தொடங்கினார். எதுவரை என்றால்

اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ

என்ற வசனத்தை அடைந்தபோது அவர் என்னிடம் கூறினார்:

இந்த வசனம் வரை மட்டும்தான் விளக்கவுரைகள் இப்பொழுது வரை எழுதப்பட்டுள்ளன. இதற்கு பிறகுள்ள வசனத்திற்கு எந்த விளக்கவுரையும் இதுவரை எழுதப்படவில்லை. பிறகு, அவர் என்னிடம் இதற்கு பிறகு உள்ள வசனங்களுக்கும் உமக்கு தஃப்ஸீர்

கற்பிக்கட்டுமா? என்று கேட்டார். நான் சரி என்று கூறினேன். அதன் பேரில் வானவர் எனக்கு اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ என்ற வசனம் மற்றும் அதற்குப் பிறகு உள்ள வசனங்களின் தஃப்ஸீரையும் கற்பிக்க தொடங்கினார். அவர் முடித்தவுடன் எனது கண்கள் விழித்துவிட்டன. நான் கண் விழித்த உடன் எனக்கு இந்த விளக்கவுரையில் ஒன்றிரண்டு விஷயங்களே நினைவில் இருந்ததை உணர்ந்தேன். ஆனால் பிறகு உடனடியாக நான் தூங்கிவிட்டேன். பின்னர், எழுந்தவுடன் தஃப்ஸீரின் எந்த ஒரு பகுதியும் எனக்கு நினைவில் இல்லை. சிறிது காலத்திற்கு பிறகு எனக்கு ஒரு நிகழ்ச்சியில் சூரா ஃபாத்திஹாவை பற்றி சிலவற்றை பேச வேண்டியது இருந்தது. புதிய, புதிய அர்த்தங்கள் என்னுடைய அறிவில் இறங்கிக் கொண்டிருந்தன என்பதை நான் உணர்ந்தேன்......

அப்போது இருந்து இன்று வரை எப்பொழுதும் இந்த சூராவின் புதிய, புதிய அர்த்தங்கள் எனக்கு கற்பிக்கப்படுகின்றன. அதிலிருந்து நூற்றுக்கணக்கானவைகளை பல நூல்கள் மற்றும் உரைகளில் நான் கூறிவிட்டேன். அதற்குப் பிறகும் கூட இந்த புதையல் காலியாகவில்லை. (தஃப்ஸீரே கபீர் சூரா ஃபாத்திஹா, பக்கம்-6)

மற்றொரு சந்தர்ப்பத்தில் அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

இறைவன் தன்னுடைய அருளினால், வானவர்களை என்னுடைய கல்விக்காக அனுப்பினான். எந்த மனிதனாலும் எண்ணிப் பார்க்கவோ, யூகித்துப் பார்க்கவோ முடியாத அளவு திருக்குர்ஆனின் ஞானங்களை அவன் எனக்கு கற்றுத் தந்துள்ளான். எனது உள்ளத்தில் வெளிப்பட்ட ஆன்மீகத்தின் ஊற்றாக இருக்கக் கூடிய இறைவன் அளித்த அந்த ஞானங்கள் என்னுடைய எண்ணமோ அல்லது யூகமோ அல்ல. மாறாக, அவை எப்படிப்பட்ட உண்மையான மற்றும் உறுதியான ஞானம் என்றால், இந்த உலகில் இறைவன் எனக்கு திருக்குர்ஆன் ஞானங்களை கற்பித்தான் என்று வாதம் புரியக் கூடிய ஒருவர் இருந்தால் அவரை எதிர்க்க எப்போதும் நான் தயாராக இருக்கின்றேன் என்று நான் முழு உலகிற்கும் சவால் விடுகின்றேன். எனினும், முழு உலகிலும் இறைவனிடமிருந்து திருக்குர்ஆனின் ஞானங்களைப் பெற்றவர் என்று என்னைத் தவிர வேறு யாருமில்லை என்பதை நான் அறிவேன்.

(ஃபஸ்லே உமர் வாழ்க்கை வரலாறு, பாகம் 3, பக்கம் -138)

அன்னாருக்கு இறைவன் வழங்கிய திருக்குர்ஆனின் ஆன்மீக ஞானத்தைக் கொண்டே அஹ்மதிய்யத்தின் எதிரிகளுக்கு திருக்குர்ஆனின் விளக்கவுரை எழுதுவதற்கான சவால் விடுத்தார்கள்.

மேலும் கூறுகின்றார்கள்:

வாருங்கள்! எதிர்எதிரே அமர்ந்து திருக்குர்ஆனுடைய ஏதாவது ஒரு வசனத்திற்கோ அல்லது ருகூவிற்கோ விளக்கவுரை எழுதலாம். எவருக்கு இறைவன் ஞானங்கள் மற்றும் உண்மைகளின் நதியை ஓடச் செய்கின்றான். மேலும் எவருக்கு இறைவன் ஞானங்களின் கடலை தருகின்றான் என்பதை பார்ப்போம்.

அவர்களின் பார்வையில் நான் மூடனாவேன். குறைமதி கொண்டவன். மேலும் குழந்தையாவேன். அனுபவமற்றவன் ஆவேன். பின்னர், அவர்களுக்கு என்னை எதிர்ப்பதில் என்ன கஷ்டம் இருக்க முடியும்? அவர்கள் வீரனாக மாறி, இறைவனுடைய நூலின் மூலம் ஏன் தீர்மானிப்பதில்லை? ஏன் குள்ளநரி மற்றும் நரியைப் போன்று மறைந்திருந்து தாக்குதல் தொடுக்கின்றனர்?

(ஆண்டு மாநாடு 1919, வெளியீடு நிர்வாகி- ஷேக் ரஹ்மத்துல்லாஹ் சாஹிப்- செப்டம்பர், 1934)

எதிரிகள் இதனை ஒப்புக் கொள்ளவில்லை என்றவுடன் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எதிரிகளுக்காக கூடுதலான வசதியை ஏற்படுத்தியவாறு கூறினார்கள்:

சீட்டு குலுக்கிப் போட்டுக் கூட ஒரு வசனம் மற்றும் ஓரிடத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள் என்று நான் பலமுறை சவால் விடுத்திருந்தேன். இல்லையென்றால், எந்த வசனம் குறித்து நீங்கள் அதிகம் அனுபவம் பெற்றுள்ளீர்களோ, வேண்டுமென்றால் என்னிடம் அந்த வசனத்தை தெரிவிக்காமல் நீங்கள் எத்தனை காலம் வேண்டுமென்றாலும் சிந்தியுங்கள். பிறகு எனக்கு எதிராக வந்து அதனுடைய விளக்கவுரையை எழுதுங்கள். ஞானங்களின் கதவு என் மீது திறக்கப்படுகின்றதா அல்லது அவர் மீது திறக்கப்படுகின்றதா? என்பதை உலகம் உடனடியாக அறிந்து விடும். ஆனால், எனக்கு முன்னால் (எனக்கெதிராக) வருவதற்கு எவருக்கும் தைரியம் வரவில்லை.

(அல்ஃபஸ்ல் பத்திரிகை, 7 மார்ச்-1938)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தமது உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்தபோதும் கூட மிக ஆழ்ந்த கண்ணோட்டத்துடன் திருக்குர்ஆனுடைய விளக்கவுரையை வழங்கியுள்ளார்கள். அன்னாருக்கு திருக்குர்ஆன் மீது இருந்த அன்பு தான் திருக்குர்ஆனின் இந்த மகத்தான சேவையை செய்து காட்டியுள்ளது. அன்னாருடைய திருக்குர்ஆன் தர்ஸுகள் தஃப்ஸீரே கபீர் என்ற பெயரில் 10 பாகங்களாக வெளியிடப்பட்டது. அதுமட்டுமின்றி, தஃப்ஸீரே ஸகீர் என்ற பெயரில் திருக்குர்ஆனை மொழிபெயர்த்தது அன்னாருடைய மகத்தான பணியாகும். அன்னாருடைய திருக்குர்ஆன் விளக்கத்தில் ஒரு புதிய நிறம் தென்பட்டது. அன்னார் (ரலி), திருக்குர்ஆன் வசனங்கள் தொடர்பான முந்தைய விரிவுரையாளர்களின் தவறுகளையும், ஆட்சேபனைகளையும் எடுத்துரைத்துள்ளார்கள். தஃப்ஸீரே கபீரின் விளக்கவுரையின் போது மற்றவர்களின் ஆட்சேபனைகள் மற்றும் குற்றச்சாட்டுகளை தெளிவுபடுத்தி அதனை நிராகரித்து அதற்கு மறுப்பையும், பதிலையும் வழங்கியுள்ளார்கள். அடுத்து, அதுமட்டுமல்லாமல், அன்னாருடைய விளக்கவுரையில் சூராக்கள் மற்றும் திருக்குர்ஆனின் வசனங்களின் வரிசைகிரமம் மற்றும் பிற சூராக்களுக்கும், திருக்குர்ஆன் வசனங்களுடன் இருக்கும் தொடர்புகள் குறித்தும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. சூராக்கள் மற்றும் வசனங்கள் இறங்கியதன் பின்னணி மற்றும் திருக்குர்ஆனுடைய முன்னறிவிப்புகள் ஆகியவை விரிவாக அதில் இடம்பெற்றுள்ளன. மேலும் அந்த முன்னறிவிப்புகள் நிறைவேறியதற்கான வரலாற்று குறிப்புகளுடன் விளக்கப்பட்டுள்ளன.

சுருக்கமாக, அன்னாருடைய இந்த மகத்தான பணி உலகம் இருக்கும் வரை அன்னாருடைய இந்த மகத்தான சேவையை கருத்தில் கொண்டு அன்னாருடைய கண்ணியமும், அந்தஸ்தும் முஸ்லிம்களின் உள்ளங்களில் என்றென்றும் நிலைபெற்றிருக்கும். எப்பொழுதும் ஒவ்வொரு அஹ்மதியின் உள்ளத்திலிருந்தும் அன்னாருக்காக இந்த துஆ வெளிப்படும்.

மார்க்கத்தின் இந்த தியாகி மீது இறைவன் கருணை காட்டுவானாக.

ஆமீன்!

தமிழாக்கம் :

மவ்லவி ஸாஹிர் ஹூஸைன்

* * * * *

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

தொலைபேசி எண் : 1800 103 2131

இந்த *TOLL FREE* எண்ணில்

போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

* * * * *

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 02-09 February 2023 Issue No. 5-6

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

14ம் பக்கத் தொடர்ச்சி...(முன்னறிவிப்பின் பின்னணி)

ஒரு வெள்ளை பிரசுரத்தில் உள்ளது. அந்த பிரசுரமானது பச்சை நிற பிரசுரம் வெளியிடப்பட்ட மூன்று ஆண்டுகளுக்கு பிறகு அச்சிடப்பட்டது. மேலும், ஷரீஃப் அனைவரையும் விட இளைய மகன் ஆவார். அவருடைய பிறப்பு தொடர்பான முன்னறிவிப்பு ஸியாவுல் ஹக் மற்றும் அன்வாருல் இஸ்லாம் ஆகிய நூல்களில் உள்ளது.

(அட்டவணை அன்ஜாமே ஆத்தம், ரூஹானீ கஸாயின், தொகுதி 11, பக்கம் 299)

அடுத்து, தர்யாகுல் குலூப் என்ற தமது நூலில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

என்னுடைய பெரிய மகனான மஹ்மூதின் பிறப்பு குறித்து நான் ஜுலை 10, 1888 அன்று ஒரு பிரசுரத்தை வெளியிட்டேன். அதன் பிறகு, டிசம்பர் 1, 188 அன்று பச்சை நிற பிரசுரத்தில் பிறக்கக்கூடிய அந்த மகனிற்கு மஹ்மூத் என்று பெயர் சூட்டப்படும் என எழுதப்பட்டிருந்தது. மேலும், அந்த பிரசுரமானது மஹ்மூத் பிறக்கும் முன்பே லட்சக்கணக்கான மனிதர்கள் வரை சென்றடைந்துவிட்டது. எனவே தற்போது வரை நம்முடைய எதிரிகளின் வீடுகளில் நூற்றுக்கணக்கில் இந்த பச்சை நிறப் பிரசுரம் உள்ளது. அதேபோன்று ஜுலை 10, 1888 அன்று வெளியான பிரசுரமும் எல்லா வீடுகளிலும் உள்ளது. இவ்வாறாக, இந்த முன்னறிவிப்பின் புகழ் பிரசுரங்கள் மூலமாக அதன் முழுமையை எட்டிவிட்டது. இந்தச் செய்தி சென்றடையாத முஸ்லிம்கள், கிறித்தவர்கள் மற்றும் இந்துக்களின் எந்த ஒரு பிரிவும் இல்லை. மேலும், இந்த செய்தி சென்றடையாத எந்த ஒரு பிரிவும், இயக்கமும் எஞ்சியிருக்கவில்லை. இறைவனின் அருள் மற்றும் கருணையினால் ஜனவரி 12, 1889 அன்று இஸ்லாமிய வருடத்திற்கு ஏற்ப ஹிஜ்ரீ 1306, 9 ஜமாதில் அவ்வல் சனிக்கிழமையன்று மஹ்மூத் பிறந்தார். (தர்யாகுல் குலூப், ரூஹானீ கஸாயின், தொகுதி 15, பக்கம் 219)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தம்முடைய நுட்பமான புத்தகமான ஹகீக்கத்துல் வஹீயிலும் பச்சை நிறப் பிரசுரத்தில் கூறப்பட்ட அந்த முன்னறிவிப்பிற்கு பொருத்தமானவர் யார்? என்பதை இவ்வாறு விளக்கமாக கூறியுள்ளார்கள்:

என்னுடைய முதல் மகன் மரணித்த பிறகு இந்த அறிவிலியான மவ்லவிகள் மற்றும் அவர்களுடைய நண்பர்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள் ஆகியோர் அவனுடைய மரணத்தின் மீது மிகவும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். ஆனால், பிப்ரவரி 20, 1888 அன்று வெளியிடப்பட்ட முன்னறிவிப்பில் சில மகன்கள் மரணிக்கவும் செய்வார்கள் என்ற செய்தி உள்ளது என்று அவர்களிடம் மீண்டும்,மீண்டும் கூறப்பட்டது. ஆக, சிறு வயதிலேயே ஏதாவது ஒரு மகன் மரணிக்க வேண்டும் என்பது அவசியமானதாக இருந்தது. அவ்வாறு இருந்தும் அவர்கள் ஆட்சேபனை செய்வதிலிருந்து விலகியிருக்கவில்லை. அப்போது எல்லாம் வல்ல இறைவன் இன்னொரு மகன் தொடர்பாக எனக்கு நற்செய்தியை வழங்கினான். அதற்கேற்ப நான் வெளியிட்ட பச்சை நிற பிரசுரத்தின் ஏழாவது பக்கத்தில் உள்ள அந்த மற்றொரு மகனின் பிறப்பை குறிக்கும் நற்செய்தி இதுவாகும்.

இரண்டாவது பஷீர் உங்களுக்கு வழங்கப்படுவார். அவருடைய இரண்டாவது பெயர் மஹ்மூத் ஆகும். அந்த மகன் (இன்றைய தினமான) செப்டம்பர் 1, 1888 ஆண்டு தற்போது வரை பிறக்கவில்லை என்றாலும் அல்லாஹ்வினுடைய வாக்குறுதிக்கேற்ப குறிப்பிட்ட அந்த காலகட்டத்திற்குள் பிறப்பார். வானம் மற்றும் பூமி மாறிவிடலாம். ஆனால், அந்த இறைவனின் வாக்குறுதிகள் மாறுவது ஒருபோதும் சாத்தியமில்லை. இந்த வரிகள் தான் பச்சை நிற பிரசுரத்தில் ஏழாம் பக்கத்தில் உள்ளது.

அதற்கேற்ப 12 ஜனவரி 1889 அன்று அந்த மகன் பிறந்தான். அவருக்கு மஹ்மூத் என்று பெயர் சூட்டப்பட்டது. தற்போது வரை அல்லாஹ்வின் அருளால் அவர் உயிருடன் இருக்கின்றார். மேலும் அவர் 17 வயதை அடைந்துள்ளார்.

(ஹகீக்கத்துல் வஹீ, ரூஹானீ கஸாயின், தொகுப்பு 22, பக்கம் 373- 374)

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஸிர்ருல் குலஃபா என்ற தமது நூலில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

நான் உங்கள் ஒரு அதிசயமான, விந்தையான சம்பவம் மற்றும் நிகழ்வைக் கூறுகிறேன். எனக்கு ஒரு சிறிய மகன் இருந்தான். அவனுடைய பெயர் பஷீர் ஆகும். எல்லாம் வல்ல அல்லாஹ் அவன் சிறு குழந்தையாக இருக்கும்போதே அவனுக்கு மரணத்தை வழங்கிவிட்டான். அப்போது அல்லாஹ் எனக்கு இல்ஹாம் மூலம் இவ்வாறு அறிவித்தான்: நாம் அந்த மகனை கருணையாக உம்மிடம் திருப்பி அனுப்பி விடுவோம். அவ்வாறே பஷீர் வருவதைப் போன்று அந்த மகனின் தாய் கனவில் காண்கிறார். மேலும், நான் உங்களை மிகவும் நேசத்துடன் சந்திப்பேன். மேலும் விரைவில் பிரிந்து போக மாட்டேன் என அவர் கூறியதையும் அவரது தாயார் கனவில் கண்டார். இந்த இல்ஹாம் மற்றும் கனவிற்கு பிறகு, அல்லாஹ் எனக்கு இரண்டாவது மகனை வழங்கினான். அப்போது நான் இவர்தான் அந்த பஷீர் என்பதையும், இறைவன் தன்னுடைய கூற்றில் உண்மையாளன் என்பதையும் அறிந்து கொண்டேன். எனவே அந்த மகனுக்கு பஷீர் என்று பெயர் சூட்டினேன். மேலும் அவரது உடல் அமைப்பில் முதலாவது பஷீருடைய சாயல் எனக்கு தென்பட்டது. ஆக, அல்லாஹ்வின் நடைமுறையானது அவன் இரண்டு நபர்களை ஒரே பெயருடன் இணைத்துள்ளான் என்பது கனவு மூலமாக உறுதியாகிவிட்டது. (ஒஸிர்ருல் குலஃபா, ரூஹானீ கஸாயின், தொகுதி 8, பக்கம்-381)

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

தற்போது உயிருடன் இருக்கின்ற என்னுடைய மகனான மஹ்மூத் அப்போது பிறந்திருக்கவில்லை. அந்நிலையில் எனக்கு ஆன்மீகக் காட்சியின் மூலம் அவருடைய பிறப்பு தொடர்பான செய்தி வழங்கப்பட்டது. மேலும், நான் பள்ளிவாசலின் சுவரில் அவருடைய பெயர் மஹ்மூத் என்று எழுதப்பட்டிருப்பதைக் கண்டேன். அப்போது நான் அந்த முன்னறிவிப்பை வெளியிடுவதற்காக பச்சை நிறத்திலான காகிதத்தில் ஒரு பிரசுரத்தை வெளியிட்டேன். அது வெளியிடப்பட்ட தேதியானது டிசம்பர் 01, 1888 ஆகும். (தர்யாகுல் குலூப், ரூஹானீ கஸாயின், தொகுதி 15, பக்கம்-214)

அடுத்து, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

நான் ஒரு பச்சை நிறப் பிரசுரத்தில் ஆயிரக்கணக்கான எதிரிகள் மற்றும் நடுநிலையாளர்கள் மத்தியில் இந்த முன்னறிவிப்பை வெளியிட்டேன். அதன்பிறகு முதல் மகன் மரணித்து 70 நாட்கள் கூட கழிந்திருக்கவில்லை. இந்த (முன்னறிவிக்கப்பட்ட) மகன் பிறந்துவிட்டான். அவருக்கு மஹ்மூத் என்று பெயர் சூட்டப்பட்டது. (ஹகீக்கத்துல் வஹீ, ரூஹானீ கஸாயின், தொகுப்பு 22, பக்கம்-227)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தம்முடைய இஃஜாஸுல் மஸீஹ் என்ற நூலில் இவ்வாறு கூறுகிறார்கள்:

நாம் (அதாவது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள்) இவ்வுலகை விட்டு பிரிந்து சென்ற பிறகு, இறுதி நாள் வரை எனக்குப் பிறகு எந்த ஒரு மஸீஹும் வரமாட்டார். மேலும் விண்ணிலிருந்து எவரும் இறங்க மாட்டார். குகையிலிருந்தும் யாரும் வெளியே வரமாட்டார். ஆனால், அந்த வாக்களிக்கப்பட்ட மகனைத் தவிர (வேறு எவரும் தோன்ற மாட்டார்). அவரைக் குறித்துக் முன்பே என் இறைவனின் சொற்களில் கூறப்பட்டுள்ளது. (இஃஜாஸுல் மஸீஹ், ரூஹானீ கஸாயின், தொகுதி 18, பக்கம் 73)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

“உமது ஜமாஅத்திற்காக உமது சந்ததியிலிருந்தே ஒரு நபரை நான் எழுப்புவேன். அவருக்கு எனது நெருக்கத்தின் மூலமாகவும், வஹீயின் மூலமாகவும் சிறப்பை வழங்குவேன். அவர் மூலமாக உண்மையானது முன்னேற்றம் அடைந்து கொண்டே செல்லும். மக்களும் உண்மையை ஏற்றுக் கொள்வார்கள் என்று இறைவன் எனக்கு அறிவித்துள்ளான். எனவே அந்த நாட்களுக்காக காத்திருங்கள். ஒவ்வொருவரும் அவருக்குரிய நேரத்தில்தான் இனங்கண்டு கொள்ளப்படுகின்றார். அந்த நேரத்திற்கு முன்னர் அவர் ஒரு சாதாரண மனிதராக தென்படுவது சாத்தியம் தான் அல்லது சில ஏமாற்றுகின்ற எண்ணங்களின் காரணமாக அவர் ஆட்சேபனைக்கு உரியவராகவும் இருக்கலாம். எவ்வாறு முழுமையான மனிதனாக மாறவிருக்கும் ஒருவர், அவர் பிறக்கும் முன்பு தாயின் கருவில் ஒரு விந்து துளியாக அல்லது ரத்தக்கட்டியாக இருக்கின்றாரோ (அதேபோன்று இறைவன் புறமிருந்து வருபவர்களின் தோற்றமும் இருக்கின்றது) (அல் வஸிய்யத், ரூஹானீ கஸாயின், தொகுதி 20,பக்கம் -306 அடிக்குறிப்பு)

1906 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா மிர்ஸா பஷீரத்தீன் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் அல் முஸ்லிஹ் மவ்வூத் (வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி) (ரலி) அவர்கள் ஒரு குடும்ப விஷயமாக லாஹூர் வருகை தந்திருந்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் பேஷா என்ற பத்திரிகையின் ஆசிரியர் முன்ஷீ மஹ்பூப் ஆலம் என்பவர் ஸாஹிப்ஸாதா அவர்கள் லாஹூர் வருகை தந்த செய்தியை வெளியிட்டவாறு ஏளனம் செய்யும் பாணியில் இவ்வாறு எழுதியுள்ளார்: பெரிய மகன் வாரிசாக இருந்தபோதிலும் (middle class) எட்டாம் வகுப்பு கூட தேர்ச்சி பெறவில்லை என அறிந்தேன். மிர்ஸாவிற்கு பிறகு இந்த மகன்

இதன் தொடர்ச்சி 21-ஆம் பக்கம்...